அ. 234.

மணிக்கொடிப் பிரசுரம் : 7

கப்சிப் தர்பார்

[ஹிட்லரின் வாழ்க்கையும் கனவுகளும்]

A.4748

★

ஆசிரியர்கள் :
சொ. விருத்தாசலம்
ந. ராமரத்னம்

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION, PAGANERI.

★

நவயுகப் பிரசுராலயம் லிமிடெட்

: : ஜி. டி. மதராஸ் : :

1939

பதிப்புரிமை] [விலை : 8 அணா

பொருளடக்கம்

—:(o):—

அத்தியாயம்	விஷயம்		பக்கம்
1.	ஆரிய புத்திரன்	....	1
2.	குலமுறை கிளத்து படலம்	....	15
3.	பிரவேசம்	....	20
4.	அதிகார ஏணி	....	24
5.	நெருப்பு! நெருப்பு!	....	30
6.	ஜெர்மன் மாதாவுக்கு ரத்த அபிஷேகம்	....	34
7.	பெர்லினில் ரத்தப் பேய் நடமாட்டம்	....	39
8.	குட்டி ஹிட்லர்கள்	....	47
9.	அண்டை வீட்டில் தீ வைத்தல்	....	54
10.	வெர்ஸேல்ஸ் கொள்ளை	....	61
11.	நிறைவேறிய முதற் கனவு	....	70
12.	ஆஸ்திரிய ஸம்ஹாரம்	....	79
13.	செக் நாட்டின் சிதைவு	....	93
14.	போலந்து—டான்ஸிக்	....	101
15.	பாக்கியுள்ள பிரதேசங்களும், பால்டிக் ஆதிக்கமும்.	....	110
16.	பிரான்ஸும் ஜெர்மனியும்	....	116
17.	காலனிகள்	....	122
18.	சர்வாதிகாரமா, ஜனநாயகமா?	....	130

YOUNG MEN'S TAMIL ASSOCIATION
PAGANERI.

என்ன செய்தி ?

உலகமெல்லாம் ஹிட்லரைப்பற்றிய செய்தி என்னவென்று
ஆவலாய்ப் பத்திரிகை பார்ப்பது போலவே,
ஹிட்லரும் உலகத்துச் செய்திகளையும்
அபிப்பிராயங்களையும் ஆவலாய்ப்
படிக்கிறான்.

A·4748·

கப்சிப் தர்பார்

---

1. ஆரிய புத்திரன்

ஹெர் அடால்ப் ஹிட்லர் ஒரு புதிர். அந்த சார்ளி சாப்ளின் மீசை, தொந்தி, கபிலச் சட்டை யூனிபாரம், (அல்லது டபிள் பிரஸ்ட் கோட்), உன்மத்த வெறிப் பேச்சு, உன்மத்த வெறியில் கொலே, இன்று ஜெர்மன் மக்களின் தெய்வமாக விளங்குகிறது. கோடிக்கணக்கான ஜெர்மனியர்கள் இப்புறச் சின்னங்களுக்கு (பயத்தினுல்!) அன்பு செலுத்துகின்றனர். நாடுகடத்தப்பட்ட, அல்லது சுய இச்சையில் வெளியேறிவிட்ட பல ஜெர்மனியர்களுக்கு அவன் வெறும் பொய்யன், ஏமாற்றுக்காரன், அதிர்ஷ்டம் பிடித்து ஆட்டி வைக்கும் வெறியன். இதுதான் புதிர்.

ஏகாங்கியாக **ரீஷ் கான்ஸ்லரில்** வசிக்கும் நாஜிக் கட்சியின் தலேவன், ஜெர்மன் தரை, கடற்படை சேனுதிபதி, மூன்ருவது ரீஷின் சிருஷ்டிகர்த்தன், 1889-ம் வருஷம் ஆஸ்திரியாவில் பிறந்தான். பிறப்பில் ஹிட்லர் ஜெர்மனியன் அல்லன். அன்னிய நாட்டில் பிறந்த, அல்லது அன்னிய ஆட்சியின் விளேவாக நெஞ்சு வரண்டுபோன மக்களிடையில் காணப்படும் தேசிய உன்மத்தம் அவனிடம் வேரூன்றியிருப்பதற்கு அவனது பிறப்பே முக்கிய காரணம்.

ஹிட்லரின் அந்தரங்க வாழ்க்கை ரொம்ப ரசமானது; விபரீதமானது. அவனது ஜீவிய சரித்திரத்தை—பூகோளப்

படத்திலிருந்து அழித்துவிடப்பட்ட ஜெர்மனியை இப்பொழுது யாவரும் கண்டு பயப்படும் ஒரு பெரிய கோர உற்பாதமாக ஆக்கிவிட்ட அவனது ஜீவிய சரித்திரத்தை—தெரிந்துகொள்ளுமுன் அவனை அறிமுகப்படுத்திக் கொள்ளுவது நல்லது.

அவனது கற்பனை அரசியல் துறையில்தான் செல்லக்கூடியது. அவன் சிறு பிராயத்தில் வியன்னு நகரில் சித்திர சாஸ்திரம் படிக்கப்போன பொழுது போட்டிருந்த சில படங்களைப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். வர்ண விஸ்தாரமோ, ‘சிறகு விரித்துப் பறக்கும்’ கற்பனையோ லவலேசமும் இல்லாத, ‘ஓவர்ஸீர் அய்யா’ போட்டுவைத்த ‘பிளான்’ மாதிரி இருக்கும் இப்படங்களே அதற்கு அத்தாட்சி. படிப்பெல்லாம் சொற்பந்தான். நாலு விஷயமும் தெரிந்த அல்லது தெரிந்து கொள்ளக் கூடிய பண்பட்ட மனம் படைத்தவன் என்று அவனைச் சொல்லமுடியாது. ஐரோப்பாவில் இன்னொரு கோடியில் அமுல் பண்ணிக் கொண்டிருக்கும் ‘கறுப்புச் சட்டைக்காரன்’ போல, அறிவாளி என்று சொல்லக்கூடிய ரகத்தில் ஹிட்லரைச் சேர்க்க முடியாது. படிப்புக் கலம் பூஜ்யம் என்றால் உயர்வு நவிற்சியல்ல. வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை ஒன்றுதான் அவனது மனத்தில் பதிந்திருக்கிறது. அதையும் முழுவதும் படித்திருக்கிருனே என்னவோ! ஜெர்மனிக்கு வெளியே (வாலிபப் பருவத்தில் ஆஸ்திரியாவில் கழித்தது தவிர) அவனுக்கு ஓரிடமும் தெரியாது; அயல் நாட்டுப் பாஷை எதும் பேசத் தெரியாது. பிரெஞ்சில் நாலைந்து வார்த்தை குளறிக் குளறிச் சொல்லத் தெரியும். அதாவது, மேல்நாட்டு ராஜதந்திரிகளிடம் காணப்படும் திறமைகளில் சிறிதேனும் அவனிட மில்லை.

ஹிட்லர் அன்னிய நாட்டு நிருபர்களுக்குப் பேட்டி யளிப்பதே ஒரு தினுசு. அவர்களிடையில் நடப்பது சம் பாஷணையல்ல; அவன் லெக்ச ரடித்துக்கொண்டு 'சாமி யாடுவான்'; நிருபர்கள் சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டு போவார்கள்; அவ்வளவுதான். எதிரிலிருப்பவர், கேள்வி கூடப் போடவேண்டாம்,—ஏதாவது ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போதும்; அவ்வளவுதான்—எல்லாம் போச்சு.

இதற்கு உதாரணமாக, ஒரு ரஸமான கதை சொல்லு வார்கள். போலந்துடன் நேச ஒப்பந்தம் செய்து கொள்ளு முன், அமெரிக்காவில் பிரபல பத்திரிகாசிரியரும் பிரசார கருமான ஒருவருக்குப் பேட்டியளித்தான் ஹிட்லர். அப்போது போலந்துப் பிரச்னையில் பேச்சு விழுந்தது.

"மெக்ஸிகோவைப் போலந்து என்று வைத்துக் கொள் ளுவோம்; டெக்ஸாஸுக்கும் ஐக்கிய அமெரிக்க மாகா ணங்களுக்கு மிடையில் இரண்டையும் பிரிக்கும்படியாக மெக்ஸிகோவின் ஒரு பகுதி நீட்டிக் கொண்டிருந்தால், பொதுவாக அதைப்பற்றி அமெரிக்கர்கள் என்ன நினைப் பார்கள்?" என்றான் ஹிட்லர்.

அமெரிக்கப் பத்திரிகாசிரியர், கிண்டலாக, "கானடா பிரான்ஸ் அல்ல என்பதுதான் பதில்" என்றாராம்.

ஹிட்லர் பிரசங்க தோரணையில் அம்மாதிரி கேள்வி போட்டான்; அமெரிக்கப் பத்திரிகாசிரியரின் கிண்டல் அவனது நிதானத்தைக் குலைத்துவிட, சில நிமிஷங்கள் வரை வாயடைத்துப் போயிற்று. மறுபடியும் தோரணையுடன் குரலெடுத்து, வேறு விஷயத்தைப் பற்றிப் பேசச் சில நிமிஷங்கள் சென்றன.

அந்தக் காலத்திலெல்லாம், ஹாஸ்யமாக, ஹிட்லர் மூன்று விஷயங்களை விடமாட்டான் என்பார்கள்: யூதர்கள், நண்பர்கள், ஆஸ்திரியா. இப்பொழுது அந்த மாதிரி வேடிக்கை பண்ண முடியாது. அவனது அந்தரங்க நண்பனுகக் கூறப்பட்ட காப்டன் **ரீம்** சமாதியி னடியில் இருக்கிருன்; 1934 ஜூன் 30-ந் தேதிக்கு முன்பே, ஹிட்லரின் துரோகங்கள் கொட்டை எழுத்தில் ரத்தக் கறையுடன் கண்களை உறுத்த ஆரம்பித்து விட்டன.

டிரகஸ்லர், பெடர், கிரகார் ஸ்ட்ராஸர் யாவரும், ஒருவர் பின் ஒருவராக, ஹிட்லருக்கு உதவி செய்துவிட்டுக் கல்லறை யடியைச் சரணுகதி யடைந்தனர். இன்னும் ஒன்று; வாயை இறுக மூடிக்கொண்டு சொன்னதற்கெல்லாம் தலை ஆட்டிக் கொண்டிருந்தால், அவனது வெறுப்பைப் பெற சந்தர்ப்பம் ஏற்படாது. மேலும் **ஸ்ட்ரீஷியர்** போன்ற நபர்களிடம் விஸ்வாசமாக நடந்துகொண்டு வருவதும் புத்திசாலித்தனமான காரியமல்ல.

ஹிட்லர் தைரியசாலியா? நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லை. 1923-ம்ஹு **மூனிக்** நகரில் **பூஷ்** (கொலை வெறிக் கூத்து) நடைபெற்ற பொழுது எதிரிகளும் துப்பாக்கியைப் பிரயோகித்தனர். குண்டுகள் தாறுமாருகப் பாய்வதைக் கண்டு, தரையில் தடால் என்று விழுந்து குப்புறப் படுத்துக்கொண்டான் ஹிட்லர். குப்புற விழுந்த வேகத்தில் தோள்பட்டைகூட முறிந்து விட்டது. நாஜிக் கட்சியை ஆதரிப்பவர்கள், "ஹிட்லர் தன் பக்கத்திலிருந்தவன் ஒருவனுடன் கையைக் கோத்து நின்ருன்; அவன் குண்டு பட்டுச் சாய்ந்துவிட ஹிட்லரும் அவனுடன் இழுக்கப் பட்டுக் கீழே விழுந்தான்" என்று சொல்லுவார்கள். ஹிட்லர் தைரியசாலி என்பதை நிரூபிக்க விரும்புகிறவர்

கள், "குண்டு வருகிறது என்று உணர்ந்ததும் குப்புறப் படுத்துக்கொள்ள வேண்டும் என்று ராணுவத்தில் இருந்த போது படித்த பாடம் மனத்தில் ஊறிப்போயிருந்ததால் அவன் அப்படிப் படுத்துக்கொண்டான்; அச்செய்கை அவன் நல்ல சோல்ஜர் என்பதையே காட்டுகிறது" என்று சமாதானம் சொல்லுவார்கள்.

அப்போது ஹிட்லருக்கு 48 வயது; ஆரோக்யமான உடம்பு படைத்தவன் என்று அவனைக் கூறமுடியாது. சமீபகாலமாக அவனது உடம்பு பருத்து வருகிறது; தொப்பை தள்ளுகிறது; சிறு குழந்தையிலேயே சுவாசா சய வியாதி, யுத்தத்தில் விஷவாயு பட்டதின் காரணமாகப் பார்வை கொஞ்சம் மங்கல்.

1935-ம் வருஷம் ஆகஸ்டில் தொண்டையில் சதை வளர்ந்ததை அப்புறப்படுத்த ஆப்பரேஷன் நடத்தவேண்டியிருந்தது. காரணம் பிரசங்க மேடையில் தலை தெறிக்கும் ஸ்தாயியில் கத்தியதே. ஆப்பரேஷன் நடந்த அடுத்த மாதம் நூரம்பர்க் கூட்டம் ஒன்றில், தனது மரணத்தைப் பற்றிக் குறிப்பிட்டு நண்பர்களைக் கொஞ்சம் திடுக்கிட வைத்தான்!

"நான் என்றைக்குக் கண்ணை மூடுவேன் என்று எனக்குத் தெரியாது; ஆனல் ஒன்றுமட்டும் நிச்சயம்; தலைவர்கள் வருவார்கள்; தலைவர்கள் சாவார்கள்; ஜெர்மனி ஜீவித்திருக்கும்; ஜெர்மனிக்கு அளிக்கப்பட்டிருக்கும் சக்தியை அதன் ராணுவம் பாதுகாக்கும்..............."

இந்தப் பிரசங்கம் பலவிதமான வதந்திகளை ஏற்படுத்தியது. ஹிட்லருக்குத் தொண்டையில் புற்றுப் புண்; அது

ரொம்ப மோசமாக் இருக்கிறது........" என்றெல்லாம் கதை கட்டி விட்டார்கள்.

1934 ஜுலை 25-ந்தேதி நாஜிகள் ஆஸ்திரிய சான்ஸலர் டால்பஸைக் கொல்லும்பொழுது பேருத் விஷாவில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். **ரீஷ்டாக்** (ஜெர்மன் சட்ட சபை) செஷன்கள் யாவும் **கிரோல் ஆபரா** (நாடக) மண்டபத்தில்தான் நடைபெற்றன; சமயங்களில் சங்கீதத்தோடு முடிவடையும். ஹிட்லருக்கு சங்கீதம் கஞ்சா மாதிரி; சில சமயங்களில் தூக்கம் வராவிட்டால், அவனது நண்பன் **ஹான்ப்ஸ்டாங்கல் (Hanfsstaengl)** அவனைத் தூங்கவைக்க வாத்தியம் வாசிக்க வேண்டியிருக்கும்.

ஹிட்லருக்குப் புஸ்தகம் பிடிக்காது. அவன் அலங்காரப் பிரியன் அல்லன்; நண்பர்களின் சல்லாபம் பிடிக்காது; குடிக்கமாட்டான்; புகை பிடிக்கமாட்டான்; அதோடு சுத்த சைவன்; ஹிட்லரை எல்லாரும் சன்யாசி என்பார்கள். அவனது சாப்பாட்டிற்கும் மூனிக் வீட்டுக்கும் கொஞ்சம் 'கன' மாகத்தான் செலவழிகிறது.

பெர்லினில் இருக்கும்பொழுது, **வில்ஹெல்ம் ஸ்டாஸ்** தெருவில் உள்ள **ரீஷ் கான்ஸ்லர்** மாளிகையில் வசிப்பான்; ஆனால் அதே தெருவில் சுமார் 20 கஜ தூரத்தில் உள்ளது அரசாங்க மாளிகை. பிரஸிடென்ட் **வான். ஹின்டன்பர்க்** அதில் வசித்தார். அதை அவன் உபயோகிக்காததின் காரணம் ஹின்டன்பர்க் நினைவைக் கூடியவரை பொதுமக்கள் மனத்திலிருந்து அகற்றுவதே. புதிய கட்டடந் தான் ஹிட்லரின் பிளான்படி அமைக்கப்பட்டிருக்கிறது. தலைவர், வெளியில் நடைபெறும் அணிவகுப்புக்களைப் பார்க்க, பிரசங்கம் செய்ய என்று ஒரு பெரிய சாளரம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்தான மண்டபத்திற் கடி

யில், வெடிகுண்டும் சிதைக்கமுடியாத ஒரு இரகசிய அறை இருப்பதாக வதந்தி.

ஹிட்லருக்கு பெர்லின் என்ருல் வேப்பங்காய். மூனிக் அல்லது **ஆல்ப்ஸ்** மலைச்சரிவில் இருக்கும் **பெர்ஷ்டஸ்ச்காடன்** என்ற இடங்களில் வசிக்கவே அவனுக்கு மிகவும் உற்சாகம். பவேரியாவில் ஒரு சிறு கிராமமான பெர்ஷ்டஸ்ச் காடனி லிருந்து ஆஸ்திரிய எல்லை வெகு தூரமில்லை. மாளிகையின் தலைவாசலில் நின்று, தன்னை விரட்டிவிட்ட தாய்நாட்டைப் பார்க்க அவனுல் இயலும்; அதில் வாழத் தவிக்கிருன் ஹிட்லர்.

ஹிட்லர் ஏகாங்கி; அதோடு வெளியுலகத் தொடர்பைக் குறைந்தபட்சஅளவில் வைத்துக் கொள்பவன்; தன்னைச் சுற்றிலும் காவலும் கட்டுப்பாடும் பேசா மடந்தையின் கோட்டை மாதிரி அமைத்துக்கொண்டிருப்பதால், பெரும்பாலும் தெரிந்துகொள்ளவேண்டிய சமாசாரங்களும் ‘வடிகட்ட’ப் படுகின்றன.

ஹிட்லர் தன் கட்சியை நிரூபிக்க, தான் கொண்ட கருத்தை முடித்துக்கொள்ள, ஒரு அஸ்திரம் வைத்திருந்தான்; அதாவது கண்ணீர். உணர்ச்சியை அணைபோட்டுத் தடுத்துவிடுவதால் கண்ணீராகப் பிய்த்துக்கொண்டு புறப்படும். முன்பு ஒரு முறை ஆட்டோ ஸ்டிரஸ்ஸரை வற்புறுத்துவதற்காக மூன்று முறை கண்ணீர் அஸ்திரத்தைப் பிரயோகித்தான். இப்பொழுது அந்த அஸ்திரத்தின் தேவையே குறைந்து விட்டது;—அதிகாரம் இருக்கிறதல்லவா!

ஹிட்லர் ராஜ்யத்திலே அவனது பழைய நண்பர்கள் அவனை “மேயின் பூஹ்ரர்” என்று அழைப்பார்கள்; இதரர்கள் “**ஹேர் ரீஷ்கான்ஸ்லர்**” என்பார்கள்.

நாஜி 'செலூட்' படி முகமன் கூறிக்கொள்வது என்றால், "ஹீல் ஹிட்லர்!" என்பார்கள். அவனும், "ஹீல் ஹிட்லர்!" என்று பதிலளிப்பான்.

("மகாத்மா காந்திகி ஜே!" என்று நாம் கோஷிக்கும் பொழுது மகாத்மாவும் நம்முடன் சேர்ந்துகொண்டு "மகாத்மா காந்திகி ஜே!" என்று கோஷமிட்டால் என்ன விசித்திரமாக இருக்குமோ அந்த நிலைதான்: தான் வேறு; தனது கற்பித ஹிட்லர் வேறு என்ற அதீத நிலைபோலும்!)

ஹிட்லருக்கு ஆஸ்திரியா என்றால், குடும்பத்தை நடத்துபவள், பெற்றுப் பெருகி யுத்தகளத்திற்காகப் புத்திரர்களைப் பெற்றுக்கொடுக்கும்,—அதாவது மற்றவர்களைக் கலியாணம் செய்துகொண்டு ஜெர்மன் வம்சத்தை விருத்தி செய்யும்—ஒரு பிராணிதான்.

"நவீன காலக் காம உன்மத்தத்தின் மோக லாகிரியிலிருந்து நமது மக்களின் வாழ்க்கை விடுவிக்கப்பட வேண்டும்," என்கிறான் ஹிட்லர் தன் சுயசரிதையில். ஹிட்லரது வாழ்க்கை அப்பழுக்கற்றது. "பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசம்" என்ற கசப்புடன் அவர்களை வெறுக்கவில்லை. "நமக்கு அவர்கள் சங்காத்தமே வேண்டாம்" என்று விலகிவிடுகிறான். ஸ்திரீகளுக்கு மரியாதை கொடுத்து விலகிவிடுவான். எத்தனையோ மேல்நாட்டு ஆரிய, அனாரிய மேனகைகள் இந்த ஜெர்மன் விசுவாமித்திரனைத் தொடர்ந்து ஓடி ஓடிக் காலோய்ந்து உட்கார்ந்து விட்டனர்.

சமயா சமயங்களில் அக்கரைச் சீமைகளிலிருந்து (அமெரிக்கா, இங்கிலாந்து) ஆரிய உற்சாகம் மிகுந்த யுவதிகள் ஹிட்லரைப் பேட்டி காண வந்துவிடுவார்கள். சில சமயங்களில் அவர்களுக்குப் பேட்டி கிடைக்கும். அப்போது சம்பாஷணை நடைபெறாது; வந்தவர்கள் அதிரடித்

ஹிட்லரின் வாசஸ்தலம்



இயற்கை அழகு மிகுந்த பவேரியாவிலுள்ள
பெர்ஷ்டஸ்ச்காடன் என்ற நகரம்.

துப் போகும்வரை பிரசங்க முழக்கம். ஸ்திரீ ஜாதியிலே ஒருத்தியை மட்டிலும் ஹிட்லருக்குப் பிடிக்கும். அவள் யார் தெரியுமா? டாக்டர் கோபல்ஸின் சிறு பெண் குழந்தை. ரீஷ் கான்ஸ்லர் மடியில் உட்கார்ந்து கொள்ளும் சுதந்திரம் அவளுக்குத்தான் உண்டு.

இந்த மாதிரி சன்யாசி போல உட்கார்ந்திருக்கும் நபரைப்பற்றி பலர் பலமாதிரி கதைப்பார்கள். அவனுடைய இச்சையே விபரீதமானது; ஆண்களைப் பின்பற்றித் திரிகிறவன் என்பார்கள். இது உண்மையா பொய்யா என்பதைக் கண்டுபிடிக்க ஜெர்மன் நிருபர்கள் பலர் வெகு நுணுக்கமாகப் புலன் விசாரித்து அவனது மௌனிக் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்திருக்கின்றனர்; அப்படி அவதூறு சொல்வதற்கு ஆதாரமே கிடையாது.

அவனது காம இச்சைகள் அறவே அடக்கப்பட்டு, பிரசங்கத் திறமையாக, தேச வெறியாகப், பரிணமித்திருக்கிறது. அவனைப்பற்றி மிகவும் நெருங்கி அறிந்தவர்கள் 'விஷய சுகமே இன்னதென் றறியாதவன்' என்கின்றனர். அது இன்னும் மறுக்கப்படவில்லை.

பணம்: இந்த விஷயத்தில் ஹிட்லரும் மற்ற எதேச்சாதிகாரிகளைவிட வேறானவன். பணத்திற்கு ஒரே உபயோகம் உண்டு என்றுதான் அவனுக்குத் தெரியும்;—அதாவது அரசியல் விவகாரம். நிதி, பொருளாதார விஷயங்களில் அவனது பரிச்சயம் பூஜ்யம் என்று சொல்லலாம்.

தற்போது அவனுக்குப் பணம் எதற்கு? சர்க்கார் அவனது தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்கிறது. 1934-ம் வருஷம் ஜூன் மாதம் முஸோலினியைச் சந்திக்கச் சென்றபொழுது ஒரு மழைக் கோட் வாங்கினான்;—அதுதான் அவனது சொந்தச் செலவு.

ஹிட்லருக்கு எதெல்லாம் இல்லை என்று கவனித்தோம்; அவனிடம் இருக்கும் சரக்கைப் பரிசோதிப்போம்.

பாரமார்த்திக வழிகளிலே ஆராய்ச்சியைச் செலுத்துகிறவர்கள், ஏகாக்கிரக சிந்தையைப் பற்றி வெகுவாகக் கேட்டிருப்பார்கள்; ஒன்றை விடாமல் பற்றி, அதையே சிந்தித்து, அதுவாகவே ஆக முயற்சித்தால் ஏதேதோ தென்படும் என்று சொல்லுவார்கள். தெய்வத்தைப் பார்க்கப் போவதற்கு மட்டிலும் அல்ல அந்த உபதேசம்; குட்டிச்சுவரேறிக் குதித்துக் குச்சு நுழைகிறவனும், பிறரை ஏமாற்றிப் பணம் பெருக்கி வாழ முயற்சிப்பவனும் அந்த உபதேசத்தைக் கடைப்பிடிக்கத்தான் வேண்டும். எதேச்சாதிகாரிகள் விஷயத்திலும் அப்படித்தான். ஹிட்லர் எதேச்சாதிகாரி. அவன் கையாளும் தந்திரங்கள் மாறும்; சொல்லுகிற விதம் மாறும்; ஆனால் 'குறி' ஒன்றுதான். மிக்க பலம் பொருந்திய ஜெர்மனியைச் சிருஷ்டிக்கவேண்டும்; அதன் மத்தகத்தில் தான் உட்கார்ந்து அங்குசத்தை உபயோகிக்க வேண்டும்; இதற்காக அவன் எந்தவிதமாகவும் தட்டுமறிப்பான்; ஆனால் அலசிப்பார்த்தால் குறி ஒன்றுதான்.

ஹிட்லர் பார்வைக்கு, (போட்டோக்களில்) தலைமட்டிலும் "உர்" என்று இருந்தாலும், கொஞ்சம் கொளகொளா உடம்பு; அதுவும் ரீஷ் கான்ஸ்லர் ஆனபின் அதிகம். மிலிட்டரி தோரணையில் 'டக்' என்று சலூட் வைக்கத் தெரியாது. சலூட் வைக்கும் பொழுதெல்லாம் கை 'கொளக்' என்று 'கோணல்' காண்பித்து நிற்கும். ஆனால் அந்த உடம்பு வெகு உறுதியானது. எதை வேண்டுமானாலும் தாங்கும்; களைப்பு, சோர்வு என்பதே கிடையாது. தேர்தல் சமயத்திலே நாளைக்குப் பத்து முப்பது பிரசங்கங்களாக, வாரக்கணக்கில் செய்தான்; ஆனால் பேச்சு முடிந்த

பின் பேட்டி காண வரும் நிருபர்கள், சிறிதும் சோர்வில்லாத, அப்பொழுதுதான் பந்தய மைதானத்திற்குக் கொண்டுவந்து விடப்பட்ட குதிரை போன்ற துடிதுடிப்பு மிகுந்த ஒருவனையே கண்டனர். 'எனக்கு ஒரு வேலை வந்தால் அதை முடித்து வைக்க எனக்குப் பலம் உண்டு' என்கிறான் அவன்.

ஆனால் நிர்வாக இலாகாவில் உட்கார்ந்து கொண்டு, நாளாவிர்த்தி வேலைகளை, ஜட்காவண்டிக் குதிரை மாதிரிப் பார்த்துக்கொண்டிருக்கத் திறமை கிடையாது. அவன் மேஜையில் எப்பொழுதும் தஸ்தவேஜுகள் சுவர் மாதிரி உயரமாகவே குவிந்திருக்கும். அவன் உத்தரவுகளும் இரண்டுங் கெட்டான் மாதிரிதான்; எப்படி வேண்டுமானாலும் அர்த்தம் செய்யலாம். ஆனால் இந்த வேலைகளையெல்லாம் பார்க்கக் கையாள் பொறுக்குவதில் அவன் சமர்த்தன்; பழைய சிவில் சர்விஸ் நிபுணர்கள் எல்லாம் அவன் கைக்குள். அரசியல் விவகாரங்களிலே 'பிளான்' போடுகிறதில் ஒண்ணாம் நம்பர் ஆசாமி. ஜெர்மன் அன்னிய நாட்டுக் கொள்கையில் அவன் செய்த மூன்று முக்கியத் தீர்மானங்கள் :—அதாவது சர்வதேச சங்கத்திலிருந்து விலகல்; ஜெர்மனியில் கட்டாய ராணுவ சேவை ஏற்படுத்தல்; ரைன்லாந்து ஆக்கிரமிப்பு—எல்லாம் வேண்டும் என்றே சனிக்கிழமை பிற்பகலுக்கு என்று நிர்ணயிக்கப்பட்டன. காரணம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை என்பதுதான்; செய்தி தாமதித்துத்தானே பரவும்: அதே மாதிரிதான், ஏதாவது கொஞ்சம் தட்டுக்கேடான விஷயங்களை, வார்த்தைப் பந்தல் போட்டுச் சமாளிப்பது என்றாலும் எப்பொழுதும் சாதாரணமாக இரவு எட்டு மணிக் கப்புறந்தான் பேசுவான்; அதனால் அன்னிய நாட்டுப் பத்திரிகைகளுக்குக் கிடைக்கும் செய்திகள் யாவும் தாறுமாறாக இருக்கும்.

ஹிட்லரின் தீர்மானங்கள் எல்லாம் ஆராய்ச்சியில் ஏற்பட்டவையல்ல. உள் மனம் சொல்லுகிறதாம்; அதாவது, 'ஏன் இப்படித் தீர்மானம் செய்தாய்?' என்ற கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாது; ஆனால் தீர்மானங்கள் யாவும் இதுவரை பிசகவில்லை. உதாரணமாக 1932-ம்வருஷம் அவனது சகாக்கள் பலர் 'பூஷ்' (மனிதவேட்டை) நடத்தும்படி வற்புறுத்தினார்கள்; சட்ட பூர்வமாகவே தனக்கு வெற்றி கிடைக்கும் என்று சொல்லி மறுத்து விட்டான். 1932-ம்வருஷம் தேர்தலில் முழுத் தோல்வி; ஜார்ஜ் ஸ்டிரஸ்ஸர் முதலிய சகாக்கள் கூட்டுக் கட்சி ஸ்தாபிக்க ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்தினார்கள்; ஆனால் மறுத்துவிட்டான்; நேராக மூன்றுவது மாதம் அவன் கைக்குள் அதிகாரம் சிக்கியது.

ஹிட்லரின் பிரசங்கத் திறமை ஒரு தனி அம்சம்; அவன் பிரசங்கம் பண்ணியே அதிகார சிகரத்தைக் கைப்பற்றினன் என்று சொல்லவேண்டும். அவன் வெறும் நாஜிக் கட்சித் தலைவனாக இருந்த பொழுது பிரசங்கம் செய்யும் முறையில் ஒருவேலை செய்வான்.

ஸ்ரீ. சத்தியமூர்த்தி அந்தக் காலத்தில், 'அவன் தோல் வெளுப்பாம் நம் தோல் கறுப்பாம்' என்ற பல்லவியை வைத்துக் கேட்கிறவர்களுக்கு ஆவேசத்தை ஊட்டியதுபோல, "ஜெர்மனியராகிய நாம்" என்பதற்கு ('வீர்') என்ற ஒரு பதத்தை உபயோகிப்பான். இந்த 'வீர்' என்ற வார்த்தை பூசாரியின் உடுக்கைப்போல உன்மத்த வெறியை யூட்டிவிடுமாம். அப்பொழுதெல்லாம் ஜெர்மனியில் இந்த 'வீர்' என்ற பதப் பிரயோகத்திற்கு அர்த்தமே கிடையாது. ஜெர்மனி ஒரு நெல்லிக்காய் மூட்டை.

ஹிட்லர் பிரசங்கத்தில் தேர்ந்த் நிபுணனின் வேலைப் பாடுகள் இரா; உச்ச ஸ்தாயியில் குரல் எறும்பொழுது ஒடிந்துவிடும்; மேலும் அவனது கை கால் அமைப்பு எல்லாம் பார்ப்பதற்கு அவலட்சணமாக இருக்குமாம்.

ஆனால், இவ்வளவு முட்டுக்கட்டைகள் இருந்தும், அவனது பிரசங்கத்தில் வெறியூட்டும் ஒரு தன்மை யமைந்திருக்கின்றது.

ஹிட்லருக்குப் பிரசங்கத்தில் எவ்வளவு நம்பிக்கை உண்டோ அதே மாதிரி, பயனட் குத்து—வெறியாட்டத்திலும் அபார நம்பிக்கை உண்டு. அவன் புயல் படை சிருஷ்டித்ததற்கே காரணம், ஊரை மிரட்டித் தன் பக்கத்தாராகும்படி செய்வதே.

1932 ஆகஸ்டில் ஹின்டன்பர்க் தன்னைச் சான்ஸலராக்குவான் என்று நினைத்தான்; அதற்கு முன் மூன்று நாள் தவணை கேட்டான். ஏனென்றால், தனது புயல் படையை நகரத்தின் மீது ஏவிவிட. ஹிட்லர் தன் சுய சரிதையை எழுதியிருக்கிறான். 'எனது போராட்டம்' என்று அதற்குப் பெயர். அதில் மிகவும் குஷியாக எழுதப் பட்ட பாகம், ரத்தம் சிந்தப்பட்ட கட்டங்களே.

ஹிட்லரின் அரசியல் சித்தாந்தத்தில் ரொம்பச் சிக்கலானவிஷயம் ஒன்றுமில்லை. **'பூஹ்ரர் பிரின்ஸிப்'** என்று ஜெர்மனியர் பெயர் சொல்லிக் கொள்ளுவார்கள். 'வீரர் வழிபாடு' என்பதுதான் அதற்கு அர்த்தம். விஷயம் என்னவென்றால், தலைவன் முதல் படிப்படியாகக் கடைசியில் நிற்கும் நபர் வரை, 'ஏன்?' என்று திரும்பிக் கேட்காது பணிந்து நடத்தல். சிகரத்தில் ஹிட்லர், அப்புறம் அதற்கடுத்தபடி, அதற்கடுத்தபடி—இம்மாதிரியாகத் தலைமைப்

பதவி, ஹிட்லர்-குஞ்சுகளாக நிற்கும் தனி நபர் வரை பரவியுள்ளது. ஜெர்மனியர் தலைவர்களுக்கு அடிபணிவதில் ஒரு தனி ஊக்கம் காட்டுகிறார்களாம். காரணம், யாவருக்கும் உள்மனத்தில் 'ஹிட்லர் மனப்பான்மை' (அதாவது அதிகாரமோகம்) ஒடுங்கிக்கிடப்பதே.

பெர்லின் தெருக்களில் சிறுவர்கள், 'சுதந்திரத்தின் மீது காறி உமிழ்கிறோம்!' என்று கோஷம் செய்து துள்ளுகிறார்கள் என்று ஸ்ரீ எட்கார் ஆன்ஸல் மௌரரார் (நியூயார்க் டைம்ஸ் பெர்லின் நிருபர்) கூறுகிறார். பணிந்து நடப்பதை, அதாவது ஒரு சோல்ஜருக்கு வேண்டியது என்று சொல்லப்படும் குணத்தை, நாட்டு மக்கள் யாவருக்கும் புகுத்திவிட்டான் ஹிட்லர்.

———

ஹிட்லருடைய மாளிகை



இங்குதான் 1938 செப்டம்பரில் ஜெர்மன்-ஆங்கில ராஜதந்திரிகள் கூடிப் பேசினர்.

2. குலமுறை கிளத்து படலம்

ஹிட்லர், ஏதோ ஒரு கிராமத்திலே, எங்கோ ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தான் என்று சொல்லுவார்கள். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.

ஆஸ்திரியாவில் **பிரன்னௌ** என்ற ஓர் ஊர்; அதில் ஒரு மூன்றடுக்கு மெத்தை வீட்டில்தான் பிறந்தான்; அவனது பெற்றோர்கள் ஏழைகள் அல்லர். அந்த மூன்றடுக்கு வீடு ரொம்பக் காலமாக ஒரு பீர்க் கடை. அதன் சொந்தக்காரன் **ஜோஸப் பொம்மர்** என்பவன். அந்த வீட்டுக்கு நாஜிக் கட்சியினர் யூனிபாரத்தின் வர்ணமான பழுப்புச் சாயம் அடிக்கப்பட்டிருக்கிறது. 1933ம் வருஷம் ஆஸ்திரிய அதிகாரிகள் அதை மூடிவிட்டார்கள்; ஸ்தல நாஜிகள் அதைத் தம் காரியாலயமாக உபயோகித்தனர்.

நமது அரசர்கள் வம்ச பாரம்பரியத்தை எட்டிப் பிடிக்கவேண்டுமென்றால், முதல் ஸ்தானத்திற்குச் சூரியனையோ சந்திரனையோ பிடித்து நிறுத்திவைக்கவேணும். ஹிட்லருக்கு அவ்வளவு தூரம் போகவேண்டாம். ஆஸ்திரியாவில் **வால்ட் வியர்ட்டல்** என்ற பிரதேசம் ஒன்று இருக்கிறது; அதில் டான்யூப் நதிப் பாசனம். இப்பொழுது அதற்கு செக்கோஸ்லோவேகியா எல்லைப்புறம் என்று சொல்லுவார்கள்.

அந்தப் பிரதேசத்து மக்கள் யாவருமே பொதுவாக ஏழைகள்; அதோடு தெய்வ பக்தியும், கல்வியின்மையும் மிகுந்தவர்கள். சுத்தமான கிணற்றுத் தவளைகள். ஒவ்வொரு ஊரும் ஒரு குடும்பம் என்று சொல்லவேண்டும். எல்லாரும் மேல் வீட்டு அண்ணாச்சியும் கீழ் வீட்டுத் தம்பியுந்தான்!

1792 பிப்ரவரியில் **சம்ஸ்பிட்டல்** என்ற ஊரில் **ஜோஹான் ஜார்ஜ் ஹீய்ட்லர்** என்ற நபர் பிறந்தான். அவன் தான் ஹிட்லருடைய பாட்டையா.

அவன் ஒரு மாவரைக்கும் மில் வைத்திருந்தவனுக்கு உதவியாளாக இருந்தான். **மேரியா அன்னு ஷிக்கிள் கிரப்பர்** என்ற ஸ்திரீக்கும் அவனுக்கும் ஏற்பட்ட சம்பந்தத்தில் 1837-ம் வருஷம் **ஸ்ட்ரோன்** என்ற கிராமத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஐந்து வருஷத்திற் கப்புறம் இந்தக் குழந்தையின் பெற்றோர்கள் கலியாணம் செய்துகொண் டார்கள். அந்தக் குழந்தைதான் ஹிட்லரின் தகப்பனார். பெற்றோரின் கலியாணம் சட்டபூர்வமானது என்று ஏற் றுக் கொள்ளப்படுவதற்கு முன் குழந்தைக்கு நாற்பது வயதாகிவிட்டது. நாற்பது வயதாகும் வரை பிள்ளை தாயார் குடும்பப் பெயரையே உபயோகித்துவந்தான். அதற் கப்பு றந்தான் அவனுக்கு **அலாயி ஹிட்லர்** என்ற பெயர் வந்தது.

ஹீய்ட்லர் என்ற பெயர் ஹிட்லர் என்று ஆனதற்குக் காரணம், அந்தக் குடும்பத்தினருக்கு எழுத்துக்கூட்ட இருக்கும் திறமையே. ஒரு நபர் **ஹூட்லர்** என்று கையெ ழுத்துப் போட்டுக்கொண்டிருக்கிறான்; ஹிட்லரின் சகோ தரி, **பாலா ஹிட்லர்** இன்றும் **ஹீய்ட்லர்** என்றுதான் கையெ ழுத்துப் போட்டுக்கொண்டிருக்கிறாள்.

அலாயி ஹிட்லருக்குத் தொழில் செருப்புத் தைப்பதும், கலியாணம் செய்துகொள்ளுவதும். அவன் மூன்று பெண் டாட்டிக்காரன். முதல் பெண்டாட்டி பெயர் **அன்னு கிளஸல்-ஹூரர்.** கொஞ்சம் பணக்காரி. சாக்தர்கள் காளி யைத் தாயாக வந்து நாயகியாக சாயுஜ்யம் அளிப்பதாக ஒரு

உருவகம் செய்துகொள்ளுவார்கள். சாக்தர்கள் எதிர்பார்க்கும் காளித் 'தொண்டை' குமாரி அன்னாள் அந்த வாலிபனுக்குச் செய்தாள். அலாயிக்குப் பதினான்கு வருஷம் மூத்தவள் அன்னாள். முதலில் படிக்கவைத்தாள்; பின்பு ஆஸ்திரிய சர்வீஸில் வேலை வாங்கிக் கொடுத்தாள்; அப்புறம் கலியாணம் செய்துகொண்டாள். 1883-ம் வருஷம் அன்னாள் செத்துப்போனாள்; ஆறு வாரம் கழித்து, **பிரான்ஜிஸ்கா மாட்ஜல் பெர்க்கர்** என்ற பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டான். அவள் ஒரு வருஷந்தான் இருந்தாள். அப்புறந்தான் ஹிட்லரின் தாயாரான **கிளாரா பீல்ஜ**லுக்கும் அலாயிக்கும், இரண்டாவது மனைவி யிறந்த மூன்றாவது மாதத்தில், கலியாணம் நடந்தேறியது.

நான்கு வருஷம் கழித்து, அதாவது 1889-ம் வருஷம், எப்ரல் 20-ந் தேதி **அடால்ப் ஹிட்லர்** பிறந்தான்.

அப்பொழுது தகப்பனுருக்கு 52 வயது. தாய்க்கு 29 வயது.

கிளாரா பீல்ஜல் துணிச்சலும் தைரியமும் உள்ளவள். அவள் தகப்பனுருக்கும் பூர்விக ஊர் **ஸ்பிட்டல்**. அவள் தாயார் **ஜோஹன்னு ஹாட்லர்**. அலாயியின் தகப்பனுருக்கு அத்தை பிள்ளை. கிளாராவுக்குப் பத்து வயதாக இருக்கும்பொழுது அலாயியின் முதல் பெண்டாட்டி வீட்டில் வேலைக்காரியாக இருந்தாள். பதினைந்து வருஷங்கள் கழிந்த பின்பு ஸ்ரீமதி ஹிட்லர் ஆனாள்.

அன்னாள் வீட்டில் வேலைபார்த்துக் கொண்டிருந்த கிளாரா திடீர் என்று வியன்னாவுக்கு ஓடிப்போனாள். அந்தக் கிராமத்திலே அது சாதாரண விஷயமல்ல. அவள் எதற்காக ஓடினாள், அங்கு என்ன செய்துகொண்டிருந்தாள்

என்பது யாருக்கும் தெரியாது. அந்தப் பத்து வருஷங்கள் மீது மௌனம் என்ற திரையிடப்பட்டிருக்கிறது. பிறகு 1885-ம்வருஷம் தன் சொந்த ஊரான ஸ்பிட்டலுக்குத் திரும்பினுள். திரும்பிவந்தவள், தன் பெற்ருேருடன், இரண்டு பெண்டாட்டிகளைச் சாகக் கொடுத்துவிட்டு உட்கார்ந்துகிடக்கும் அலாயி வீட்டுக்குப் பக்கத்து வீட்டில், குடியேறினுள். அவனுக்குத் தன் மனைவிக்கு வேலைக்காரியாக இருந்த பெண் என்ற நினைவு வந்தது; அவளைக் கலியாணம் செய்துகொண்டான். முதல் பெண்டாட்டி அன்னுள் மூலமாக அலாயிக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. ஒன்று ஆண். அவனுக்கு அலாயி ஜூனியர் என்று பெயர். அவன் ஹாம்பர்க் ஹோட்டல் ஒன்றில் உணவு பரிமாறும் பரிசாரகனுக (வெய்ட்டர்) இருந்து சமீபத்தில்தான் செத்தான். அவன் அபேதவாத ஜனநாயகக் கொள்கையை ஆதரித்தவன்.

மற்ருென்று பெண்; அவள் பெயர் ஆஞ்செல்லா; வியன்னு மாணவர் தர்ம சத்திரத்தில் பரிசாரகனுக இருந்த ராப்பெல் என்பவனைக் கலியாணம் செய்துகொண்டாள். சமீபத்தில்தான் ஹிட்லர் அவளை அழைத்துவந்து தனது பெர்ஷடச்கார்டன் வீட்டில் காரிய ஸ்திரீயாக அமர்த்தியிருக்கிருன்.

கிளாராவுக்கு அடால்பைத் தவிர இன்னும் இரண்டு குழந்தைகள் உண்டு. 1897-ம் வருஷம் பாலா என்ற பெண் குழந்தை பிறந்தது. பாலா இன்னும் கலியாணம் செய்துகொள்ளாமல், வியன்னுவிலேயே, அனுமத்தாக வசித்து வருகிருள். ஸ்தல நாஜிகள் அவளை ஒரு வீரப் பெண்ணுக்கிவிட யத்தனித்தார்கள். அதற்கு அவள் மசியவில்லை. இப்போது ஹிட்லருக்கும் அவளுக்கும் தொடர்பே கிடை

யாது. மூன்றாவது குழந்தையான எட்வர்ட் சின்ன வயசிலேயே செத்துப்போனான்.

சுங்க இன்ஸ்பெக்டராக உத்யோகம் பார்த்த அலாயி, தன் மனைவி கிளாரா, மகன் அடால்ப் யாவருடனும் 1896-ம் வருஷம் வரை **பிரன்னௌ** என்ற எல்லைப்புற நகரத்தில், (பென்ஷன் வாங்கும்வரை) வசித்துவந்தான். பிறகு **லியான்டிங்** என்ற கிராமத்தில் ஒரு வீடு வாங்கிக்கொண்டு அங்கு குடியேறினான். 1903-ம் வருஷம்வரை, அதாவது சாகும்வரை, அந்த வீட்டில்தான் வாசம்.

அப்பாவுக்குப் பிள்ளையைக் கண்டால் பிடிக்காது. சோனி, பயங்கொள்ளி, சோம்பேறி என்ற நினைப்பு. அப்பன் குடிகாரன்; கொஞ்சம் முரட்டு ஆசாமியுங்கூட: குடித்துவிட்டால் வீடு தொம்சம்தான். சாகும் பொழுதும் மதுக் கடையில், சாராயப் புட்டியும் கையுமாகவே செத்தான். திடீரென்று எமன் மாரடைப்பாக வந்தானும்.

இந்த நிலையிலே அடால்ப், தாயாரின்மீது அதிகப் பற்றுதல் கொண்டதில் அதிசயமில்லை. இதுதான் பிற்காலத்தில் அவனது குணப் பரிணமிப்பிற்கே முக்கிய காரணம் என்பார்கள். அவனுக்கு ஆறு வயதாக இருக்கும் பொழுதே புற்றுப்புண் வந்து தாயார் இறந்து விட்டாள். அதிகாரம், வெற்றி, எதேச்சாதிகாரம் இவற்றின்மீது மோகத்தைத் தூண்டிய ஆசை வித்துக்களை விதைத்தவள் தாயார்தான்.

3. பிரவேசம்

ஹிட்லர் அரசியல் வாழ்வில் பிரவேசித்ததே ஒரு தினுசு. ராணுவ ஒற்றனாக, அதாவது அன்னியர்களின் இரகசியங்களை 'ஒற்றுக்கேட்டு' அவர்களைக் காட்டிக்கொடுப்பவனாகத் தொழிலை ஆரம்பித்தான். நேசர்களைக் காட்டிக் கொடுப்பது அல்லது கைவிடுவது, எப்படியும் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற ஆசையாக மாறி, சர்வாதிகாரமாகப் பரிபூரண மடைந்தது.

1919-ம் வருஷம் ஹிட்லருக்கு இந்த ஒற்று உத்தியோகம் கொடுக்கப்பட்டது. தொழிலாளர்கள் கூட்டங்களுக்குச் செல்லுவது, அவர்களுடன் அளவளாவுவது, பிறகு முதலாளிகளின் கையாளான அதிகாரிக்குக் காற்றடிக்கும் திசையை அறிவிப்பது—இதுதான் உத்யோகம். இந்த வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கையில்தான் **காட்பிரீட் பெடர்** பேசுவதைக் கேட்க நேர்ந்தது. பெடருடைய பொருளாதாரக் கொள்கையில், அதாவது ஆரிய-யூதக் கொள்கையில், கொஞ்சம் பிரமை தட்டியது ஹிட்லருக்கு. கூட்டம் முடிவடைந்ததும் அவனுடன் வெகு தீவிரமாக விவாதித்தான். கூட்டத்தில் எதிர்த்துப் பேச முயன்ற ஒரு நபரை உதைத்து விரட்டிய பின்பு இந்த விசேஷம் நடைபெற்றது. ஜெர்மன் தொழிலாளர்கள் கட்சி என்ற ஒரு காலிக் கூட்டம்; அதற்குத் தலைவன் மாஜிக் கொல்லனான **ஆன்டான் டிரக்ஸ்லர்** என்பவன். இவனுக்கும் பெடருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இவ்விருவரும் ஹிட்லரைத் தங்கள் கட்சியில் சேரும்படி வேண்டிக்கொண்டனர். 'சேருவதா, வேண்டாமா?' என்பதைப் பெரிய ஆத்மார்த்தப் பரிசோதனையாகப் பண்ணிக்கொண்டதாக ஹிட்லர் கூறிக் கொள்ளுகிறான். அந்தக் கட்சியில் அவன் சேரவில்லை;

அதன் நிர்வாகக் கௌன்ஸிலில் ஏழாம் நம்பர் ஆசாமியானுன்; அதாவது அந்தரங்கத் தொடர்பு மட்டிலும் உண்டு. 1919-ம் வருஷம் ஜூலை மாதம் இது நடைபெற்றது.

ஹிட்லரின் கீழ் அந்தக் கட்சி வளர்ந்த விதம் விபரீதமானது. தேசீய அபேதவாதிகள் கட்சி என்று அதற்குப் புதிய பெயர் சூட்டப்பட்டது; ரத்தினச் சுருக்கமாக 'நாஜி' என்று அழைக்கப்பட்டது. தேசீய அபேதவாதம் யாவும் புதைந்து மண்ணோடு போனாலும் நாஜி என்ற பெயர் கட்சியுடனும் ஹிட்லருடனும் ஒட்டிக்கொண்டது. முதலில் அவன் பேசிய கூட்டத்தில் 20 பேர்தான் இருந்தார்கள்; பிறகு 20,000 பேர் முன்பும் அதே நபரின் குரல் கம்பீரமாக எழுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதற்கு ஓரளவு காரணம் கூட்டங்களில் ஏற்படக்கூடிய எதிர்ப்புக்களைச் சமாளிக்க ஹிட்லர் சிருஷ்டித்த புயல் படைதான். 1923-ம் வருஷம் மூனிக்கில் ஒரு புரட்சி நடத்தினுன். தோல்வி. ராஜத்துரோகக் குற்றத்திற்காகச் சிறைத் தண்டனை.

சிறையிலிருந்து வெளியே வரும்பொழுது ஜெர்மன் உத்தாரணத்திற்கு மூலகாரணன் என்ற புகழ். ஹிட்லர் கட்சியில் கால் வைத்ததிலிருந்து அதன் அபேதவாத அம்சங்கள் எல்லாம் தேய்பிறைப் பாதையில் சென்றன. அது ஆரம்பத்தில் வெகு தீவிர அபேதவாதத்தில் திளைத்தது. கட்சித் திட்டமாக பெடர் எழுதிய முதலாளித்துவ எதிர்ப்பு யாதாஸ்து போன இடம் தெரியவில்லை. அதில் ஓர் எழுத்தையும் மாற்ற முடியாது என்று பூர்வத்தில் கர்ஜித்தவன் ஹிட்லர்தான்.

ஜெர்மனியில் முடிவில் அதிகாரவர்க்கத்தை ஆட்டி வைக்கக்கூடிய பலம் ரீஷ்வருக்கு (ஜெர்மன் ராணுவம்) ஏற்படும் என்று அறிந்தவன் ஹிட்லர். ஆதலால் ஆரம்பத்தி லிருந்தே தனது கட்சியையும் ஒரு குட்டி ராணுவமாக ஆக்கிவந்ததில் அதிசயமில்லை. **வோல்கிஷ் பியோபாஷர்** என்ற பத்திரிகை எப்படி நாஜிப் பத்திரிகையாக மாறியது என்பதின் அந்தரங்கங்கள் இன்னும் ஒருவருக்கும் தெரியாது. ரீஷ்வர் பணம்தான் அவனுக்கு அவ்வசதியை அளித்தது.

டிரக்ஸ்லர், பெடர் இருவர் வசமிருந்து பெற்ற இக் கட்சியைக் குழந்தை மாதிரி ஹிட்லர் வளர்த்தான். முதலாளிகள், காலிகள், அதிகாரிகள் யாவரும் கட்சி வளர்ச்சிக்குத் துணை செய்தனர். அதற்கு ஸ்வஸ்திகா துவஜத்தை வகுத்தவனும், அதன் பிரசார முறை நுணுக்கங்களைத் தெளிவுபடுத்தியவனும் ஹிட்லரே. அக்கட்சியே அவனது காதலி, தாய், குழந்தைகள், யாவும்: முடிவாக ஜெர்மனியே அதன் வரம்புக்குள் அடங்குகிறது.

இவ்வளவு அக்கரையுடன் ஜெர்மன் உத்தாரணத்திற்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் ஹிட்லருக்கு ஜெர்மனியில் பிரஜா உரிமை கிடையாது. அவன் இன்னும் ஆஸ்திரியப் பிரஜைதான். நாஜிக் கட்சித் தலைவன் ஜெர்மன் குடியாட்சிப் பதவித் தேர்தலுக்குப் போட்டியிட உரிமை கிடையாது. அப்படி யிருக்கலாமா? நாஜிக் கட்சித் தலைவனுக்குப் பிரஜா உரிமைப் பதவி அளிப்பது 'முட்டவரும் மாட்டிற்கு வயிற்றைத் திறந்து காட்டிக்கொண்டிருப்பது' என்று ரீஷ் சர்க்கார் நினைத்தது; அவனுக்கு உரிமை அளிக்கலாகாது என்று உறுதிகொண்டிருந்தது. அதனால் நாஜிகள் திரை மறைவில் தங்கள் நோக்கத்தைப் பூர்த்திசெய்து கொள்ளவேண்டியதாயிற்று.

பூர்வத்திலேயே ஹிட்லர் கட்சியில் சேர்ந்த டாக்டர் பிரிட்ஜ் என்பவர்தான் முதல் முதல் சர்க்காரில் பதவி வகித்த நாஜி. தூரிஞ்சியாவில் அவர் கல்வி மந்திரியாக இருந்தார். ஹிட்லர் ஜெர்மன் உத்தியோகஸ்தனுக்கப்பட்டால், அவனுக்குப் பிரஜா உரிமை கிடைத்துவிடும். ஒரு குக்கிராமப் போலீஸ் படைத் தலைவனுக நியமிக்க முயன்றூர். இந்தச் சங்கதி எப்படியோ வெளிவர, பெருத்த கேலிக் கூத்தாகிவிட்டது. என்னமோ பிரமாதக் கட்சித் தலைவன் போலீஸ் கொப்பியுடன் சந்தியில் கை காட்டி நிற்பது என்றூல் கொஞ்சம் வேடிக்கைதானே !

பின்பு பிரன்ஸ்விக் மாகாணத்தில் நீதி மந்திரியாக இருந்த **பீட்ரிஷ் கிளாக்ஸ்** ஹிட்லரை பெர்லினில் இருக்கும் பிரன்ஸ்விக் ஸ்தானீகருக்கு ஆலோசனை நிபுணனுக நியமித்தார். இந்த மாதிரி ஒரு உத்தியோகம் இருப்பதாக ஜெர்மனியில் ஒருவருக்குமே தெரியாது. அரசியலமைப்புக்கு விஸ்வாசமாக நடந்துகொள்ளுவதாக—அதாவது, தான் தகர்த்தெறியவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் ஒரு ஸ்தாபனத்திற்குப் பக்தி செலுத்துவதாக—பிரமாணம் எடுத்துக்கொண்டு, சட்டபூர்வமான ஜெர்மனியனுன் ஹிட்லர்.

4. அதிகார ஏணி

விசேஷமான திறமை மட்டும் ஹிட்லரை சர்வாதிகாரி யாக்கிவிடவில்லை. தான் வேறு ஜெர்மனி வேறு என்ற பேதமில்லாது, அவன் தன்னை அதன் இலட்சியக் குரலாக ஆக்கிக்கொண்டான். ஜெர்மனியர் அவனை வணங்கினர்; ஏனெனில் அவர்களுக்கு ஜெர்மனி மீது பற்றுதல். நாஜிக ளுக்கு ஹிட்லர், ஜெர்மனி என்ற பதங்களுக்கு ஒரே அர்த்தந்தான்.

ஜெர்மனி 1914-ம்வருஷ யுத்தத்தில் தோற்றது. அதன் தோல்விக்குக் காரணம் யூதர்கள், அபேதவாதிகள், சமா தானவாதிகள் என்ற கதைகட்டி, தோல்வியை வியாக்கி யானம் செய்தனர் நாஜிகள். ஹிட்லர் இந்த அஸ்திவாரத்தை உபயோகித்துத்தான் ஜெர்மன் மனத்தைத் தன் பக்கம் திருப்பினான். ஜெர்மனி தோற்கவே யில்லை என்று ஒரு போடு போட்டான் :

> "உங்களை அடிமைப் படுத்திவிட்டார்கள், நீங்கள் கேவல மடைந்து விட்டீர்கள். ஜெர்மனி ஒரு நோயாளியாகப் படுத்து விட்டது. அதை ஒப்புக்கொள்ளுங்கள், இந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த குடியாட்சி போதும் என்று திருப்தியடைந்து விட்ட தாக நம்ப முயலுகிறீர்கள்.
>
> "உங்களை முதுகில் குத்தியவர்கள் யூதர்கள், பொது உடைமைக்காரர்கள்; அவர்கள் இன்று உங்களை ஆளுகின்ற னர். அவர்கள்தான் நீங்கள் இழந்த சுயமதிப்பைப் பெறுவ தற்குத் தடையாக இருக்கின்றனர். உங்கள் தேசத்தைக் கொல்ல வந்த நமன்கள் அவர்கள்தான் ; உங்கள் ஆத்மார்த்த இலட்சியத்தைக் கொன்றவர்களும் அவர்கள்தான். **நீங்கள்** தான் ஜெர்மனி. **நாம்**தான் ஜெர்மனி. துரோகிகளை, யூதர்களை, சமாதான வாதிகளை அகற்றுங்கள் ! மனிதர்களாக நிமிர்ந்து நில்லுங்கள் ! ...." இத்யாதி, இத்யாதி,

பேர்லின் சர்வாதிகாரி

ஹிட்லர்

இதே பல்லவிதான் அவன் எழுதிய "மீயின் காம்' என்ற சுயசரிதையிலும். தலைவனைப் பெறுவதற்காக ஜெர்மனியர் சுதந்திரத்தைப் பணயம் வைத்தனர். ஹிட்லர் சர்வாதிகாரியாக சௌகரியமாயிற்று.

ஹிட்லரின் வாழ்க்கைப் பாதையில் செல்லுமுன் ஜெர்மனியின் சமீபத்திய சரித்திரத்தைத் தெரிந்து கொள்ளுவது சௌகரியம்.

தமிழ் மாகாண கிராமங்களின் திண்ணை அரசியல் வாதிகளின் நம்பிக்கை கெய்ஸர் தோற்கவேயில்லை என்பது. இத்தகைய புகழோடு கெய்ஸருக்கு மீசையைப்பற்றிய பெருமையும் உண்டு. அவர் ஆண்ட ராஜ்யம் பல சிற்றரசுகளைக் கொண்டது. பிஸ்மார்க்கும் வில்லியம் கெய்ஸரும் அதை ஒன்றுபட்ட கட்டுக்கோப்பாக்கினர். அந்தத் திடீர் வளர்ச்சி ஜெர்மன் சண்டையில் சிதைந்தது. அந்தச் சிதைவிலிருந்து பிறந்தது ஜெர்மன் குடியாட்சி. வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை ஜெர்மனியைப் பூகோளப் படத்திலிருந்து அகற்றிவிட முயன்றது. அதன் ஷரத்துக்கள் தலை தூக்க முடியாதபடி ஜெர்மன் மக்களைச் சிலுவையிலடித்து விட்டது.

ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்றும் பொழுது வான் ஹின்டன்பர்க், தள்ளாத கிழவர், சம்பாதி மாதிரி, ஜெர்மன் குடியாட்சியின் தலைவராக இருந்தார். ஹின்டன்பர்க், கெய்ஸர் சைனியத்தில் புகழ் பெற்ற, ஆனல் ஏமாற்றமும் அடைந்த, ராணுவ வீரர்.

அவர் உயிருடன் இருக்கும் பொழுது—சமீபத்தில், அதாவது ஹிட்லரிடம் அதிகாரத்தைக் கொடுத்த பின்புதான் காலமானர்—அவரைப் பற்றி ஒரு கதை சொல்லுவார்கள்.

"ஹின்டன்பர்க், செத்துப் போனதாக நினைத்துக் கொண்டு நேராக மோட்ச சாம்ராஜ்யத்திற்குச் சென்ருராம். மண்ணுலகை நீத்து வரும் உயிர்களை வரவேற்க, மோட்ச வாசலில் காத்திருக்கும் செயின்ட் பீட்டர் முன்பு சென்று முழந்தாள் படியிட்டு நின்ருராம்.

"பீட்டர் ஆச்சரியத்துடன், 'நீ யாரப்பா?' என்று கேட்க, இந்தப் பிரகஸ்பதி, 'நான்தான் ஹின்டன்பர்க்' என்று சொன்னுராம்.

"'பின் ஏன் இங்கு வந்தாய்?' என்று பீட்டர் மறு படியும் கேட்க, 'நான் செத்துப் போனதால்' என்று ஹின்டன்பர்க் பதில் சொன்னுராம்.

"பீட்டர் தலையை அசைத்து மறுத்து, 'ஏதோ பிசகு நடந்திருக்கிறது, நீ சாகவில்லை, உயிருடன்தான் இருக்கிருய்' என்று சொல்ல, ஹின்டன்பர்க் மனம் குழம்பிப் போய், பின்னுக்குக் காலை எட்டி வைத்து, 'சை! அந்த ராஸ்கல் மீய்ஸ்னர் மறுபடியும் எனக்குத் தப்பிதமாக அறிவித்து விட்டான்' என்று தமக்குள்ளே முனகிக் கொண்டாராம்."

மீய்ஸ்னர் ஜெர்மன் குடியாட்சித் தலைவரின் காரிய தரிசி. ஜெர்மனியின் தள்ளாத கிழவரிடம் அவன் வார்த்தைக்குச் செல்வாக்கு உண்டு—அவ்வளவு தூரம் பிறர் கை பார்க்க வேண்டிய நிலை குடியாட்சித் தலைவருக்கு. வயோதிகத்தால் அவர் கண் ஒளி குன்றிப்போயிருந்தது.

இந்தக் கதை ஒரு பெரிய மனிதரைக் குரூரமாகக் கிண்டல் செய்வது என்ருலும் ஜெர்மன் அரசியல் நிலைமையை எடுத்துக்காட்டுகிறது.

தள்ளாத கிழவரான வான் ஹிண்டன்பர்க் குடியாட்சியின் பொம்மைத் தலைவராக இருந்தார். அவரைச் சுற்றி அவருக்குப் பாதுகாப்பாக அமைக்கப்பட்ட மெய்காப்பாளர் படை அன்னியரை நெருங்கவொட்டாமல் தன் அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டது. தலைவரைச் சுற்றிலும் சூழ்ச்சி, சூழ்ச்சி, சூழ்ச்சி !

நாஜிகள் வெகு காலமாகத் தலைவரை நெருங்க வெகுவாகப் பிரயாசைப்பட்டனர். ஆனால் மெய்காப்பாளப் படையின் சிகரத்தில் இருக்கும் ஆஸ்காரும், ஷ்லீஷரும் ஹிட்லரை அணுக விடவில்லை.

1930 மே மாதத்திலிருந்து 1932 மே வரை **டாக்டர் ஹென்ரீக் புரூயனிங்** குடியாட்சியின் சான்ஸலராக இருந்தான். புரூயனிங்குக்கு ஹிட்லர் என்றால் ஆகவே ஆகாது. ஹிட்லர் ஆதிக்கம் வளர விடாமல் தடுப்பதே புரூயனிங் நிர்வாகத்தின் கொள்கை. 64 லட்சம் வோட்டுகளும் 107 சகாக்களும் பெற்று புரூயனிங் சான்ஸலர் ஆனான். அவன் நிர்வாகத்தில் ஒரு விசேஷம். ரீஷ்டாக் என்ற ஜெர்மன் குடியாட்சியின் சட்டசபை கலைக்கப்பட்டது. உத்தரவுகள் மூலம் நிர்வாகம் நடைபெற ஆரம்பித்தது அவனுக்கே பின்பு வினையாக முடிந்தது. ஹிண்டன்பர்க் ஆதரவு இருக்கும் வரைதான் அவன் நிர்வாகம்.

அவனுக்குப் பின் வான் பேப்பன் 1932 ஜூன் 1 உ சான்ஸலராக நியமிக்கப்பட்டான். வான் பேப்பனுக்குத் திடீரென்று அதிர்ஷ்டம் பொத்துக்கொண்டு வந்தது என்று சொல்லவேண்டும். ஷ்லீஷர், இந்த சான்ஸலர் உத்தியோகத்திற்குத் தன் கையாளாக ஒருவனைப் பார்த்தான்; ஆனால் ஆள் என்ன வசியம் வைத்திருந்தானோ என்னவோ,

ஹின்டன்பர்க்கின் இதயத்தைத் தொட்டுவிட்டான். ஆனால் கொஞ்ச நாள்தான் பதவி வகிக்க முடிந்தது.

அதற்கப்புறம் ஷ்லீஷர் சான்ஸலரானான். எல்லோரையும் திருப்தி செய்ய முயன்று எல்லோருடைய வெறுப்பையும் கட்டிக்கொண்டான். அவனும் புரூயனிங்-பேப்பன் சென்ற வழி செல்லவேண்டியதாயிற்று. காரணம், யாவரும் தேசத்தில் வளர்ந்துவரும் சக்தியான ஹிட்லரிடம் சரிக்கட்டி வர முடியாமையே.

இடையே நாஜிக் கட்சிகளுக்குள் சதி. அவனது கிளர்ச்சி கட்சியையே தொலைத்துவிட்டிருக்கும். ஹிட்லர், பொதுக்கூட்டத்தில் சதிகாரர்களின் பெயரை வாசித்துப் பட்டவர்த்தனமாக்கி, கட்சியை ஏவி விட்டே அவர்களைத் தொலைத்தான். அடுத்தபடி அதிகாரத்தைப் பற்றுவது தான்.

சட்டத்திற்குப் புறம்பாகப் போகாமல் அதிகாரத்திற்கு வர எண்ணினான் ஹிட்லர். வான் பேப்பன் டாக்டர் ஹ்யூகன்பர்க்குடன் சேர்ந்துகொண்டு ஹிட்லருக்கு ஆசை காட்டினான். இந்தச் சமயத்தில் ஷ்லீஷர், மிரண்டு போய், ராணுவத்தைத் திரட்டுவதற்காகக் கிழவருக்குப் பெரிய அபாயம் என்று அறிவித்துவிட்டு, பேப்பனையும் ஹிட்லரையும் அமுக்க முயற்சித்தான்.

இந்த வதந்தி கேட்கவே, ஹிட்லர் பேப்பனுடன் கூட்டுக்கட்சி ஸ்தாபிக்க ஒப்புக்கொண்டான். பேப்பன்-ஹ்யூகன்பர்க் மந்திரிசபையில் ஹிட்லருக்கு மூன்று ஸ்தானங்கள், அவர்களுக்கு எட்டு.

ஷ்லீஷர் சூட்சி அவனையே பிணித்தது. நாஜி-தேசீயக் கட்சித் திட்டம் ஒன்றை—அதாவது பேப்பன் தயாரித்

ததை—ஹிட்லரும் ஹ்யூகன்பர்க்கும் கிழவனரிடம் சமர்ப் பித்தனர். அவர் ஒப்புக்கொண்டு ஹிட்லரை சான்ஸல ராகவும், பேப்பனே உதவி சான்ஸலராகவும் நியமித்தார். ஷ்லீஷர் பதவியை விட்டு நீக்கப்படு முன்பே இது நிகழ்ந் தது. காலையில் செய்தி கேட்டுத் திடுக்கிட்டான்.

இந்த நிலையிலே................

---

5. நெருப்பு! நெருப்பு!

1933-ம்வருஷம் பிப்ரவரி மாதம் 27-ம்தேதி இரவு, அதாவது ஹிட்லரை சான்ஸலர் பதவியில் ஊர்ஜிதப் படுத்தும் மார்ச் 5-ம் தேதி தேர்தல்கள் நடைபெறப் போகும் சமயத்தில், ஜெர்மன் ரீஷ்டாக் (சட்டசபை) தீப்பிடித்து எரிந்து போயிற்று. ஜெர்மன் குடியாட்சியில் மிஞ்சியதையும் இந்த நெருப்பு எரித்துச் சாம்பலாக்கி விட்டது. அன்று கொழுந்துவிட்ட தீ, சர்க்கார் கட்டடத்தை மட்டிலும் எரித்துவிடவில்லை; பொது உடைமைக் கட்சி, சமூக ஜன நாயகக் கட்சி, கத்தோலிக் தேசீயக் கட்சிகள் யாவும் அந்த யாக குண்டத்தில் புகைந்து போயின. அன்று பிடித்த நெருப்பு இன்றும் புகைந்துகொண்டுதான் இருக்கிறது.

ரீஷ்டாக்கில் விபத்து வர, லட்சம் மார்க் (ஜெர்மன் நாணயம்: ஒரு மார்க்=ஏறக்குறைய ரூ. 1-0-10) பெறுமானமுள்ள கண்ணாடியும் காரைக் கட்டியும் மட்டிலும் நாசமாகிவிடவில்லை. அது ஆயிரக்கணக்கான ஜீவன்களைச் சாக அடித்தது. அதன் விளைவாக, மார்ச் வெற்றியின் மூலம் பிரவுன் ஷர்ட் கொலை வெறியும், யூதர்கள் சித்ரவதையும், ஆஸ்திரியா ஆக்கிரமிப்பும் சம்பவித்தன.

கட்டடம் சிதைந்தது; அத்துடன் பழைய வீய்மர் அரசியலமைப்பும் தகர்ந்தது; அந்த ஹோம குண்டத்திலிருந்து ஹிட்லரின் மூன்றாவது ரீஷ் என்ற பூதம் புறப்பட்டது.

ரீஷ்டாக் எரிந்து போவது என்றால் சாதாரணக் காரியமா? முதன்மையான செய்தியாக உலக மின்சாரச் செய்திக் கம்பிகளைத் தாக்கிக்கொண்டிருந்தது. நாஜிகள் குற்றத்தைப் பொதுஉடைமைக்காரர்கள் மீது தூக்கிவைத்தனர்.

தேசத்தில் ஒரே கொந்தளிப்பு. பொதுஉடைமைச் சதி கண்டுபிடிக்கப்பட்டது. நூற்றுக் கணக்கான பொதுஉடைமைப் பிரதிநிதிகள் கைதி செய்யப்பட்டனர். இந்தக் கொந்தளிப்பில் ஹிட்லர் நான்கு வருஷங்களாவது தேசத்தின் லகானை இழுத்துப் பிடித்துக்கொள்ள வசதி செய்து கொண்டான்.

ரீஷ்டாக் தீ விபத்து விசாரணையே ஒரு போலி நாடகம்.

விசாரணையின் போது நீதிபதி டிமிட்ராவைப் பொது உடைமைப் பிரசாரம் செய்வதாக நிந்தித்தார். சாட்சிக் கூண்டில் நிற்கும் கோயரிங்கைக் காட்டி, கிண்டல்-மரியாதையுடன், “அந்த உயர்திருவாளர்தான் தேசீய அபேதவாதப் பிரசாரம் செய்கிறார்” என்றான் டிமிட்ராவ். கடைசிவரைக்கும் அவன் துணிச்சலே துணிச்சல்! கத்தி கழுத்தின் மேல் தொங்குகிறது; அதற்குத் தப்பினாலும் கோயரிங் சிப்பந்திகளைத் தப்ப முடியாது. அப்படியிருந்தும், “எனது நேரம் இப்படி வீணானதற்கு நஷ்டயீடு கொடுக்கவேண்டும்” என்கிறான்.

வேறு விதியில்லாமல் டோர்க்ளர், டிமிட்ராவ், போப் போல், டானேவ் முதலியவர்களைக் கோர்ட் விடுதலைசெய்ய வேண்டியதாயிற்று. கடைசியில் பித்துக்குளி வான்டர் லூப் கழுத்தில்தான் கத்தி விழுந்தது. கோர்ட் விடுதலை உத்தரவு போட்டாலும் சர்க்கார் டோர்க்ளரை இரண்டு வருஷம் சிறையில் அடைத்துப் போட்டது. லூபுடன் எத்தனை பேர் வேலை செய்தனர், யார் யார் ஒத்தாசை செய்தனர் என்ற விபரங்கள் யாவும் காலம் என்ற மௌனத்தில் ஆழ்ந்துவிட்டன. அவன் மட்டிலும் ஒண்டியாக இந்த வேலை செய்திருக்க முடியாது. மேலும் இந்த அரைப் பைத்தியத்தை

நாஜிகள் தங்கள் சதிக் கையாகப் பொறுக்கி எடுத்தனர் என்ருல், அவர்கள் புத்திசாலித்தனத்தை அவமதிப்பதாகும். லூபுக்குக் கொலைப் பைத்தியம் உண்டு என்று எண்ண வேண்டி யிருக்கிறது. அவன் வேஷம் போடவில்லை. அவன் நாஜிகளின் நண்பனும் அல்லன்; கோர்ட்டில் அவன் வாயைத் திறந்தபொழுதெல்லாம் அது நிரூபணமாயிற்று.

இதுதான் புதிர்: வான்டர் லூப் தனியாக இந்தத் தீ வைத்தான் என்ருல்—அதாவது நாஜிகள் உதவியில்லாமல், —அது எப்படி இவ்வளவு வெற்றிகரமாக இருந்திருக்க முடியும்? அவன் நாஜிகளின் கையாள் என்ருல் ஏன் அவர்களைக் காட்டிக்கொடுத்தான்?

விஷயம் இதுதான். வான்டர் லூப் கையாள் அல்லன்; நாஜிகளால் ஏமாற்றப்பட்டவன். அவனை ஒருபுறம் தீ வைக்கும்படி தூண்டிவிட்டு, அதற்குத் தகுந்தாற் போல் நாஜிகள் கோயரிங் மாளிகையின் பாசறை வழியாகச் சென்று தீப்பற்றி எரியக்கூடிய ரசாயனப் பொருள்களைப் பரப்பி வேறு ஒரு புறம் தீ வைத்தனர். லூப் தன் கைவேலை இவ்வளவு அமோகமாக, தேஜோமயமாக எரிந்தது என்று நினைத்துக்கொண்டான். அவ்வளவுதான். அன்றிரவு இரண்டு முறை தீ வைக்கப்பட்டது; ஒன்று லூப் கையால்; மற்றொன்று நாஜிகள் ஏற்பாட்டால். இந்த நிலையிலே...............

பித்துக்குளியான **வான்டர் லூப்**, ரீஷ்டாக்கில் கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் **எர்னஸ்ட் டோர்க்ளர்** முதலில் கைதியாயினர். பின்பு பல்கேரியப் பொதுஉடைமைக் கட்சிக்காரர்களான **டிமிட்ராவ், போப்போல், டானேவ்** என்பவர்களும் பிடிபட்டனர். இவர்கள்மேல் சந்தேகம் தோன்ற பெர்லினில் உள்ள ஹோட்டலில் சாப்பாடு பரிமாறுகிறவன்

சாட்சி. சம்பவம் நடக்கும் பொழுது **டிமிட்ராவ்** பெர்லினில் இல்லை; மூனிக்கில்தான் இருந்தான் என்பது சந்தேகமற நிரூபிக்கப்பட்டது. இருந்தாலும் ஐந்து மாதங்கள் வரை அவன் வெளிவரவில்லை. கோர்ட்டில் 'எக்கச்சக்கமான' கேள்விகள் கேட்டு ஆட்டிவைத்தவன் அவனே. கோயரிங்கைச் சாட்சிக் கூண்டில் ஏற்றிப் படாதபாடு படுத்திவிட்டான்.

இதற்கு முன்பே இரகசியமாக நாஜிகள்தான் தீ வைத்தது என்ற விபரத்தைக் கூறும் தஸ்தவேஜு ஒன்று அயல் நாடுகளில் பரவலாயிற்று. இது **ஓபர் போர்ஹன்** என்ற பேப்பனின் கையாள் வேலை என்று அவன் வீட்டை நாஜிகள் சோதனை போட்டனர். ஓபர் போர்ஹன் மாயமாய் மறைந்தான். பின்பு தற்கொலை செய்துகொண்டான் என்று அறிவிக்கப்பட்டது.

---

6. ஜெர்மன் மாதாவுக்கு ரத்த அபிஷேகம்

ஹிட்லர் வசம் அதிகாரம் வந்துவிட்டது; அதிகாரத்தைப் பெறுவதற்கு உபகரணமாக இருந்த புயல்படை மேற்கொண்டு நீடித்திருந்தால் ஹிட்லர் அதன் மனப் போக்குகளுக்குத் தலையசைக்க வேண்டிய நிலைமை ஏற்படக் கூடும். ஹிட்லர் வெகு ஜாக்கிரதைக்காரன். தன் நோக்கத்தைப் பூர்த்திசெய்து கொள்வதற்கு இடையில் முட்டுக்கட்டையாக எது நின்றாலும் அதையப்புறப்படுத்துவதற்குத் தயங்க மாட்டான். ஆனால் பக்க பல மிருக்கவேண்டியது, அதிலும் ராணுவ பலம் இருக்கவேண்டியது, சர்வாதிகாரிகளுக்கு மிக அவசியம். சர்வாதிகாரிகள், மனத்தில் நம்பிக்கை ஏற்படும்படி தர்க்கிப்பதற்குப் பதிலாகத் துப்பாக்கியை உபயோகித்துத் தர்க்கத்தைப் பூர்த்தி செய்வார்கள். இந்த வேலைக்கு ராணுவ பலம் அவசியம். ரீஷ் படைகள் மீது நம்பிக்கை வைப்பதா, அல்லது பழைய புயல்படையே நீடிப்பதா என்பதுதான் கேள்வி. புயல்படைத் தலைவன் ரீம் சமீப காலமாக அளவுக்கு மிஞ்சி அதிகாரம், செல்வாக்கு இரண்டும் பெற்று வருகிறான். வருங்காலத்தில் ஹிட்லருக்கே போட்டியாய் நிற்கவுங் கூடும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவதைத் தடுத்துக் கொண்டான் ஹிட்லர். இதைத்தான் ஜூன் புரட்சி என்பார்கள் அரசியல் நிருபர்கள். இதை இரத்த வெறி, கொலை வெறி, உன்மத்த வெறி என்பார்கள் அந்த நாளில் பெர்லினிலும் அதற்கடுத்த பிரதேசங்களிலும் வாழ்ந்தவர்கள். புயல் படைத் தலைவர்களில் பலர் உடம்பில் ஈயக் குண்டுகள் புகுந்தன. தலைவன் ரீமுக்கு ஒரு மாதத்திற்கு முந்தித்தான் கலியாணமாயிற்று. கலியாணச் சடங்கின்போது மாப்பிள்ளைத் தோழனாக இருந்

தவன் ஹெர் ஹிட்லர். ஜூன் மாதம் 30-ந் தேதி அவனை விரட்டி விரட்டிக் கொல்ல உத்தரவிட்டவனும் ஹிட்லர் தான். ரீம் அவனுடைய அந்தரங்க நேசன் என்பார்கள். இப்பொழுது அவன் சமாதி அடியில் அவன் அன்பைச் சுமக்கிறான்.

இறந்தவர்கள் யார் யார் என்பதை முதலில் கவனித்துக்கொண்டு அதற்கப்புறம் யமன் பெர்லினில் உலாவிய விவரத்தைக் கவனிப்போம் :—

I. புயல் படைத் தலைவர்கள் :—

(1) காப்டன் எர்னஸ்ட் ரீம்—இலாகா இல்லாத மந்திரி, புயல்படைத் தலைவன், ஹிட்லரின் நண்பன். அவனது சொந்தப் படையைத் திரட்டியவன்.

(2) கார்ல் எர்னஸ்ட்—பர்லின்-பிரான்டன்பர்க் புயல் படை மேஜர் ஜெனரல்.

(3) இன்னும் மூன்று புயல்படைத் தலைவர்கள்.

(4) ஹான்ஸ் ஹேய்ன்—ஸாக்ஸனியிலுள்ள புயல் படையின் பிரிகேடியர் ஜெனரல்.

II. வைஸ்சான்ஸலர் வான் பேப்பனுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் விவரம்:—

(1) டாக்டர் எரிக் கிலாஸ்னர்—கதோலிக் கட்சியின் தலைவர்.

(2) அடல்பர்டு பிரபோஸ்டு—கதோலிக் வாலிப இயக்கத்தின் தலைவர்.

(3) பிரிட்ஸ் வான் போஸ்—பேப்பனுடைய சர்க்கார் காரியதரிசி.

(4) எட்கார் ஜம்—பேப்பனுடைய அந்தரங்கக் காரியதரிசி.

(5) டாக்டர் பெக்—சர்வதேச மாணவர் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்.

III. தனிப்பட்ட வஞ்சத்திற்குப் பலியானவர்கள்:—

(1) ஜார்ஜ் ஸ்டெரெஸர்—நாஜிக் கட்சியின் கொள்கை விஸ்தாரத்தில் பிரபலம் பெற்று, ஒரு காலத்தில் ஹிட்லரின் வலக் கையாக இருந்தவர்.

(2) ஜெனரல் வான்கார்—1923-ம் வருஷம் பவேரியாவில் சர்வாதிகாரியாக இருந்தார். ஹிட்லரின் முதல் புரட்சியில் நாஜிகளைக் காட்டிக்கொடுத்தவரென்று குற்றம் சாட்டப்பெற்றவர்.

IV. மற்றையோர்:—

ஜெனரல் குர்ட் வான் ஷ்லீஷர்—மாஜி சான்ஸலர்; எலிசபத் என்ற அவர் மனைவி.

ஜெனரல் வான் பிரடோ—யுத்த இலாகாவில் முன்பு ஷ்லீஷர் மந்திரிப் பதவி வகித்த பொழுது அப்புறம் அவருக்குக் காரியதரிசியாக இருந்தவர்.

கடைசியாக மூனிக்கில் வில் ஷ்மிட் என்ற சங்கீதவிமர்சகன். அவனை ஆள் மாறாட்டத்தால் கொன்று போட்டார்கள். அவர்கள் கொல்ல விரும்பிய ஷ்மிட் வேறொரு ஆசாமி என்று இவன் எவ்வளவு கெஞ்சியும் இவனைத் தூக்

கிப் பிடித்து நிறுத்திச் சுட்டுவிட்டார்கள். பிறகு சரியான ஷ்மிட்டும் கண்டுபிடிக்கப்பட்டு, சமாப்தி பண்ணப் பட்டான்.

காரியதரிசிகள் கொல்லப்பட்டதைக் கண்ட வான் பேப்பன் உயிர் தப்பினது பாக்கியம் என்று ஓடிப் போனான். முன்பு சான்ஸலராகவிருந்த புருயனிங்கும் கொல்லப்பட்டிருப்பான். நண்பர்கள் வற்புறுத்தித் தூண்டிய தன் பலனாக 27 நாட்களுக்கு முன்புதான் தேசத்தை விட்டு வெளியேறினான். டச்சு சாமியார் வேஷம் போட்டுக் கொண்டு அவன் ஜெர்மனி எல்லையைக் கடந்தான்.

ஷ்லீஷர் ஏன் கொல்லப்பட்டான்? இதர மாஜி சான்ஸலர்கள் ஏன் இப்படித் தப்பி ஓட வேண்டியதாயிற்று? காரணம் வேறொன்றுமில்லை. வருங்காலத்தில் எதிரிகளாக வரக்கூடிய நபர்களை ஹிட்லர் விட்டுவைக்க விரும்பவில்லை. அவன் எந்தச் சூழ்ச்சியால் அதிகாரம் பெற்றானோ அதைப் போன்ற ஒரு சூழ்ச்சியால் அவனிடமிருந்து அதிகாரத்தைப் பிடுங்க முடியுமல்லவா? அதற்காகவே இவ்வளவு முன் ஜாக்கிரதை.

ஷ்லீஷரைப் பற்றி நாஜிகள், "அவன் ரீமின் நண்பன், இருவரும் சதிசெய்துகொண்டிருந்தார்கள்" என்று சொல்வார்கள். மேலும் அவன் வெளிநாட்டு ஸ்தானீகர் பலருடன் அதிக உறவை வைத்துக்கொண்டிருந்தானாம். இக்காரணத்திற்காகவும் அவன் அகற்றப்பட்டான்.

ஷ்லீஷர் கொலை ரீஷ்வர் தலைவர்களுக்குச் சீற்றமூட்டியது. நிலைமை மோசமாய்விடும் போலிருந்ததால் கோயரிங் தலைமையில் கண் துடைக்கும் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. ஏதோ ஒரு தப்பிதம் நடந்துவிட்டது என்று 'வழ வழ' என்று ஒரு சமாதானம் கூறப்பட்டது.

ஷ்லீஷர், ரீம், ஸ்டெரெஸர், வான்கார், வின்ஸ்மீட், வான்போஸ், கிலாஸ்னர் யாவரும் ஹிட்லரைத் தொலைக்கச் சதிசெய்தார்கள் என்று நாஜிகள் சொல்வதை நம்ப முடிய வில்லை. புரட்சியின்போது பெர்லினிலிருந்த பாரபட்ச மற்ற பல நபர்களின் அபிப்பிராயமும் அதுவே. இருந் தாலும் நாம் எப்படித் திட்டமாகச் சொல்ல முடியும்?

7. பேர்லினில் ரத்தப் பேய் நடமாட்டம்

1934 மே முதல் ஜூன்வரை ஜெர்மன் பொருளாதார நிலை நெருக்கடி. எங்கு பார்த்தாலும் பணக் கஷ்டம். நாஜிகள் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டனர். அதாவது வெற்றி பெற்று விட்டனர். என் அவர்கள் கூறியபடி தேசத்தில் பாலுந் தேனும் கலந்தோடவில்லை? நாஜிகளில் தீவிரவாதிகளும், ஜெர்மன் பொது மக்களும், பரிசுகளெல்லாம் முதலாளிகள் கையிலும், கோயரிங் வசமும், ரீஷ்வர் படை வசமும் சிக்கின என்று நினைத்தார்கள். எங்கு பார்த்தாலும் ஏமாற்றம், அதிருப்தி. ஹிட்லரிடம் முறையிட்டார்கள். வீண் முறையீடு. இனி இரண்டாவது முறை புரட்சி நடக்காது என்று உறுதி கூறினன் ஹிட்லர். உறுதி வாய் மொழியோடு நின்றது.

காரணம்...............

நாஜிகளுடைய புயல்படையிடையே அதிருப்தி அளவுக்கு மிஞ்சியது. கட்சியின் அதிகாரம் தன் வசமே என்று திமிர்கொண்டிருந்தது புயல்படை. இப்பொழுது அதன் எண்ணிக்கை 25,00,000. புரட்சி வெற்றி பெற்ற பிறகு புயல்படைக்கு வேலையில்லை. ஹோமகுண்டத்தில் பிறந்த அசுரன் போல் வேலையை எதிர்பார்த்துத் துரு துரு என்று வந்தது. பணமூட்டைகளின் மீது உட்கார்ந்திருந்த பெருத்த சுமை அது. அதன் தலைவன் ரீம் அற்புதமான மனிதன். விசேஷத் தன்மை வாய்ந்தவன். கோயரிங்குடைய தடித்தனமும் கோபல்ஸின் இரக்கமற்ற சிந்தையும் உடையவன். கற்பனை கொஞ்சமும் கிடையாது. சமாதானத்தை வெறுத்து குழப்பத்தில் மகிழ்ச்சி கொள்ளும் காலி. புயல்

படையின் மீது அவனுக்கு இருந்த பாசம் ஹிட்லருக்கிருந்ததை விட சற்றும் குறைவானதில்லை. ஹிட்லர் புயல் படையைச் சிருஷ்டித்தவன். புயல் படையை வளர்த்தவன் ரீம். ஹிட்லருக்கு அவன்மீது பிரியமுண்டு. ரீஷ்வர் படைகளுக்குள் புயல் படையையும் சேர்த்து தேசீய ராணுவத்தைப் பெருக்கிவிட்டால் பிரச்னை ஒழிந்துவிடு மென்பது அவனுடைய ஆலோசனை. அதோடு அதில் தலைமை ஸ்தானம் வகிக்கவேண்டு மென்பதும் அவனுக்கு ஆசை. அவன் அப்படித் தலைவனானல்...............

அவன் இரண்டு சக்திகளின் பிரதிநிதியாவான். புயல்படையில்தான் தீவிரவாதிகள் அதாவது ஏழைகள் அதிகம். அதன் தலைவன் என்றால் அந்தச் சக்தியின் பிரதிநிதி என்று அர்த்தம். இரண்டாவதாக, தேசத்தின் அதிகாரம் ரீஷ்வர் படையின் அஸ்திவாரத்தின் மீதுதான். அப்படி ஆவதால் ஹிட்லர் ரீம் உள்ளங்கைக்குள் அடங்கவேண்டிய நிலைமை ஏற்படும். இதை ரீஷ் ஜெனரல்கள் விரும்பவில்லை யென்பதோடு, ஹிட்லரும் தனக்கு எதிரியை (வருங்காலத்திலாவது) தேடிக்கொள்ள விரும்பவில்லை.

ரீஷ்வர் படை தன்னை ஆதரிக்கும் என்று கண்டு கொண்டவுடன் ஹிட்லர் தாமதித்திருக்கவில்லை. ரீமைச் சந்தித்து ஐந்து மணி நேரம் பேசினன். சந்தித்துப் பேசும் பொழுது புயல்படையை ரீஷ்வருடன் சேர்க்கவேண்டு மென்று வற்புறுத்தினன். பயனில்லாது போயிற்று. தோல்வியுற்று மூனிக்குக்குத் திரும்பிச் சென்றன். ஜுலை மாதம் முதல் தேதி புயல்படைக்கு இரண்டு மாதம் ரஜா கொடுக்கப்பட்டது. அதாவது, அவர்கள் யூனிபாரம் அணியக் கூடாது. புயல்படையில் இரண்டு கக்ஷி. ஒன்று ஹிட்லரை ஆதரிக்கிறது. மற்றென்று ரீமை ஆதரிக்கிறது.

இருபத்தி நாலு மணி நேரமும் நாஜி விஷயங்களைக் கவனித்
துக்கொண்டிராமல், இடையே விருந்தினர்களை
வரவேற்பதற்கும், குழந்தைகளோடு
அளவளாவவும் ஹிட்லருக்கு
ஓய்வு கிடைக்கிறதாம்.

ஹிட்லரை ஆதரிக்கும் கக்ஷியில் ஹிம்லர் என்று ஒருவன். அவனுக்கு ரீம் என்றால் வெறுப்பு. புயல்படைச் சிதைவு திடீரென்று தோன்றிய சண்டமாருதம் போல் காணப்பட்டாலும், முன்னரே யாவும் தயாராக இருந்தன. ரீஷ்வர் படைவீரர்கள் எப்போதும் ரிவால்வருடன் நடமாடும் நிலைமை பத்து தினங்களுக்கு முன்னமேயே ஏற்பட வேண்டுமென்றிருந்தால், ஏற்பாடுகள் எவ்வளவு கணக்காக நடைபெற்றன வென்று விஸ்தரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஏர்னஸ்ட் ரீம் தன் புதுப் பெண்டாட்டியுடன் உல்லாச யாத்திரை புறப்படும்போது கைதி செய்யப்பட்டான். ரீமுக்குச் சந்தேகமேற்படாத வண்ணம் ஹிட்லர் தெற்கு ஜெர்மனி நோக்கிப் பிரயாணம் செய்தான். அவனுடன் கோபல்ஸும் லூட்ஸும் சென்றனர். ரீம் செத்ததும் உடனே புயல்படைத் தலைவனாக நியமிக்கப்பட்டவன் லூட்ஸ். பெர்லின் மீது துப்பாக்கியை நீட்டும் பொறுப்பு கோயரிங்குக்கு அளிக்கப்பட்டது. கோயரிங் முரட்டு ஆசாமி. எது வேண்டுமானாலும் செய்வான். ஜூன் மாதம் 29-ந் தேதி இரவு 12 மணிக்கு வெகு முக்கியமான செய்தி எட்டியதால் உடனே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தான் தீர்மானித்ததாக ஹிட்லர் சொல்லிக்கொள்கிறான். கோபல்ஸ்,இந்தச் சம்பவத்தைப் பற்றி மாஞ்செஸ்டர் கார்டியன் 2-7-34 இதழில், பெர்னிலிருந்தும் மூனிக்கிலிருந்தும் அறிக்கைகள் விடுத்ததாகவும், சில நிமிஷங்கள் கலந்து ஆலோசித்த பிற்பாடு இரவு 2 மணிக்குப் புறப்பட்டு அதிகாலை 4 மணிக்கு மூனிக் வந்து சேர்ந்ததாகவும், விமானத்திலிருந்து இறங்கியதும் தலைவருக்கு மறுபடியும் மேற்கொண்டு தகவல் கிடைத்ததாகவும், நேரடியாகவே சென்று

சதிகாரர்களைக் கைதி செய்வதென்று தலைவர் மோட்டாரின் மூலம் வீஸிக்கு விரைந்துசென்று ரீம்வீட்டினுள் நுழைந்து ரீமைத் தீரமாகக் கைது செய்ததாகவும், அந்தச்சமயத்தில் ரீமின் சிப்பந்திகள் மூனிக்குக்கு வர ஹிட்லர் அவர்களை விரட்டி அடிபணியச் செய்துவிட்டதாகவும் கூறுகிறான். ரீம் உண்மையிலேயே சதி செய்தான் என்று வைத்துக் கொண்டாலும் 20 மைலுக்கப்பாலுள்ள வீஸியில் அவன் படுத்துத் தூங்க அவசியம் ஏது? மூனிக்கில் புரட்சி நடப்பதாக இருந்தால் ஹிட்லர் 30-ந்தேதி காலை அங்கு வரும் போது ஏன் அந்நகரம் அமைதியாக இருக்கவேண்டும்? ரீம் கைதி செய்யப்பட்டது பற்றி நாஜி சர்க்கார் அறிக்கை வருமாறு:

"பூஹ்ரர் நேரடியாகச் சென்று ரீமைக் கைதி செய்தார். அவன் எதிர்க்காமலும் மௌனமாகவும் தன்னை ஒப்புவித்துக் கொடுத்தான். அதற்கு எதிர்த்தாற்போல் இருந்த ஹீன்ஸ் படுக்கை அறையில் ஓர் கேவலமான விபரீதமான காட்சியைத் தலைவர் கண்டார். ஹீன்ஸ் தன் படுக்கையறையில் ஒரு வாலிபனுடன் விபரீதப் புணர்ச்சி செய்துகொண்டிருந்தான். அவர்கள் கைதிசெய்யப்பட்ட பின் விளைவாக நடைபெற்ற காக்ஷியை விஸ்தரியாமலிருப்பது நலம். மாஜி புயல்படைத் தலைவனைச் சுற்றியுள்ளவர்கள் எவ்வாறு நடந்துகொண்டு வருகிறார்கள் என்பதை அது விளக்குகிறது."

தனிப்பட்ட ஹோதாவில் இச்சம்பவம் பற்றி வெளிவந்த செய்திகள் வருமாறு: ஹிட்லர் தனியாகச் செல்லவில்லை. தன்னுடன் புயல்படையைச் சேர்ந்த சில காலிகளைக் கூட்டிச் சென்றான். ரீமும் பேசாது அடிபணிந்து தன்னை ஒப்புவித்துக் கொள்ளவில்லை. அவன் தலைவரைப்

பார்த்துப் புரட்சியைக் காட்டிக்கொடுத்த துரோகி என்று திட்டினன். இருவரும் பரஸ்பரம் திட்டிக் கொண்டார்கள். புயல்படைக் காலிகள் ரீமை அழைத்துச் செல்லும் வரை இதே கலாட்டா. ரீம் மூனிக்குக்கு அழைத்துச் செல்லப்பட்டான். ஹீன்ஸும் அவனுடன் படுத்திருந்த வாலிபனும் ஸ்தலத்திலேயே சுட்டுக்கொல்லப் பட்டனர். ரீமை என்ன செய்வதென்று தெரியாமல் சிறைக்குள் அடைத்துத் தற்கொலை செய்துகொள்ளும்படி உத்தரவிட்டார்கள். அவன் ஒரே அடியாக மறுத்துவிட்டு, "ஹிட்லர் வேண்டுமானல் நேரில் வந்து என்னைக்கொல்லட்டும்" என்று முரண்டிக்கொண்டிருந்தான். மறுநாள் மாலைவரை, அதாவது கைதி செய்யப்பட்ட பின்பு 36 மணி நேரம்வரை, அவன் கொல்லப்படவில்லை. விவரம் எப்படி என்று திட்டமாய்க் கூற முடியா விட்டாலும் இப்படித்தான் என்று ஒருவாறு யூகிக்கலாம். ஜெயிலர்கள் அடிக்கடி வந்து ஹிட்லரிடம், "அவன் தற்கொலை செய்துகொள்ள மாட்டேன் என்கிருனே, என்ன செய்வது!" என்று மறுபடியும் மறுபடியும் கேட்டிருக்கலாம். தொந்தரவு சகிக்கமாட்டாமல் "பயலை எப்படியாவது தொலையுங்கள்!" என்று ஹிட்லர் உத்தரவிட்டிருக்கலாம். ஏனென்ருல் ரீம் ஹிட்லரின் அந்தரங்க நண்பன். அவன்தான் வழியில் முட்டுக்கட்டையாக நின்ருன். அவனை எப்படியாவது அகற்றவேண்டிய தர்ம சங்கடமான நிலை ஏற்பட்டது. இதரர்களைப்பற்றி அவ்வளவு கவலையில்லை. மனக்கசப்பு வைத்திருந்த புயல் படைத் தலைவர்கள் எல்லாம் மூனிக்கில் சுட்டுக்கொல்லப் பட்டார்கள். ஹிட்லரின் உத்தரவுகள் எல்லாம் இரண்டுங் கெட்டானகவே யிருக்கும். ஆனல் எமன் வேலை மிக துரிதமாகவே நடந்தது. ஆனல், பதினெரு மணி வரை

கோயரிங், பெர்லினில் காத்திருந்துவிட்டு, தன் வேலையை ஆரம்பித்தான்.

ஷ்லீஷர் தன் வீட்டில் வைத்துக் கொல்லப்பட்டான். அவனுக்கு இப்படியொரு விபத்து வரப் போகிறதென்றே தெரியாது. புயல்படைக் காலிகள் வீட்டுக்குள் நுழைந்த போது அவன் டெலிபோனில் ஒரு நண்பருடன் பேசிக் கொண்டிருந்தான். "ரூமில் யாரோ வந்திருக்கிறார்கள். ஒரு நிமிஷம் காத்திருங்கள்" என்று சொல்லிவிட்டுக் கொலைகாரர்களைப் பார்த்தான். அவர்கள் அவன் மீது குண்டுமாரி பொழிந்தார்கள். துப்பாக்கிச் சத்தம் கேட்டு ஷ்லீஷருடைய மனைவி உள்ளே ஓடிவந்தாள். அவளையும் சுட்டுக்கொன்றார்கள். பிறகு புயல்படை இரு கூறாகப் பிரிந்து ஒன்று மேலதிகாரிகளை வேட்டு வைத்து வந்தது. கொல்லப்பட்ட விதம் வருமாறு: இந்தக் கொலைகள் யாவும் லிஷ்டர்பீல்ட் பாரெஸ்டில் நடைபெற்றன. நபரைக் கொண்டு சுவரருகில் நிறுத்திவிடுவார்கள். "நீ சதிசெய்த தாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலைத் தண்டனை விதிக்கப் பட்டிருக்கிறாய்." உடனே நபரின் முகத்திற்கு நேராகக் கண்கூசும் டார்ச் லைட்டைத் திருப்புவார்கள். டிரம் (முரசு) படபடவென்று முழங்கும். அந்த ஒலியில் துப் பாக்கிச் சத்தமும் ஒன்றுபடும். பிணமாக விழுவான். இந்த மாதிரி சுட்டுக் கொல்லப்பட்ட தலைவர்களில் பலர், "ஹீல் ஹிட்லர்!" என்று கோஷித்துக்கொண்டே பிணமாக விழுந்தனர். புயல்படையில் ஏதோ காலிக் கூட்டம் ஹிட் லருக்கு எதிராகக்கிளம்பிவிட்டதென்று அவர்கள் நினைப்பு. சாகும் அந்த நிமிஷம் வரை நாஜிக் கட்சியின் மீதும் அதன் தலைவர் மீதும் உள்ள விஸ்வாசத்தை நிரூபித்துக்கொண்டே

ஆவிகள் பிரிந்தன. இவர்கள்தான் ஹிட்லர் கூறும் சதிகாரர்கள்.

ஜூலை முதல் தேதியிலிருந்து பதின்மூன்றும் தேதிவரை ஓய்வெடுக்க வேண்டியதாயிற்று அதிரடித்த நரம்புகளை நிதானத்துக்குக் கொண்டுவர. ஜூன்மீ 30-உ கொலை வெறி ஹிட்லர் கட்சியில் பல காலிகளைத் தொலைத்ததென்றாலும் அத்துடன் அதிலிருந்து தன்னலமற்ற தேசிய வெறியையும் தொலைத்து விட்டது. பொதுவாகக் கட்சியின் தீவிரவாதிகளை அகற்றிவிட்டது.

ஆகஸ்டுமீ 2-உ ஹிண்டன்பர்க் காலமானார். ஜூன் 30உ கொலை வெறி அவரது தளர்ந்த உடலை அதிரடித்து விட்டிருக்கலாம். ஆனால் அவர் ஹிட்லர் மீதும் கோயரிங் மீதும் திருப்திகொண்டவர் போல் தெரியும்படியாகப் பாராட்டுத் தந்திகள் அனுப்பியிருக்கிறார். ஹிண்டன்பர்க் மரணம் ஹிட்லருக்கு ஓர் நெருக்கடி. ஒரு பெருத்த பிரச்னையை எழுப்பியது. இனி, யார் ஜெர்மன் குடியாட்சியின் தலைவர்? தன்னையே தலைவனாக அவன் நியமித்துக்கொள்ளலாமா? அப்படிச் செய்தால் யார் சான்ஸலராக இருப்பது? எல்லாமிருக்கட்டும். இவற்றைப் பார்த்துக்கொண்டு ரீஷ்வர் படை சும்மா இருக்குமா? ஜூன்மீ 30-உ ராணுவத்தை ஹிட்லர் தன் கைவசம் ஆக்கியதன் திறமை, தீரம், அவனுக்கே பரிபூரணமாக விளங்கியது. தலைவர் பதவியையும் சான்ஸலர் பதவியையும் ஒன்றாக இணைத்துத் தன் வசம் ஆக்கிக்கொள்வது என்ற கனவை நீண்ட காலமாக ஒளித்துவைத்திருந்தான் ஹிட்லர்.

ரீஷ்வரைப் பொறுத்தவரை ப்ளோம்பர்க் பார்த்துக் கொள்வான். ஹிண்டன்பர்க் இறந்த அன்று காலை ஜெர்

மன் ராணுவம் ஒரு புது விதமான விசித்திரமான விஸ்வாசப் பிரமாணத்தை எடுத்துக்கொண்டது. பொதுவாக ஒரு சர்க்காரின் ராணுவம் அதன் மன்னருக்கோ அல்லது அதன் தலைவருக்கோ விஸ்வாசப் பிரமாணம் எடுத்துக் கொள்வது வழக்கம். ஆனால் ஜெர்மன் படைகளில், "ஜெர்மன் ரீஷ் பொதுமக்களின் தலைவர் அடால்ப் ஹிட்லர், ராணுவ சேனாதிபதியான அடால்ப் ஹிட்லர் என்பவருக்கே விஸ்வாசமாக உழைப்பேன் என்று கடவுளின் சன்னதிமுன் நான் ஆணையெடுத்துக்கொள்ளுகிறேன்" என்று ஒவ்வொரு படைவீரனும் விஸ்வாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டான். ஹிண்டன்பர்க் இருக்கும்வரை ஒருவேளை வேலையை விட்டு நீக்கப்படலாம் என்ற நிலைமை ஹிட்லருக்கு இருந்து வந்தது. ஆனால் இனி தன்னை நீக்கத் தான்தான் உத்தரவு போட வேண்டும். அல்லது கடவுளாகப் பார்த்து அவனை அகற்ற வேண்டும். தன் சட்டைப் பைக்குள் இருக்கும்படியாகக் கடவுளுக்கு உத்தரவு கொடுத்துவிட்டான் ஹிட்லர்.

---

8. குட்டி ஹிட்லர்கள்

"என்னுடைய சகோதரனாயிரு. இல்லாவிட்டால் உன் மண்டையை உடைத்து விடுவேன்!" என்பது ஜெர்மன் பழமொழி; அதோடு நாஜிக் கட்சியை ஸ்தாபித்த மூன்றுவது ரீஷின் அரசியல் சித்தாந்தமும். இந்தப் புனிதமான கொள்கையைப் பரப்பும் அரிய தொண்டை ஹிட்லருக்குப் பலர் செய்து வருகின்றனர். அவர்கள் யாவரும் நேரடியாக ஹிட்லருக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள். கோயரிங் இருக்கிறுன், கோபல்ஸ் இருக்கிறுன், ஹிம்லர்.... இத்யாதி இத்யாதி. டாக்டர் கோபல்ஸ் பிரசாரகன். டாக்டர் ஷாட் பொருளாதார சர்வாதிகாரி. டாரே விவசாயத் தலைவன். ரோஸன்பர்க் அன்னிய நாட்டு மந்திரி. ஜெர்மனி பத்தொன்பது ஜில்லாக்களாக (கௌஸ்) பிரிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் கோபல்ஸ் பெர்லின் ஜில்லாவுக்குத் தலைவன். அதோடு அதன் புயல்படைத் தலைவனுங் கூட. அதே மாதிரி வீன்ஸ் சைலீஷியாவில்; ஜூலியஸ் ஸ்ட்ரீஷர் (அதாவது யூத வேட்டைக்காரன்) வடக்கு பவேரியாவில். இந்த நபர்களுக்குள் போட்டி சகிக்க முடியாது. கோயரிங் கோபல்ஸைத் தின்றுவிட வேண்டுமென்று நினைக்கிறுன். கோபல்ஸ் விருப்பமும் அவனுடையதற்கிளைத்ததல்ல. இம்மாதிரியே கட்சி முழுவதும். கட்சிக்குள் ஓரளவு நண்பர்களாக இருப்பவர்கள் ஹெஸ்ஸும் பிரிக்குமே. ஹிட்லரின் முக்கிய ஆலோசனையாளர்கள் எனக் கருதப்படுபவர்கள் நாஜிகளே அல்லர். அதுதான் அதிசயம். அவர்கள் ஷாட், நியூராத், ஜெனரல் ப்ளோம்பர்க் என்ற மூன்று பெரியார்கள். இனி, குட்டி ஹிட்லர்களைக் கவனிப்போம்.

டாக்டர் ஜோசப் பால் கோபல்ஸ் பிறக்கும் போதே ஒற்றைக் கால் நொண்டி. அதுதான் அவன் பிறப்பிலேயே

முக்கிய அம்சம்; அவனுடைய சக்தியின் மூலதனம் என்றே கூறலாம். அவன் ரைன்லாந்து வாசி. யுத்தத்தின் போது, மற்றவர்கள் படைக்களத்திற்குச் செல்லும்போது, அவன் வீட்டிலேயே உட்கார்ந்திருந்தான். அவனது நொண்டிக் கால், பேராசையையும், மனித வம்சத்தின்மீது, அதாவது சுகதேகிகளின்மீது, அடங்காத வெறுப்பையும் அவனிடையே வளர்த்தது. ஹீடல்பர்க் சர்வகலாசாலையில் அவன் பி. எச். டி. பட்டம் பெற்றான். கோபல்ஸ் குடும்பம் ரோமன் கதோலிக் மதத்தைச் சேர்ந்தது. பாதிரிகளின்மீது அவனுக்கு அடங்காத வெறுப்பு. கோபல்ஸ் 1922-ம் வருஷம் நாஜிக் கட்சியில் சேர்ந்தான். அவனுக்கு கலப்படமில்லாத ஆரிய சஹதர்மிணி. இந்தக் குடும்பத்தின் மீது ஹிட்லருக்கு ஒரு தனிப் பற்றுதல் உண்டு.

பிரசாரம் செய்வதில் கோபல்ஸ் முதல்தரம், அதிலும், யூதர்கள்மீது வெறுப்பூட்டும்படியாகப் பிரசாரம் செய்வதில் அவனே முதன்மை வகிக்கிறான்.

"யூதனென்றால் எனக்குப் பார்க்கவே பிடிக்காது பார்த்தால் வாந்தி யெடுத்து விடுவேன். ஏசுகிறிஸ்து ஒரு யூதனாக இருந்திருக்கவே முடியாது. இதை நான் நிரூபிக்க வேண்டிய அவசியமே கிடையாது. இது உண்மை. கலியாணம் செய்துகொண்டு குடும்பத்தோடு வாழும் ஒரு யூத ஸ்திரீயை விட சாதாரண ஜெர்மன் விபசாரியை நான் அதிகமாக மதிக்கிறேன்."

இம்மாதிரியான வார்த்தைகள் உடலும் மனமும் கோணிப்போன ஒரு விபரீத மூளையிலிருந்தே புறப்படும். இப்படிப்பட்டவன் கையில் அதிகாரமிருந்தால், அதாவது ஒரு சமுதாயத்தின் அறிவைத் திருப்பும் அதிகாரம் கொடுக்கப்பட்டால், அதன் விளைவுகள் எவ்வளவு விபரீதமாயிருக்குமென்று விவரிக்க வேண்டியதில்லை.

ஜெர்மனியின் மூளை, வாய், கை.

பிளான் போடுவது ஹிட்லர்; அதை இனிய குரலுடன் அழகாக எடுத்துச் சொல்லி ஜனங்களைக் கவர்ச்சி செய்யும் பிரசங்கி கோயபல்ஸ்; ராணுவ பலத்தால் நிறைவேற்றி வைப்பவர் பீல்ட்-மார்ஷல் கோயரிங்.

பவேரியா வாசியான **கோயரிங்** பிரஷ்ய ஐக்யத்தின் பிரதிநிதி என்று சொல்ல வேண்டும். ஜனனம் 1893 ஜனவரி 12-ந் தேதி, பவேரியாவில் உள்ள ரோஸன்ஹீம் என்ற ஊரில். குரூர சிந்தைக்குப் பேர் பெற்றவன்; ரத்தத்தில் திளைப்பவன். 1923-ம் வருஷம் மூனிக் புரட்சியில் துப்பாக்கி மட்டையால் மண்டையிலடித்து ஆளைக் கொல்லும்படி உத்தரவிட்ட புண்ணியவான் அவன்தான். 1932-ம் வருஷம் ஸ்ரீமதி கோயரிங் இறந்து போனாள். அதற்குச் சிறிது காலத்திற்கு முன்புதான் ரீஷ்டாக் (ஜெர்மன் சட்ட சபை) தலைவனானான். அதற்குப் பிறகு கட்சியில் உள்ளவர்களில் ஹிட்லரிடம் அதிகச் செல்வாக்கு உள்ளவன் அவன்தான். 1935 எப்பல் மாதம் பெர்லினில் கொஞ்சம் வாட்ட சாட்டமான நடிகை யொருத்தி ஸ்ரீமதி கோயரிங் ஆனாள். ரோமாபுரியிலே புராதன காலத்தில் கோலாகலமாக நடக்கும் கலியாணங்கள் போல் ஏகத் தடபுடலாக நடந்தது. ஹிட்லர் மாப்பிள்ளைத் தோழன். தம்பதிகளுக்கு 8000 பவுன் பெறுமான முள்ள பரிசுகள் கிடைத்தன. அன்றுதான் ஹார்ஸ்ட் வெஸ்ஸல் என்ற நாஜித் தலைவனைக் கொன்ற குற்றத்திற்காக எப்ஸ்டீன், ஜீக்ளர் என்ற இரண்டு அபேதவாதிகள் தங்கள் தலையை இழந்தனர். நாஜிக் கட்சித் தலைவர்களில் பலர், கலியாணத் தம்பதிகள் பெற்றுப் பெருகி வாழவேண்டு மென்று கொடுக்கப்பட்ட நரபலி என்று இச் சம்பவத்தைக் கொண்டாடிப் பூரித்தனர்.

1935-ம் வருஷம் கோயரிங் வகித்த பொறுப்புக்கள் வருமாறு: ரீஷ்வர் படையின், அதாவது ஜெர்மன் ராணுவத்தின் சேனாதிபதி. விமானப் படையின் சேனாதிபதி. போலீஸ் இலாகாவின் மந்திரி. பிரஷ்யாவின் பிரதம மந்திரி. மாஸ்டர் ஆப் ஹன்ட், ரீஷ் காட்டிலாகா பிரதம

உத்தியோகஸ்தர், டெலிவிஷன் இலாகா டைரக்டர் இத்யாதி....

இவ்விருவருக்கும் அடுத்தாற்போல் நாஜிக் கட்சியில் செல்வாக்கு உள்ளவன் **டாக்டர் பிரிக்.** ஹிட்லர் கூட்டிய முதல் மந்திரி சபையில் உள்நாட்டு மந்திரியாக்கப்பட்டு இது வரை அதே பொறுப்பை வகித்து வருகிறான். பள்ளிக் கூடங்கள், போலீஸ், உத்யோக இலாகா யாவும் அவன் கைக்குள். ஜெர்மன் நாட்டு நிர்வாகம் அவன் வசமே. 1877-ல் பலாட்டினேட்டில் பிறந்தான். முதலில் சட்டக் கல்வி பயின்றான். அதிகார யந்திரத்தின் பிரதிநிதி. சொன்னதைக் கேட்பது, ஒழுங்காக முறையாகச் செய்வது, தெளிவாகப் பேசுவது—இதுதான் அவன் குணம். அந்தரங்க சுத்தமான நாஜி என்று அவனை எல்லோரும் குறிப்பிடுவார்கள். கலைஞான விஷயங்களைக் கட்டுப்படுத்துவது என்று கட்சிப் போராட்டம். "எல்லாவிதமான கலைகளும் ஒருவிதமான பிரசாரமே—ஆகையால் அது என் இலாகாவைச் சேர்ந்தது" என்கிறான் கோபல்ஸ். வயிற்றுக்கடுப்புள்ள சித்தாந்தியான ரோஸன்பர்க், "அந்த இலாகா என்னுடையது" என்கிறான். அவன் அன்னிய நாட்டு இலாகா நிபுணன். கோயரிங், தானே பிரஷ்ய ராஜ்யத்தின் பொறுப்பெல்லாம் வகிப்பதனால், கலை நிர்வாக இலாகாவின் ஒரு பகுதி என்கிறான். கல்வி இலாகா மந்திரி ரஸ்ட், "அது என்னைத்தான் சேர்ந்தது" என்கிறான். பிரிக் இந்தக் கூட்டத்தில் கலையில் தனக்குக் கிடைத்த இடத்தைப் பிடித்துத் தொங்குகிறான்.

ருடால்ப் ஷெஸ் நாஜிக் கட்சியின் டெபுடி தலைவன். ஹிட்லரின் நேரடியான பிரதிநிதி. இலாகா இல்லாத மந்திரி. கோயரிங்குக்கும் ரீஷ்வருக்கும் ஷ்லீஷரின் கொலை சம்பந்தமாக ஏற்பட்ட மனத்தாங்கலின் போது சந்தர்ப்

பத்தை உபயோகித்துக்கொண்டு அவன் பதவியைக் கைப் பற்றிக்கொண்டிருக்கலாம். ஆனால் ஹெஸ் காரியதரிசியின் உத்தியோகத்திற்குத்தான் லாயக்கு. யூத வேட்டைக்காரன் ஜூலியஸ் ஸ்ட்ரீஷரையும் இந்த சந்தர்பத்தில் மறந்துவிட லாகாது. அவனும் ஒரு குட்டி ஹிட்லர்தான். பிராங்கோனியாவின் ரீஷ் கமிஸார். மிருகத்தனத்தின் அவதாரம் என்று சொல்லவேண்டும். 1933-ம் வருஷம் ஜூலை மாதம், ஹீல் பத்திரிகை கூறுகிறபடி, அப்புண்ணியவான், 250 யூதர்களை ஒரு வயலில் விட்டு, பல்லால் புல்லைப் பிடுங்கும்படி உத்தர விட்டான்.

A·4748·

"நான் சிறைக்குள் செல்லும்போதெல்லாம் குதிரைச் சவுக்கெடுத்துக் கொண்டுதான் போவேன். அங்கிருக்கும் சிறைவாசிகளில் பெரும்பாலோர் கும்பலின் கோபத்திற்கு ஆளாகாமலிருக்கும்படியாகப் பாதுகாப்பில் வைக்கப்பட்ட வர்கள். உதாரணமாக டாக்டர் ஸ்டீன்பர்க் என்ற உபாத்தியாயரை எடுத்துக்கொள்வோம். அவன் எவ்வளவு படாடோபமாக, பிரமாதமாகப் பேசுவான்! நானும் எனது சகாக்களும் அவனுடைய சிறைக்குள் சென்றோம். பள்ளிக்கூடத்துப் பையன் மாதிரி அழுதுகொண்டு என்னிடம் பேச ஆரம்பித்தான். வெளியே பெரும் பேச்சுப் பேசிய மனிதன் மாதிரி நடந்துகொள்ளவில்லை. நன்றாகச் சவுக்கால் வெளுத்தேன்."

இவ்வாறு இவன் பெருமை யடித்துக்கொண்டதாக அமெரிக்கப் பத்திரிகை யொன்று சொல்லுகிறது. பிராங்கோனியா ஜில்லாவில் (ஜனத்தொகை 22000) பேருக்குக் கூட யூதன் இல்லாமல் தான் ஆக்கிவிட்டதாகத் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளுவதில் ஸ்ட்ரீஷருக்கு அபாரப் பெருமை. அவன் படிப்பும் அப்படி அப்படித்தான். ஒரு உதாரணம் கொடுக்கிறேன். 1935-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் பெர்லினில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேச நேர்ந்

தது. அவன் பேசியதாவது: "இங்கிலாந்தில் வாழ்ந்த பிரபல யூதன் பெஞ்சமின் டிஸ்ரேலி பிரதம மந்திரியானுன். பிற்காலத்தில் லார்டு கிளாட்ஸ்டன் என்ற பெயரில் பிரபுத்துவம் அளிக்கப்பட்டது." இந்த மாதிரித் தப்பும் தவறுமாக உளறுவதில் எல்லே கிடையாது.

ஜெனரல் **வர்னர் எடுவாட் பிரிட்ஸ் வான் பிளோம்பர்க்** 1878-ம் வருஷம் ஸ்டகார்ட் என்ற இடத்தில் ராணுவ சேவையில் பிரபலம் பெற்ற ஒரு குடும்பத்தில் பிறந்தான். குடும்பத்தின் சம்பிரதாயப்படி ராணுவத்தில் சேர்ந்து படிப் படியாக உயர்ந்துவந்து, 1934-ம் வருஷம் கர்னல் ஜெனரல் பதவியை அடைந்தான். பொதுவாக நல்ல மனுஷ்யன். பல இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தவன். நாலு பாஷையும் பேசத் தெரியும். ராணுவ உத்தியோகஸ்தர்கள் சம்பிரதாயப்படி தலே மயிரைக் குறுகலாகக் கத்தரித்துக் கொள்ளாமல் நீளமாக வளர்த்துப் பின்புறம் ஒதுக்கிச் சீவி விட்டிருப்பான். பிளோம்பர்கின் சிறந்த தனிக் குணம் ஹிட்லர் மீது அவனுக்கு இருக்கும் பக்தி விஸ்வாசமே. அவனுக்கு நாஜிக் கட்சி பிரமாதமல்ல. ஹிட்லர் தான் பெரிசு. அவனுக்குக் கீழ் ஜெனரல் வர்னர் பிரீ ஹெர் வான் பிரிஷ் பதவி வகிக்கிருன். அவனுக்கு ராணுவம்தான் தெய்வம். ராணுவத்தின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிப்பவன் எவனுவது இருந்தால் அது அவன்தான். பிளோம்பர்கின் ஹிட்லர்-பக்தியைப் போன்றது பிரிஷின் தேசபக்தி. குட்டி ஹிட்லர்கள் இன்னும் பலர் இருக்கின்றுர்கள். அவர்களேப் பற்றி அவ்வளவு அவசியமில்லே.

ஹிட்லர் ரீஷ்வரின் ஆதரவை எதிர்பார்த்திருக்கிறுனு? ஆம்.

ரீஷ்வர் ஹிட்லருக்கு விசுவாசத்துடன் இல்லையா? ஆம், இருக்கிறது.

ஜெர்மனியை ஆளும் நிஜ அதிகாரி யார்? இக் கேள்வியே எழவில்லை. ஏனெனில் ரீஷ்வரும் ஹிட்லரும் சேர்ந்தே ராஜ்யத்தை ஆளுகின்றனர். அவர்கள் இடையில் சர்ச்சை ஏற்படாதிருக்கும்வரை, அதாவது அவர்கள் நோக்கம் ஒன்ருயிருக்கும்வரைஎல்லாம் ஒத்துப்போகும். ரீஷ்வரை வைத்துத்தான் ஹிட்லர் ஆளமுடியும்; அதுபோல ஹிட்லரை வைத்துத்தான் ரீஷ்வரும் இருக்க முடியும் என்பது உண்மை. இருவரும் ஒருவருக்கொருவர் உதவி. பலமுள்ள ஐக்கியமான ஜெர்மனியை ரீஷ்வர் விரும்புகிறது. தேசத்தில் மிகவும் பலமுடையவன் ஹிட்லரே. அவன் போனல் மறைமுகமான ராணுவ யதேச்சாதிகாரம் அல்லது குழப்பம் இந்த இரண்டில் ஒன்றுதான் ஏற்படும். இவ்விரண்டையும் அது விரும்பவில்லை. பிளோம்பர்க் யுத்த மந்திரியாக இருக்கும் வரை ரீஷ்வர் புரட்சி ஏற்படுமென்பதை யாரும் கனவுகாண வேண்டியதில்லை. தன்னைப் பலப்படுத்திக்கொள்ளத் தனது புயல் படையை நாசம் செய்து, ரீஷ்வருடன் கூடிக்கொண்டிருக்கிருன் ஹிட்லர். அது அவனைக் காட்டிக்கொடுத்தால் அவன்கதி அதோகதிதான். அப்படி ஏற்படாது. ஏனென்ருல் அவன் பூர்வத்தில் ரீஷ்வர் ஒற்றனுக இருந்தே சர்வாதிகாரியானன்.

---

9. அண்டைவீட்டில் தீவைத்தல்

வாமன-சர்வாதிகாரியான **டால்பஸ்** கொலை நாஜிகள் அன்னிய நாட்டில் கொண்டாடிய ரத்தக் கூத்து. ஜூன் 30-ந் தேதி ஜெர்மனியில் நடைபெற்ற நாடகம் ஜூலை 25-ல் மறுபடியும் ஜெர்மன் மண்ணில் நடிக்கப்பட்டது. கல கக்காரர்கள் யாவரும் ஹிட்லர் புயல்படைப் பிரதிநிதிகளே. பிரான்போர்டு சர்க்கார் காரியாலயத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றினர். முடிவு அவர்கள் எதிர்பார்த்தபடி இல்லாவிட்டாலும் நாடகம் மகா கோரமானதே. டால்பஸ், இரத்தப் பிரவாகம் அவ்வளவும் உடலைவிட்டு வடிய, வற்றி வதங்கிய வற்றல் பிணமாக ஒரு புறம் கிடக்கிறான். சதி காரர்கள் ஒருபுறம், சமரசம் ஒரு புறம்....சம்பவமே மகா கோரமானது, விபரீதமானது. அவ்வளவும் பட்டப்பகலில்.

இந்தப் புரட்சிக்குப் பின்னணியான ஆஸ்திரிய விவ காரங்களைத் தெரிந்துகொண்டால் தொடர்ச்சி சுளுவாக இருக்கும்.

ஆஸ்திரியாவை இரண்டு கூறுகப் பிரிக்கலாம். ஒன்று, அபேதவாதத்தில் கரை கண்டதாகச் சொல்லிக்கொள்ளும் தலைநகரம். மற்றது ஏழ்மையிலும், ரோமன் கத்தோலிக் மதப்பற்றிலும், பிற்போக்கிலும் வைதீகத்திலும் முன்னணியில் நிற்கும் கிராமப் புறங்கள். சேரிகளை ஒழித்ததாகவும், 'டியூபர்குலாஸிஸ்' விகிதத்தைக் குறைந்த பட்ச அளவிற்குக் கொண்டுவந்ததாகவும், பணக்காரர்களிடமிருந்து பணத்தைப் பிரித்து ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்ததாகவும், விசேஷத்தன்மை வாய்ந்த வைத்தியசாலைகளையும், முன் மாதிரியான கிண்டர்கார்டன் பள்ளிக்கூடங்களையும் அமைத்துக் கொண்டதாகவும் பெருமையடித்துக் கொண்ட

அந்த நகரத்தின் பிரஜைகள்தான் அபேத வாதிகள். கிராமப்புறத்தில் திரண்ட பட்டினிப் பட்டாளந்தான் பச்சைத் தொப்பிகள் அணிந்த ஹீம்வர் படைகள். ஹிட்லர் ஜெர்மனியில் உதயமாகும்வரை அபேதவாதத்திற்கும் கிராமப் புறங்களின் பிற்போக்குக்கும் உள்ள ஏற்றத்தாழ்வே ஆஸ்திரிய அரசியல் விவகாரங்களின் தூண்டுகோல்.

டால்பஸின் சதிக் கொலை ஏன் நிகழ்ந்தது என்பதற்கு ஹிட்லரின் சுய சரிதையிலேயே பின்வரும் காரணங்கள் காணப்படுகின்றன. ஹிட்லர் அந்த வருஷம்தான் சான்ஸலரானான். பல காரணங்களை உத்தேசித்து அதைத் தன் அதிகாரத்திற்குட்படுத்த விரும்பினான்.

1. அவனே ஆஸ்திரியவாசி. அந்த நாடு அவனை அவமதிப்பது அவனது தற்பெருமைக்குச் சகிக்கவில்லை.

2. 65 லக்ஷம் ஆஸ்திரிய ஜெர்மனியர்கள் ஸ்வஸ்திகா கொடியைக் கேலி செய்துகொண்டு இருக்கும்வரை நாஜிகளின் அகில ஜெர்மானியக் கொள்கை வெறும் வெளிமெய்ப்புப் பேச்சாகவே தோன்றுகிறது.

3. ஜெர்மனி படாடோபமான ஒரு அன்னிய நாட்டுக் கொள்கையை விரும்பியது. ஆதலால் உள்நாட்டு அதிருப்தியை மறைக்க ஆஸ்திரிய ஆக்கிரமிப்பு ஒரு சரியான சாக்குப் போக்கா யிருக்கும்.

4. ஆஸ்திரியாவில் இரும்புச் சுரங்கங்கள் அதிகம். ஸ்டிரியாவிலுள்ள எயிஸனர்ஸ் கனிகள் அவை. ஜெர்மனி உலோகப் பொருள்களுக்காகப் படும் தவிப்பை இதனால் தவிர்க்க முடியும்.

5 ஆஸ்திரியா வந்து ஜெர்மனியின் ஒரு பகுதியாகி விட்டால் அதன் மத்திய ஐரோப்பியக் கனவு பரிபூரணமாகி

விடும். அதன் மூலமாக செக்கோஸ்லோவேகியாவைச் சுற்றிவளைந்து கொள்ளலாம். ஹங்கேரியும் அதற்கப்புறமும் உள்ள விஸ்தீரணமான பிரதேசங்களில் நாஜிகளின் ஆக்ரமிப்பு சாத்தியமாகும்.

ஆரம்பத்தில் ஆஸ்திரியாவில் நாஜிகள் எண்ணிக்கை வெகு சொற்பம். 1930-ம்௵ நவம்பர்மீ பொதுத் தேர்தலின்போது அவர்களுக்கு ஒரு ஸ்தானம்கூடக் கிடைக்கவில்லை. அதே சமயத்தில் ஜெர்மனியில் ஹிட்லர் வசம் 60 லக்ஷம் ஓட்டுகள். ஹிட்லர் சான்ஸலரானான். ஆஸ்திரியாவில் நாஜிக் கொள்கை திடீரென்று உயர்ந்தது; ஆஸ்திரியர்களும் ஜெர்மனியர்தானே! நாஜிகள் தங்கள் முட்டாள்தனத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டிருந்தால் இவ்வளவு தூரம் வந்திருக்காது. ஆஸ்திரிய மக்கள் அப்போதே அவர்கள் வசம் சிக்கியிருப்பார்கள். டால்பஸூக்கோ அபேதவாதிகளுடன் எப்போதும் சண்டை. ஹீம்வர் ஆதரவோ மண் குதிரை. இதற்கெல்லாம் மேல் ஆஸ்திரிய மக்களின் இடிந்து போன மனப்பான்மை நாஜிகளின் கொம்மாளத்திற்குப் பெருத்த சாதகமா யிருந்தது. நாஜிகள் தங்கள் குணத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டார்கள். எல்லையைக் கடந்து விமானத்திலிருந்து துண்டுப் பிரசுரங்களை எறிந்து பிரசாரம் செய்தார்கள். துப்பாக்கிப் பிரயோகம், பயமுறுத்தல், தாக்குதல், வெடிகுண்டு வீச்சு, அவதூறு—எல்லாம் தினசரி சம்பவங்கள். இவ்வளவு சங்கடங்களையும் எதிர்த்துப் போராடினான் வாமன சர்வாதிகாரி டால்பஸ். நிலைமை நெருக்கடியாக ஆஸ்திரிய நாஜிகள் ஜெர்மனிக்கு ஓடி அங்கு ஆஸ்திரியப் படை ஒன்றைத் திரட்டினார்கள்.

இந்த நிலையில் இந்தக் குள்ளச் சாமிக்குத் தெற்கிலிருந்து ஆதரவு கிடைத்தது. தோணி வண்டியில் ஏறி

துவஜாரோஹணம் !

பிரன்ஸ்விக் என்ற விடத்தில் புதிதாகத் தயாரிக்கப்பட்ட ஒரு
நாஜிக் கொடிக்கு ஹிட்லர் நாஜி முறையில். சமஸ்காரம்
செய்கிருன். 1923-ம் வருஷம் எதிரிகளை வேட்டை
யாடும்போது ரத்தக் கறை படிந்துள்ள பழைய
கொடியைப் புதிய கொடியின் மேல்
படும்படி செய்வதுதான்
சமஸ்காரம்.

னால் வண்டி தோணியில் ஏறுதா? ஜெர்மன் சண்டைக்கு முந்தி இத்தாலியின் குடுமி ஆஸ்திரியாவின் கைக்குள் இருந்தது. இப்போது முஸோலீனி டால்பஸைத் தன் சட்டைப் பைக்குள் தூக்கிப் போட்டுக்கொண்டான். இத்தாலிக்கு அடுத்தாற்போல் ஆஸ்திரியா. அங்கு அசுர பலம் படைத்த பிரஷ்ய ஆட்சி முட்டிக்கொண்டு நிற்பதை விட இந்த ஆஸ்திரியச் சோனி மற்றொரு மோதலை ஒத்தி வைக்கும் என்பது முஸோலீனியின் நம்பிக்கை. அதனாலேயே முஸோலீனி இந்த நிலைமையை விரும்பினான். டால்பஸ் மூன்று முறை முஸோலீனியைச் சந்தித்தான். இருவர் நலங்களும் ஒன்றுபட்டன. பிரின்ஸ் எர்னஸ்ட் ருடிகர் வான் ஸ்டார்ஹெம்பெர்க் ஹீம்வர் படையின் தலைவன். அவனோடு ஒத்தாசைக்கு வியன்னா ராணுவத்தில் மாஜி உத்தியோகஸ்தனான மேஜர் எமில் பே அவன் கூட்டாளி. இவ்விருவர் ஆட்டங்களுக்கெல்லாம் இடங்கொடுத்துக் கொண்டிருக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது டால்பஸுக்கு.

ஆஸ்திரிய நாஜிகள் டால்பஸைத் தீர்த்துவிட்டு அவருக்குப் பதிலாக ரோமாபுரியில் ஆஸ்திரிய ஸ்தானீகராயிருந்த டாக்டர் ஆன்தான் ரெண்டலீனைச் சான்ஸலராக்கி விடுவது என்று தீர்மானித்தனர். சதிக் கோஷ்டியில் ஹிட்லரின் புயல்படை அங்கத்தினர் நாலு பேர், ஆஸ்திரிய ராணுவப் போலீஸ் இலாகா இவற்றைச்சேர்ந்த உத்தியோகஸ்தர் பலர் உண்டு. டால்பஸ் காபினெட் கூட்டம் நடத்தும் பொழுது திடீரென்று சர்க்கார் காரியாலயத்தைத் தாக்கிக் கைப்பற்றி அவ்வளவு பேரையும் அமுக்கிக்கொள்வது என்றபிளான். இதே சமயத்தில் சதிக்கோஷ்டியின் மற்றொரு பகுதி ரேடியோ ஸ்தாபனத்தைக் கைப்பற்றி ரெண்டலீன் சான்ஸல ராகிவிட்டான் என்று பத்து நிமிஷத்திற்

கொருமுறை செய்தி அறிவித்துக்கொண்டிருப்பது என்றும் பேச்சு. சர்க்கார் காரியாலய முற்றுகை இம்மி பிசகாமல் நடந்தேறியது. டால்பஸ் கொல்லப்பட்டான். தோள்பட்டையிலும் கழுத்திலும் காயம். அவன் உடனே சாகவில்லை. ரத்தம் பிரவாகமாகக் காயங்களின் வழியாய் வந்துகொண்டிருக்க, உடல் சுருங்கி வதங்க அங்குலம் அங்குலமாகக் கொல்லப்பட்டு மாண்டான். சதிகாரர்கள் வேலை வெற்றியடைந்ததென்றாலும் அவர்கள் எதிர்பார்த்த தலைவன் வரவில்லை. பாதியில் பதறிப்போய் ரெண்டலின் கம்பி நீட்டிவிட்டான். காத்திருந்த சதிகாரர்கள் அகப்பட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று. இந்த நெருக்கடியில் ஷுஸ்னிக் சான்ஸலரானான். இதே சமயத்தில்தான் வான் ஹிண்டன்பர்கின் அந்திம தசை. பிரசிடெண்டாவதில் மும்முரமாயிருந்த ஹிட்லர் இந்த விவகாரத்தில் சிரத்தையைக் குறைத்துக் கொண்டான்.

1936-ம் வருஷம் மார்ச்சுமீ 7உ திடீரென்று ஹிட்லர் தன் படைகளை அனுப்பி ரைன்லாந்து பிரதேசத்தை ஆக்ரமித்துக் கொண்டான்.—ஒரு முதல்தரமான ஐரோப்பிய நெருக்கடியை ஏற்படுத்தினான் என்று சொல்லவேண்டும். சமாதான உடன்படிக்கை ஷரத்துப் பிரகாரம் ரைன்லாந்தில் நிரந்தரமாகப் படை நிறுத்தலாகாது. ஹிட்லர் இவ்வாறு ஆக்ரமித்தது லொகார்னே உடன்படிக்கையை, அதாவது 1925-ம் வருஷத்திற்கப்புறம் ஐரோப்பிய சமாதானத்தின் உயர்ந்த தூண் என்று சொல்லப்பட்ட ஒன்றையே தகர்த்தெறிந்தான். ஹிட்லரின் இந்த வேலையைக் கண்டு பிரெஞ்சுக்காரர் சிலர் போர் தொடங்க விரும்பினர். ஆனால் அவர்களுக்குத் தைரியமில்லை. பிரிட்டிஷ் அரசியல் வாதிகளில் பலர் சமரசம் செய்துகொள்ள விரும்பினார்கள்,

செய்துகொண்டார்கள். இத்தாலியர்களோ அபிசீனிய யுத்த பளுவாலும் எண்ணெய் நிர்ப்பந்தத்தாலும் சங்கடப் பட்டுக் கொண்டிருந்ததனால் இந்த விஷயத்தில் கலந்து கொள்ளவே விரும்ப வில்லை.

இந்தத் திடும் பிரவேசத்தைக் கண்டு சர்வ தேச சங்க மும் ஐரோப்பிய வல்லரசுகளும் சும்மா இருந்தன. ஏனென் றால் சிறிதும் பதட்டத்துடன் நடந்துவிட்டால் வெடி மருந் துச் சாலையில் சுருட்டுப் பிடித்த கதையாய் முடிந்து விடு மென்று பயந்தனர். இவர்களது இந்தப் பயமே ஹிட்லரின் பாய்ச்சல்களுக்குப் பின் பலம். சர்வ தேச சங்கமோ சோகைபிடித்த நிரந்தர நோயாளி. உருப்படியான வேலைக்கு அதன் வசம் நம்பிக்கை வைப்பவன் பாடு ஆபத்துத்தான். ஹிட்லர் ஆஸ்திரியாவை மறந்துவிடவில்லை. தன் மத்திய ஐரோப்பியக் கொள்கையைப் பலப்படுத்திக்கொள்ள முஸோலினியிடம் ஊடாடுகிறான். இவ்விரு பேஸிஸ்ட் சர் வாதிகாரிகளும் வாதாபி வில்வலர்களாக ஐரோப்பிய அரசி யல் அரங்கத்தில் திரிகின்றார்கள். ஹிட்லரை முஸோலினி போய் பார்த்தான்; முஸோலினியை ஹிட்லர் வந்து பார்த் தான். இதற்கிடையில் ஷூஸ்னிக்குக்கு ஒரு வேட்டு. பட் டப்பகல் கொள்ளை மாதிரி ஆஸ்திரியா நாஜிகள் வசமாயிற்று, அதாவது 3-வது ரீஷினின் ஒரு பகுதியாக அமைந்தது. ஒரு காலத்தில் புனிதமான ரோமாபுரி சாம்ராஜ்யத்திற்கும், ரோம ஏகாதிபத்தியத்திற்கும், ஹாப்ஸ்பர்க் முடியரசுக ளுக்கும், நிலைக்களமாக இருந்த அபேதவாத வியன்னா, செயலொடுங்கி, நினைவொடுங்கி, நாஜியின் அடிமைக் கடிமை ஆகிவிட்டது. டாக்டர் இன்குஹார்ட் ஆஸ்திரிய ஆஸ்தியை ஹிட்லரின் கைப்பாவையாக நிர்வகிக்கிறார். பிஸ்மார்க்கின் 'ஆன்ஷ்லாஸ்' கனவு நிறைவேறியது. அத்துடன் கதை

முடிந்து விடவில்லை. செக் ஜெர்மனியரைப் புரட்சிக்குத் தூண்டி ஐரோப்பாவின் காட்சிச் சாலை என்று சொல்லத் தக்க, அல்லது மைனாரிட்டி ராஜ்யம் என்று சொல்லத்தக்க செகோஸ்லொவேகியாவையே விழுங்கிவிட முனைந்துவிட்டான் ஹிட்லர். மற்ற வல்வரசுகளும் கையில் நெருப்புப் படாமல் வேலை செய்ய நளின சமரஸம் பேசின. பற்றிய நெருப்பு ஒரே யடியாகப் பிடித்தெரிந்தது, செக்கும் ஹிட்லர் வசமாயிற்று.

ஹிட்லரின் கதை, பவுண்டில் கிடந்த ஜல்லிக் கட்டுக் காளை பிய்த்துக்கொண்டு போன மாதிரி, ஜெர்மனியை ஒரு வல்லரசு என்ற ஸ்தானத்திற்கு மறுபடியும் கொண்டுவந்து ஸ்தாபித்தது. இந்தப் பெரிய மாறுதலின் வெவ்வேறு படிகளையும், ஹிட்லர் கொண்டிருக்கும் கனவுகளையும் பற்றி விபரமாக அடுத்துவரும் அத்தியாயங்களில் கவனிப்போம்.

10. வெர்ஸேல்ஸ் கொள்ளை

"டான்ஸிக், கடற்பாதை, காலனிகள்!" ஜெர்மனி எங்கும் இன்று இந்தக் கூச்சல்தான் பிரமாதமாயிருக்கிறது. ஹிட்லரின் சிருஷ்டியான இன்றைய நவீன ஜெர்மனியின் கோரிக்கைகளையும், ஆர்ப்பாட்டங்களையும் கண்டு, உலகமே திகைக்கிறது. சூனியப் பிரதேசமான ரைன்லாந்துக்குள், ஹிட்லர் தன் துருப்புக்களை அனுப்பியபோது, ஜனநாயக நாடுகள் திகைப்படைந்தன. அந்தச் சம்பவம் பெரிதாக வளர்ந்து விடுமோ வென்று தோன்றிற்று. ஆனால், ரைன்லாந்து சம்பவம் 'பிசுபிசு' வென்று புகைந்து போய் விட்டது.

1938-ல், ஹிட்லர் செக்கோஸ்லோவேகியாவை ஜெர்னியுடன் சேர்த்துக்கொள்வதற்கு ஆரம்பித்தபோதுதான், அவனுடைய மத்ய ஐரோப்பிய ஆதிக்க இயக்கமும் உருவாக ஆரம்பித்ததென்று சொல்லலாம். அதிலிருந்து இன்று வரையில், ஹிட்லர் ஒவ்வொரு படியாக முன்னேறிச் சென்றுகொண்டே இருக்கிறான். அவனுடைய ஒவ்வொரு புதிய செய்கையையும், ஜனநாயக நாடுகள் பலமாகக் கண்டிக்கின்றன. ஆனால், அவனுடைய முன்னேற்றத்தைத் தடைப்படுத்த பிரிட்டனோ, பிரான்ஸோ துணிந்து முன்வரவில்லை. 1938-ல் ஏற்பட்ட செக்கோஸ்லோவேகிய நெருக்கடியின்போது, பிரிட்டன் யுத்தத்துக்குத் தயாராக இல்லையென்றும், அதனால்தான் மூனிச் ஒப்பந்தம் ஏற்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. இது எப்படி வேண்டுமானாலும் போகட்டும். அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால், அதன் பின்னர் நடந்த சம்பவங்களிலும் ஜனநாயக நாடுகள் துரிதமாக எதுவும் செய்ய முன்வர

வில்லை. இதன் காரணம் என்ன? ஜெர்மனியின் கோரிக்கைகள் நியாயமானவை என்று அவைகள் கருதுகின்றனவா?

இதைக் கவனிப்பதற்கு முன், மகா யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனி இருந்த நிலைமையைப் பற்றி சற்று பரிசீலனை செய்வோம். 1914—18-ல் நடந்த மகா யுத்தத்தின் பலனென்ன? யுத்தம் முடிந்தவுடன் ஏற்பட்ட ஜெர்மன் புரட்சியும், அரசியல் தடுமாற்றங்களும்தான் கண்ட பலன். ஒரு பெரிய யுத்தம் முடிந்த பிறகு, உண்மையான சமாதானத்தை ஸ்தாபிக்க விரும்பினால், தோற்கடிக்கப்பட்ட நாடுகளிலுள்ள ஜனநாயக சக்திகளை ஒன்று சேர்த்து, அவைகளின் வளர்ச்சிக்கு ஆதரவு கொடுக்க வேண்டும். இல்லாவிடில், யுத்தத்தால் சிதறுண்டு போன அந்நாட்டில், தோல்வியால் ஏற்பட்ட கஷ்டங்களின் விளைவாக அராஜகமும், ஸ்திரமற்ற தன்மையும்தான் ஏற்படும். யுத்தத்தில் ஜெயித்தவர்கள் இதைக் கவனித்தார்களா? இல்லை. நேச நாடுகளின் பிரதிநிதிகள் பாரிஸில் கூடி, ராஜதந்திர முறையில், சமாதான உடன்படிக்கை ஷரத்துகளை உருவாக்குவதில் முனைந்திருந்தார்கள். இனியாவது நிரந்தரமான ஒரு சமாதானத்திற்கு அஸ்திவாரம் போடவேண்டுமென்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படவே இல்லை. யுத்தத்தில் ஜெயித்தவர்கள் என்ற மமதையில், தோற்ற நாட்டிடமிருந்து, ஒவ்வொருவரும் எவ்வளவு பிடுங்கிக்கொள்ளலாம் என்பதிலேயே கவனம் செலுத்தினார்கள். "எரிகிற வீட்டில் பிடுங்கிய வரையில் ஆதாயம்" என்று கிடப்பதைச் சுருட்டுவதில் கண்ணாயிருந்தார்கள். 1918-ல் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சு வார்த்தைகள், 1919-ல்தான் உடன்படிக்கையாக முடிந்தது. சோர்வடைந்திருந்த ஜெர்மனி, 1919-

ஜூன் 28-ம் தேதி வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. தோற்ற நாட்டின் மீது வஞ்சம் தீர்க்கும் மனப்பான்மையுடனேயே உடன்படிக்கை நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. இந்த நிபந்தனைகள் தங்கள் நாட்டை வறட்சியாக்கிவிடும் என்பது ஜெர்மனியின் சார்பாக உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஜெர்மனி தோற்ற நாடு என்று எந்தெந்த வழிகளில் குத்திக்காட்ட முடியுமோ, அவ்வளவையும் நேசநாடுகள் செய்தன. அந்தக் காலத்தில் ஜெர்மனியில் ஆதிக்கத்திலிருந்த "ஜனநாயக சர்க்கார்" வேறு வழியில்லாமல், இந்த உடன்படிக்கையை ஒப்புக்கொண்டார்கள். அப்போது இருந்த குழப்பமான நிலைமையில், ஜெர்மனியில் பொதுஜன அபிப்பிராயம் என்று உருப்படியாக எதுவும் இல்லை. யுத்தம் நின்றதே அவர்களுக்குப் பெரிய ஆறுதலாயிருந்தது. எப்படி வேண்டுமானாலும் போகட்டும்; இந்த யுத்த பூதம் தொலைந்தால் போதுமென்ற மனப்பான்மையில் அவர்கள் இருந்தார்கள். குறிப்பிட்ட ஒரு சிலர்தான் அரசியல் பொறுப்புக்களை நிர்வகிக்க முடியுமென்பது ஜெர்மனியர்களின் நம்பிக்கை. அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களைத் தவிர, மற்றவர்களும் அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்ற முடியுமென்பதை அவர்கள் நம்பமாட்டார்கள். ஆகவே, ஆதிக்கம் வகிக்கும் கோஷ்டியினர் செய்து முடிக்கும் எந்தக் காரியத்தையும் அவர்கள் ஒப்புக்கொள்ளத் தயாராயிருந்தார்கள்.

வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையின் பலனாக, ஜெர்மனி பல முக்கியமான இடங்களை இழந்தது. கிழக்கே இருந்த ஸைலீஷிய நிலக்கரிச் சுரங்கங்களும், அதை யொட்டியிருந்த இதரக் கைத்தொழில்களும் ஜெர்மனியிடமிருந்து

பறிக்கப்பட்டன. மேற்கே லொரேய்னிலும், ஸாரிலும், இருந்த உலோகச் சுரங்கங்களையும் ஜெர்மனி இழந்தது. ஜெர்மனியின் காலனிகள் பிடுங்கிக் கொள்ளப்பட்டன. வெளிநாட்டு வர்த்தகமும் பாழாயிற்று. இந்தச் சமாதானக் கொள்ளையில் பிரிட்டனுக்குத்தான் அதிக லாபம் கிடைத்தது. யுத்தத்தில் ஜெர்மனிக்கு எதிராகச் சண்டைபோட்ட ஒவ்வொரு நாட்டுக்கும், ஏதோ கொஞ்சம் கொஞ்சமாவது பங்கு கிடைத்தது. பிரான்ஸ் மீண்டும் அல்ஸாஸ் லொரேய்னை எடுத்துக்கொண்டது. இத்துடன் நிற்கவில்லை. யுத்த ஈடு என்ற பெயரில், ஜெர்மனி மீது பிரம்மாண்டமான கடன் சுமை ஒன்று ஏற்றப்பட்டது. யுத்தம் நின்ற பிறகு கூட, ஒன்பது மாதங்கள் வரையில், யுத்தகால நிலைமையே நீடித்திருந்தது. நேச தேசத்தார்கள், ஜனநாயகத்தின் பிரதிநிதிகள் என்று வரவேற்கப்படுவதற்குப் பதிலாக, ஜெர்மனியையே அழிக்க வந்திருக்கும் யமகிங்கரர்களாக பாவிக்கப்பட்டார்கள். இந்த உணர்ச்சி அதிகரித்து விட்டதால், ஜெர்மனியில் ஸ்திரமான, பார்லிமெண்டரி நிர்வாக முறையை ஸ்தாபிப்பதென்பது அசாத்தியமாய் விட்டது. ராணுவ மமதையை அடக்கவேண்டும்; தன்னுடைய நேசநாடான பிரான்ஸுக்கு உதவி செய்யவேண்டும், என்ற உயர்ந்த லக்ஷியங்களுடன் யுத்தத்தில் கலந்துகொண்ட பிரிட்டனுக்கு, யுத்தத்தில் ஜெயித்த பிறகு, ஏகாதிபத்தியப் பேராசை தோன்றி விட்டது. சகல தேசங்களின் ஒத்துழைப்புடனும், ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்ற அடிப்படையுடன், 1918—19-ல் பிரிட்டன் ஒரு புதிய உலக சம்பிரதாயத்தைச் சிருஷ்டித்திருக்க முடியும். ஆனால், அதற்கு ஜெர்மனியையும் சம அந்தஸ்துள்ள ஒரு நாடாகப் பாவித்திருக்க வேண்டும். ஜெயித்தவர்கள் இதை விரும்பவில்லை. ஜெர்மனி சர்வதேச சங்கத்தில் சேர அனுமதிக்கப்படவில்லை.

சகிக்க முடியாத யுத்த ஈட்டுச் சுமையும், ரைன்லாந்துப் பிரதேசம் துருப்புகள் வசமிருந்ததும்தான் ஆரம்பத்தில் ஜெர்மனி அமைதியாக முன்னேறுவதற்குத் தடையாயிருந்த இரண்டு முக்கிய காரணங்களென்று சொல்லலாம். யுத்த ஈட்டுக்காக ஜெர்மனி கொடுத்துக்கொண்டிருந்த தவணை, பிரெஞ்சு பிரதம மந்திரி பாய்ன்கரேக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆகவே, நிலக்கரி, இரும்புச் சுரங்கங்கள் நிறைந்த ரூர் ஜில்லாவைப் பிடித்துக்கொள்வதென்று பாய்ன்கரே தீர்மானித்தார். 1923 ஜனவரி 11-ம்வ யன்று பிரெஞ்சுத் துருப்புகள் ரூருக்குள் பிரவேசித்தன. அங்கு நிராயுதபாணிகளா யிருந்த ஜனங்களுக்கு பிரெஞ்சுக்காரர்கள் இழைத்த கொடுமைகளை ஜெர்மனியர் சுலபத்தில் மறக்க மாட்டார்கள். உடன்படிக்கைக்குப் பிறகு, ஜெர்மனியும் பிரான்ஸும் நேசநாடுகள் என்றுதான் அர்த்தம். இருந்தாலும், ரைன்லாந்தில் தனியாக சுதந்தரமான குடியரசு ஒன்று ஸ்தாபிக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்வதற்கு, பிரெஞ்சு அதிகாரிகள் ஜெர்மனியர்களைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார்கள். வெர்ஸேல்ஸ் உடன்படிக்கைக்குப் பிறகு பெரிய வல்லரசுகள் ஜெர்மனியை லக்ஷியம் பண்ணவே யில்லை. ஜெர்மனியை மறந்துவிட்டன என்று கூடச் சொல்லலாம். 1935-ம் வருஷத்திய இந்திய சர்க்கார் சட்டம் நிறைவேறியதுடன் இந்தியப் பிரச்னையே தீர்ந்துவிட்டதென்று பிரிட்டிஷார் சொல்லிக்கொண்டிருக்கவில்லையா? அப்போது ஜெர்மனி விஷயத்தில் அப்படித்தான் நடந்துகொண்டார்கள்.

யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனியில் ஏற்பட்ட குடியரசு சர்க்கார் மிகவும் பலஹீனமா யிருந்தது. ஜெர்மனியிலும், அதற்குப் பூர்ண ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. வெளி

நாட்டினரும் அதற்கு மதிப்புக் கொடுக்கவில்லை. அப்போது ஜெர்மனியில் இருந்த பொது உடைமைக்காரர்களுக்கு, ருஷியப் பொது உடைமைக்காரர்களைப் போல், அதிகாரத்தைப் பறித்துக்கொள்ளக் கூடிய அவ்வளவு சக்தி இல்லை. மேலும், தொழிலாளர்கள்மீது விதிக்கப்படும் வரித் திட்டங்களை எதிர்ப்பதற்கு மாத்திரம் அவர்கள் மற்ற கக்ஷிகளுடன் சேருவார்களே யொழிய அரசியலில் பிற்போக்காயிருப்பவர்களை விரட்டுவதற்கு மற்றவர்களுடன் சேர அவர்கள் தயாராயில்லை.

ஒரே குழப்பமாயிருந்த இந்த நிலைமையில், 1923-ல், **ஸ்டிரெஸ்மன்** என்பவர் ஜெர்மனியின் வெளிநாட்டு மந்திரியானார். அதிலிருந்து ஜெர்மனியில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாயிற்றென்று சொல்லலாம். ஸ்டிரெஸ்மன் காலத்தில் முக்கியமான மூன்று சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

1. ஜெர்மன் பொருளாதார நிலைமையைப் புனருத்தாரணம் செய்வதற்கு என்ன செய்யலா மென்பதைப் பற்றி ஆலோசிப்பதற்காக, அமெரிக்க நிபுணர் ஜெனரல் டாஸ் தலைமையில், ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இந்தக் கமிட்டியின் சிபார்சுகள், 1924 ஆகஸ்ட் 30-ம்வ வல்லரசுகளால் ஒப்புக்கொள்ளப் பட்டன. இதன் பலனாக நிதி நிர்வாகத்தில் ஜெர்மனிக்குச் சுதந்திரம் கிடைத்தது.

2. புதிய பிரெஞ்சு ஜெர்மன் உறவுகள் சம்பந்தமாக 1925 ஜனவரியில், ஸ்டிரெஸ்மன் சில யோசனைகள் சமர்ப்பித்தார். இதன் பலனாக, 1925 அக்டோபர் 16-ம்வ லொகார்னோ ஒப்பந்தம் முடிவடைந்தது. எதற்கும் பலாத்காரத்தை உபயோகிப்பதில்லை; தகராறுகளைச் சர்வதேச

சங்கத்தின் மத்யஸ்தத்துக்கு விட்டுவிடுவது; பழிவாங்கும் எண்ணத்துடன் ஜெர்மனி எதிர்காலத்தில் யுத்தத்தில் இறங்குவதில்லை. இவைதான் லொகார்னே ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள். ஜெர்மனியிலுள்ள சில பிற்போக்கா ளர்கள் இதைப் பலமாக எதிர்த்த போதிலும், ஸ்டிரெஸ்மன் துணிந்து இந்த ஒப்பந்தத்தை முடித்தார்.

3. லொகார்னேவைத் தொடர்ந்து, 1926 செப்டம்பர் 10-ம் தேதி, ஜெர்மனி சர்வதேச சங்கத்தில் மெம்பராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

எட்கார் ஆன்ஸல் மௌரர் என்பவர் எழுதியிருக்கும் 'ஜெர்மனி கடிகார முள்ளைப் பின்னல் திருப்புகிறது' என்ற புஸ்தகத்தில், ஸ்டிரெஸ்மன் காலத்தை 'நிறைவேற்று தல் சகாப்தம்' என்று குறிப்பிட்டிருக்கிருர். 1929-ல் ஹேக் மகாநாட்டுக்குப் போய்விட்டு ஸ்டிரெஸ்மன் திரும் பியபோது, ஹிட்லரும் ஹியூகன்பர்க்கும் சேர்ந்து ஸ்டி ரெஸ்மன் கோஷ்டிக்கு விரோதமாக ஜனங்களிடம் பெரிய மகஜர் ஒன்றில் கையெழுத்து வாங்கிக் கொண்டிருந்தார் கள். ஹேக் மகாநாட்டுக்குப் போய்விட்டுத் திரும்பிவந்த கொஞ்ச காலத்திற்குள்ளாகவே, அதாவது, 1929 அக் டோபர் 3-ம் தேதி ஸ்டிரெஸ்மன் இறந்தார். ஸ்டிரெஸ்ம னின் கொள்கையினல்தான், யுத்தத்திற்குப் பிறகு, ஜெர் மனி பொருளாதாரத் துறையில் தலைதூக்க முடிந்தது. ஹேக் மகாநாட்டின் பலனுக, ஜெர்மனியின் யுத்தக் கடன் கள் மேற்கொண்டு குறைக்கப்பட்டன. ஜெர்மனியிலிருந்த அன்னியத் துருப்புகள் வாபஸ் பெறப்பட்டன. 1930 ஜூன் 30-ம் தேதியன்று, (வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையில் விதிக்கப்பட்டுள்ளதற்கு நான்கு வருஷங்களுக்கு முன்பா கவே) கடைசி பிரெஞ்சுத் துருப்புகள் ஜெர்மனியை விட்டு

வெளியேறின. இது ஜெர்மனியில் பெரிய தேசீய உற்சவ மாகக் கொண்டாடப்பட்டது. ஸ்டிரெஸ்மனின் நிதான மான கொள்கைதான் இதற்குக் காரணம். ஆனால், ஸ்டிரெஸ் மன் இந்தச் சந்தோஷ சம்பவத்தைக் கண்ணாரக் கண்டு களிக்கக் கொடுத்துவைக்கவில்லை.

1929 முதல் 1931 வரையில், ஜெர்மன் பொருளாதார நிலைமை மிகவும் கேவலமா யிருந்தது. 1930-ல் முல்லரின் கூட்டு மந்திரிசபை ராஜிநாமா செய்தது. டாக்டர் புரூயனிங் மற்றொரு கூட்டு மந்திரிசபையை அமைத்தார். ஆனால், அவருடைய கடுமையான வரிக்கொள்கைக்கு ஆதரவு கிடைக்கவில்லை. ஆகவே; டாக்டர் புரூயனிங், பிரஸிடென்ட் ஹின்டன்பர்க்கிடமிருந்து அவசரச் சட்டங்களியற்றும் அதிகாரங்களைப் பெற்று, நிர்வாகத்தை நடத்திவந்தார் என் றும், அவசரச் சட்டங்களின் மூலம் நிர்வாகத்தை நடத்தும் பழக்கம் இந்தச் சமயத்தில்தான் ஆரம்பமாயிற்று என்றும் நான்காவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட் டிருக்கிறது.

1930 செப்டம்பரில் ஜெர்மன் பார்லிமென்ட் (ரீஷ்ஸ் டாக்) தேர்தல்கள் நடைபெற்றன. இதில் ஹிட்லரின் நாஜிக் கக்ஷிக்கு 65 லக்ஷம் வோட்டுகளும், பொது உடை மைக்காரர்களுக்கு 45 லக்ஷம் வோட்டுகளும் கிடைத்தன. இந்தத் தேர்தல் முடிவுகளைக் கவனித்தபோது, பார்லிமென் டரி நிர்வாகத்தை விட, சர்வாதிகார ஆக்ஷி முறைக்குத்தான் ஜெர்மனியில் ஆதரவு வளர்ந்து வருகிற தென்பது தெரிந்தது. ஏனென்னில், நாஜிகளோ, பொது உடைமைக்காரர்களோ, யார் அதிகாரத்துக்கு வந்தாலும் சர்வாதிகாரந்தான் ஏற்ப டும். இத்தேர்தல், ஜெர்மனியின் நிதி நிலைமையை மிகவும் பாதித்தது. ஜெர்மனிக்குக் கடன் கொடுத்திருந்தவர்கள் அவசர அவசரமாகத் தங்கள் பணத்தைத் திருப்பிக் கேட்

டார்கள். இது மிகவும் நெருக்கடியான நிலைமையை உண்டு பண்ணிற்று. வெளி நாட்டினர் தங்கள் பணங்களை வாபஸ் பெற்றதால், ஜெர்மன் கைத்தொழில்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. ஜெர்மன் பிரஸிடென்டான வான் ஹிண்டன் பர்க், அமெரிக்க குடியரசுத் தலைவரான ஹூவரிடம் இதைப் பற்றி முறையிட்டுக்கொண்டார். ஒரு வருஷத்திற்கு யுத்தக் கடன் தவணைகளை நிறுத்தி வைக்கலா மென்று ஹூவர் யோசனை சொன்னார். 1931-ல் ஜெர்மனி ஒரு மாதிரியாக இந்த நெருக்கடியிலிருந்து தப்பிற்று. யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனி இருந்த நிலைமை இதுதான். நிலையாக ஒரு கொள்கையை ஸ்தாபித்துக்கொள்ள முடியாத நிலைமையில் அந்நாடு இருந்தது. அத்துடன் 1931 முதல் இருந்த உலக நிலைமையும் ஹிட்லருக்கு ரொம்ப சாதகமாயிருந்தது.

11. நிறைவேறிய முதற் கனவு

1932-ம் வருஷத்தில்தான் ஹிட்லர் தீவிரமாக முன்னணிக்கு வந்தானென்று சொல்ல வேண்டும். அதற்கு முன்பு, ஹிட்லரின் நாஜிக் கக்ஷி, தேர்தல்களில் போட்டி போட்டதைத் தவிர, தேசீய விவகாரங்களில் அவர்களுக்கு அதிகச் செல்வாக்கு எதுவும் இருந்ததில்லை. 1932-ல் ஜெர்மன் பிரஸிடென்ட் தேர்தல் நடைபெற்றது. அப்போது மார்ஷல் வான் ஹின்டன்பர்க் ஜெர்மன் பிரஸிடென்டாயிருந்தார். அந்தச் சமயத்தில் அவருக்கு வயது 85. ஜனங்களுக்கு அவரிடம் நல்ல மதிப்பும், மரியாதையும் இருந்தது. அந்த வயதில் அவர் மறுபடியும் தேர்தலுக்கு நிற்க விரும்பவில்லை. ஆயினும், நண்பர்களின் வற்புறுத்தலுக் கிணங்க மறு தேர்தலுக்கு நின்றார். அவருடன் யாரும் போட்டி போடமாட்டார்களென்றே பொதுவாக எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், ஹிட்லர் அவருடன் போட்டி போட்டான். இது ஜெர்மனி யெங்கும் பெரிய ஆச்சரியத்தை விளைவித்தது.

மார்ச் 13-ம் தேதி தேர்தல் நடந்தது. ஹின்டன்பர்க்குக்கு18,661,736 வோட்டுகளும், ஹிட்லருக்கு11,338,571 வோட்டுகளும் கிடைத்தன. மற்றொரு பொது உடமைக் காரருக்கு சுமார் 50 லக்ஷம் வோட்டுகள் கிடைத்தன. சட்டப்படி மொத்த வோட்டுகளில் ஹின்டன்பர்க்குக்கு மெஜாரிடி கிடைக்காததால், இரண்டாவது 'பாலட்' நடைபெற்றது. இதில் ஹின்டன்பர்க் தேர்ந்தெடுக்கப்பட்டார். இத் தேர்தலில் ஹிட்லருக்கு முதல் தேர்தலில் கிடைத்ததைவிட ஏராளமான வோட்டுகள் அதிகமாகக் கிடைத்தன. தேர்தல் சமயத்தில் ஹிட்லரின் புயல் ப்படைகள் பல அட்டூ

ழியங்கள் செய்தன. ஹின்டன்பர்க் இரண்டாம் முறை பிரஸிடென்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன்தான் புயல் படையைக் கலைத்துவிட வேண்டுமென்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஏப்ரல் 24-ம் தேதி நடைபெற்ற தேர்தல்களில் நாஜிகளுக்கு ஏராளமான ஸ்தானங்கள் கிடைத்தன. இதற்கு ஒரு மாதத்திற்குப் பிறகு சான்ஸலர் புருயனிங்குக்கும், ஹின்டன்பர்க்குக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு, புருயனிங் ராஜிநாமா செய்தார். பார்லிமென்ட் கலைக்கப்பட்டது. பழைய பிரபுக்கள் வம்சத்தைச் சேர்ந்த பலரைச் சேர்த்துக்கொண்டு, வான் பேப்பன் புது மந்திரி சபை அமைத்தார். புயல்படை மீதிருந்த தடை நீக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஜெர்மனியில் தெருச் சண்டைகளும், அரசியல் கொலைகளும் அதிகமாயின. பேப்பனும் அவசரச் சட்டங்கள் மூலம் நிர்வாகத்தை நடத்த முயற்சித்தார். ஆனால், ஜெர்மன் பார்லிமென்ட் பூராவுமே இவரை எதிர்த்தது.

1932 தேர்தலுக்குப் பிறகு, ஹிட்லருக்கு உதவி சான்ஸலர் பதவி அளிக்கப்பட்டது. ஆனால், ஹிட்லர் அதை ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கவில்லை. பார்லிமென்டில் அதிக மெம்பர்களையுடைய ஒற்றைக் கக்ஷியின் தலைவர் என்ற ஹோதாவில், தனக்குச் சான்ஸலர் பதவியும், பூர்ண அதிகாரங்களும் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டான். ஹிட்லர் இப்படிக் கேட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை. முஸோலினி ரோம் நகரத்தின் மீது படையெடுத்துச் சென்றதைத் தொடர்ந்து அவனுக்கு என்ன அந்தஸ்து அளிக்கப்பட்டதோ, அதே அந்தஸ்து தனக்கும் வேண்டுமென்று ஹிட்லர் கேட்டான்.

முஸோலினியிடம், ஹிட்லருக்கு ரொம்பப் பிரேமை யுண்டு. வீட்டுக்குள்ளிருக்கும் சத்துருவை அழிப்பது வெளியேயுள்ள சத்துருக்களைத் தாக்குவதற்குத் தயார் செய்வதாகும் என்பது ஹிட்லரின் சித்தாந்தம். முஸொலீனி யைப்பற்றி, ஹிட்லர் தன் சுயசரிதையில் பின் வருமாறு எழுதியிருக்கிறான் :

"ஆல்பஸ் மலைக்குத் தெற்கேயுள்ள அந்தப் பெரிய மனிதர் (முஸொலீனி) தம் ஜனங்களிடமுள்ள அத்யந்தப் பிரியத்தினால், இத்தாலிக்குள்ளிருந்த விரோதிகளிடம் சமரசங்கள் செய்துகொள்ளவில்லை. சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் அவர்களைத் தொலைக்க முயற்சித்தார். ஆகவே, அவரிடம் எனக்கு மிகுந்த மரியாதை ஏற்பட்டது. முஸொலீனி, இத்தாலியை மார்க்ஸிஸ்டுகளுடன் பங்குபோட்டுக் கொள்ள விரும்பவில்லை. தம் தேசத்தை அவர்களிடமிருந்து காப்பாற்ற விரும்பினார். இந்த உறுதிக்காக அவர் உலகத்தின் மகாபுருஷர்களில் ஒருவராகக் கொண்டாடப்படுவார்."

முஸொலீனியிடம் இவ்வளவு பிரேமையுள்ள ஹிட்லர் அரசியலில் அவரைப் பின்பற்ற நினைப்பது இயற்கைதானே. ஆனால் இத்தாலிய மன்னர் முஸொலீனிக்குப் பணிந்தது போல், பிரஸிடெண்ட் ஹிண்டன்பர்க் ஹிட்லருக்குப் பணிய மறுத்துவிட்டார்.

"சான்ஸலர் என்ற பட்டத்திற்கு நான் ஆசைப்படவில்லை. ஜெர்மன் மக்களுக்குத் தலைமை வகித்து, நாட்டை நடத்திச் செல்லுவதையே நான் விரும்புகிறேன். எனக்கு ஒன்றும் நேராதென்பது என் நம்பிக்கை. நான் கடவுளின் தூதன்" என்று ஹிட்லர் மூனிக்கில் செய்த ஒரு பிரசங்கத்தில் சொன்னான்.

ரோம் சர்வாதிகாரி



முஸொலீனி

செப்டம்பர் மாதத்தில் ரீஷ் சபையில் (ஜெர்மன் பார்லி மென்ட்) சான்ஸலர் வான் பேப்பனுக்கும், நாஜிக்கக்ஷிக்கு மிடையே கடுமையான தகராறு ஏற்பட்டது. சர்க்கார் தோல்வி நிச்சயம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ரீஷ் சபையைக் கலைத்துவிட்டதாக வான் பேப்பன் அறிவித்தார்.

நவம்பர் மாதத்தில் ரீஷ் தேர்தல்கள் நடைபெறவேண் டும். அதற்கு முன்பு ஹிட்லர் செய்த பிரசங்கங்களில், தன் வெளிநாட்டுக் கொள்கை என்னவென்பதை விரிவாகச் சொல்லிக்கொண் டிருந்தான். பிரான்ஸுடன் சமரசம் செய்துகொள்வது பற்றி அவன் ஒன்றுமே பிரஸ்தாபிக்க வில்லை. பிரான்ஸ், ஜெர்மனியின் ஜன்ம விரோதி என்பது ஹிட்லரின் உறுதியான நம்பிக்கை. ஆனால், பிரிட்டனுடனும் இத்தாலியுடனும் நெருங்கி ஒத்துழைப்பதே தன் நோக்க மென்று அறிவித்தான். ஆயுத விஸ்தரிப்புச் செய்வதில்லை என்று ஜெர்மனி கட்டுப்படுத்திக் கொள்வதை ஹிட்லர் ஆத ரிக்கவில்லை.

நவம்பர் தேர்தலில் நாஜிகளுக்கு 196 ஸ்தானங்கள் கிடைத்தன. மெஜாரிடி கக்ஷியின் தலைவனை ஹிட்லருக் குச் சான்ஸலர் பதவி யளிக்கப்பட்டது. ஹிட்லருக்கு இப் போது தன் சரக்கின் மதிப்பு நன்றாகத் தெரிந்துவிட்டது. பிரஸிடென்டின் பூர்ண அதிகாரங்களும் தனக்குக் கொடுக் கப்படுவதா யிருந்தால்தான், சான்ஸலர் பதவியை ஏற்றுக் கொள்ள முடியுமென்று ஹிட்லர் கண்டிப்பாகச் சொல்லி விட்டான். ஆனால், பழைய பெருச்சாளியான ஹின்டன் பர்க் இது எங்கு கொண்டுபோய் விடுமென்பதை நன்கு அறிந்திருந்தார்.

“ஒரு தனிக் கக்ஷியின் தலைவருக்கு என்னுடைய பிரஸிடென்ட் அதிகாரங்களைக் கொடுக்க முடியாது. அந்த அதிகாரங்களுடன் அமைக்கப்படும் ஒரு மந்திரி சபை, கக்ஷி சர்வாதிகாரத்தில் கொண்டுபோய் விட்டுவிடும். அந்த நிலைமை ஜெர்மனிக்கு நல்லதன்று” என்று கிழவர் சொல்லிவிட்டார்.

1932 டிஸம்பரில், ஜெனரல் வான் ஷ்லீஷர் மந்திரி சபை அமைத்தார். புரூயனிங், வான் பேப்பன் இருவருக்கும் நேர்ந்த கதியே ஷ்லீஷருக்கும் நேர்ந்தது. எந்தத் தேசத்தின் சரித்திரத்தைப் பார்த்தாலும், ஏதாவது ஒரு சமயத்தில், “இனி என்ன?” என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கலாம். பழைய அரசியல் வாதிகள் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவராக வீழ்ச்சி யடைந்தார்கள். இனி நிர்வாகத்தை யாரிடம் ஒப்படைப்பது என்பதே வயோதிக ஹின்டன்பர்க் முன்னிருந்த பிரச்னை.

1933-ம் வருஷம் பிறந்தது. ஹிட்லருக்கும், நாஜிக் கக்ஷிக்கும் இப்போதுதான் சுக்ரதசை பிறந்ததென்று சொல்ல வேண்டும். ஷ்லீஷரின் வீழ்ச்சிக்குப் பிறகு, ஹிட்லரைத் தவிர வேறு யாருமில்லை. அவருடைய ராஜீநாமாவுடன் ஜெர்மனியிலும், ஜனநாயக ஆட்சி செத்து மடிந்தது.

1933 ஜனவரி 30-ம் தேதி ஹிட்லர் சான்ஸலராக நியமிக்கப்பட்டான். நாஜிகள்மட்டு மில்லாமல், இதர மக்களையும் மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ளவேண்டு மென்று ஹின்டன்பர்க் கேட்டுக்கொண்டார். மேலும், எதைச் செய்வதா யிருந்தாலும் ரீஷின் அங்கீகாரத்தைப் பெறவேண்டு மென்றும் வற்புறுத்தினர். ஹிட்லர் இதற்குச் சம்மதித்

தான். அதோடு மட்டுமில்லை. "இதென்ன, பழைய ரீஷ் சபைதானே? புதிய தேர்தல் நடத்தி, தேச மக்களின் அங்கீகாரத்தையே பெறுகிறேன்!" என்று ஹிட்லர் சொன்னான். ஹிட்லரின் இந்த ஜனநாயக உணர்ச்சியைப் பார்த்து ஹின்டன்பர்க் மனமகிழ்ந்து போனார். தேசிய வாதிகளையும் சேர்த்துக்கொண்டு ஹிட்லர் ஒரு மந்திரி சபை யமைத்தான். இதில் வான் பேப்பன் உதவி சான்ஸலராக நியமிக்கப்பட்டார். அவரைத் தவிர ஐந்து தேசிய வாதிகள் மந்திரி சபையில் எடுத்துக்கொள்ளப் பட்டார்கள். ஆனால், முக்கியமான பதவிகளெல்லாம் நாஜிகளிடமே இருந்தன.

அப்போது ஜெர்மனியில் அமுலிலிருந்த வேமர் குடியரசு அமைப்பின் கீழ் ஹிட்லர் அமைத்த முதல் மந்திரி சபை இதுதான். இதுதான் அவனுடைய கடைசி மந்திரி சபையும். இதன் பிறகு, ஹிட்லர் சர்வாதிகாரியாய் விட்டான்.

ஹின்டன்பர்க்கின் அனுமதியுடன், மார்ச் மாதத்தில் மீண்டும் ரீஷ் தேர்தல் நடைபெற்றது. ஹிட்லர் இதில் பெரிய மெஜாரிடி பெற விரும்பினான். அப்போதிருந்த அரசிய லமைப்பின் கீழ், அரசியலமைப்பில் ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமானால், மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிடி வேண்டும். வோட் பெட்டியின் ஏமாற்றங்கள் யாவரு மறிந்தவையே. ஆகையால், அதில் நிச்சயமாகத் தனக்கு வெற்றி கிடைப்பதற்காக, ஹிட்லர் பல தந்திரங்கள் செய்தான். தேர்தலுக்கு முன்பு கடுமையான நாஜிப் பிரசாரம் நடந்தது. நாஜிகள் ஆதிக்கம் பெறவில்லையென்றால், நாடு பொது உடைமைக் கொள்ளைக்காரர்களிடம் விழுவதைத் தவிர வேறு வழியில்லையென்று பறைசாற்றப்பட்டது.

மார்ச் 5-ம் தேதி தேர்தல். பிப்ரவரி 27-ம் தேதி யன்று திடீரென்று ரீஷ்ஸ்டாக் கட்டடம் தீப்பற்றி எரிந்த விபரம் முன்னால் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பலனை மட்டும் இங்கு கவனிப்போம். ஹிட்லரின் அபி லாஷையைப் பூர்த்தி செய்துவைக்க அது உதவியது. அதைக் கண்டு ஜெர்மன் மக்கள் திகிலடைந்து விட்டார்கள். ஒரு டச்சுப் பொது உடைமைக்காரன்தான் இந்தச் சம்ப வத்திற்குக் காரணமென்றும், பொது உடைமைக்காரர்க ளின் இந்தச் சூழ்ச்சியைப் பற்றிப் பல தஸ்தாவேஜுகள் தங்களிடம் கிடைத்திருப்பதாகவும் சர்க்கார் அறிவித்தார் கள். என்ன தஸ்தாவேஜுகளோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்! இன்றுவரை அவை பிரசுரிக்கப்படவில்லை. அன்றிரவே 5000 பொது உடைமைக்காரர்கள் சிறைப்படுத் தப்பட்டார்கள். தன்னுடைய அரசியல் எதிரிகளின் வாயை அடக்கவேண்டுமென்பதே ஹிட்லரின் நோக்கம். இந்தச் சம்பவம் அவனுக்கு நன்றாக உதவி புரிந்தது. பொது உடைமைக்காரர்களுக்கு அதிகாரம் கிடைத்தால், இன்னும் என்னென்ன அட்டூழியங்கள் நடக்குமோ வென்று ஒரு பூச்சாண்டி கிளப்பி விடப்பட்டது. பொது உடைமை ஆபத்திலிருந்து ஜெர்மனியைக் காப்பாற்றுவதற்காக, 28-ம் தேதி காலை ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அதனால் பிரஜா உரிமைகளெல்லாம் இருந்த இடம் தெரியா மல் மறைந்தன. பார்லிமெண்டிலிருந்த பொது உடைமைக் காரர்கள் யாவரும் கைது செய்யப்பட்டார்கள். தேர்த லுக்கு நான்கு நாட்களுக்கு முன்பு நடந்த இந்தச் சம்பவத் தைப் பற்றித்தான் ஜெர்மனி யெங்கும் பேச்சாயிருந்தது. ரீஷ்ஸ்டாக் கட்டடத்திற்குத் தீ வைத்தவர்கள் நாஜிகள் தான் என்பது ஜனங்களுக்கு எப்படித் தெரிய முடியும்? பொது உடைமை ஆபத்தின் இந்த 'சாம்பிளை'க் கண்டே

ஜனங்கள் பயந்து விட்டனர். மார்ச் 5-ம் தேதி தேர்தலில் ஹிட்லர் அபரிமிதமான வெற்றி பெற்றான். மொத்த வோட்டுகளில் நாஜிகளுக்கு 47% கிடைத்தது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரீஷ் பாட்ஸ்டாமில் கூடிற்று. அன்று தெருக்களி லெல்லாம் புயல் படையினர் காவல் புரிந்துகொண்டிருந்தனர். பொது உடைமைக் காரர்களான 81 மெம்பர்கள் உள்ளே செல்ல முடியாமல் தடுக்கப்பட்டனர். ஹிட்லருக்கு எல்லா அதிகாரங்களும் கொடுப்பதாக, மார்ச் 22-ம் தேதி ரீஷில் ஒரு சட்டம் நிறை வேற்றப்பட்டது. இதற்குச் சாதகமாக 441 வோட்டுக ளும், பாதகமாக 94 வோட்டுகளும் கிடைத்தன. தன்னு டைய கழுத்துக்கு ரீஷ் தானாகவே சுருக்கு மாட்டிக் கொண்டது.

இந்த அதிகாரத்தை ஹிட்லர், கொஞ்சமும் தயாதாக்ஷ ண்யமில்லாமல், தனக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்ள ஆரம்பித்தான். ஜெர்மன் வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் ஹிட்லர் தலையிட்டான். நீதி இலாகா வைக் கூட விடவில்லை. தொழிற் சங்கங்கள் கலைக் கப்பட்டு, அவைகளின் நிதிகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஜுலை 14-ம் தேதி இதர அரசியல் கக்ஷிகள் யாவும் சட்ட விரோதமாக்கப்பட்டன. தேர்தல் முடிந்த நாலு மாதங் களுக்குள், ஹிட்லர், தன் பாதையில் கிடந்த முட்களை யெல்லாம் ஒவ்வொன்றாக அப்புறப்படுத்திவிட்டான்.

ஆகஸ்டு 2-ம் தேதி பிரஸிடென்ட் ஹிண்டன்பர்க் இறந்தார். சட்டப்படி, அவர் இறந்தவுடன் மற்றொரு பிரஸிடென்ட் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஆனால், ஹிண்டன்பர்க்குடன், பிரஸிடென்ட் என்ற பதவியும் போய்

விட்டது. ஹின்டன்பர்க் இறந்த தகவல் பொது ஜனங்களுக்குத் தெரியுமுன்னரே, ஹிட்லர் ராணுவ அதிகாரிகளிடம் விசுவாசப் பிரமாணம் வாங்கி விட்டான். யாரிடம் விசுவாசம்? பார்லிமெண்டுக்கா? அரசியலமைப்புக்கா? இல்லை. ஜெர்மன் மக்களின் தலைவரான **அடால்ப் ஹிட்லருக்குக்** கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்று பிரமாணம் வாங்கிவிட்டான். ஏற்கனவே, ரீஷிடமிருந்து எல்லா அதிகாரங்களையும் பெற்றுய்விட்டது. இப்போது, ராணுவத்தின் கீழ்ப்படிதலையும் பெற்றுவிட்டான். இதன் அர்த்தம் என்ன? ஜெர்மன் சான்ஸலரான அடால்ப் ஹிட்லர், ஜெர்மன் சர்வாதிகாரியானுன். 1933 நவம்பரில் ஒரு பொது ஜன வோட் எடுக்கப்பட்டது. ஹிட்லரே வேண்டுமென்று 96·3 % வோட்டுகள் கிடைத்தன. 'ஹிட்லருக்கு ஜே!'

A.4748.

ஹிட்லர் பிளான் போடுதல்



"எந்தக் கோட்டையை எப்படிப் பிடிக்கலாம்!"

12. ஆஸ்திரிய ஸம்ஹாரம்

ஆஸ்திரியா, செக்கோஸ்லோவேகியா இரண்டும் ஜெர்மனியுடன் சேர்க்கப்பட்டு விட்டன. இதில் ஆச்சரியமே இல்லை. தனக்கு நியாயமாகச் சேரவேண்டியதை ஹிட்லர் எடுத்துக்கொண்டு விட்டார். தங்களுடைய சுயநலன்களை முன்னிட்டு ஜனநாயக நாடுகள், இந்தச் சம்பவங்களின் போது பெரிய ஆர்ப்பாட்டம் செய்தன. மத்ய ஐரோப்பா பூராவையும் தன் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டு, ஹிட்லர் எங்கே தங்களையே பயமுறுத்தப் போகிறானோ என்ற பயத்தினால்தான், பிரிட்டன், பிரான்ஸ், ஆகிய நாடுகள் கெடுபிடி செய்தன. தமக்குச் சம்பந்தமே இல்லாத நாடுகளின் மீது பிரிட்டனுக்கும், பிரான்ஸுக்கும் மாண்டேட் பொறுப்புக்களும், பாதுகாப்பு ஆதிக்கமும் இருக்கலாமென்றால், ஜெர்மனியுடன் நெருங்கிய தொடர்புள்ள பிரதேசங்களை ஹிட்லர் சேர்த்துக் கொள்வதில், எந்தச் சர்வதேச நியாயம் மீறப்பட்டு விடுகிற தென்பதுதான் தெரியவில்லை. சர்வதேச நியாயம், அரசியல் நேர்மை முதலியவைகளெல்லாம் ஸ்திரமான அர்த்தங்களுடைய பதங்களா யிருக்க முடியாது. காலத்தின் மாறுதலுக்கேற்றாற்போல், இந்தச் சர்வதேச நியதிகளும் மாறத்தான் செய்யும். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பதைத் தவிர, இந்தச் சர்வதேச நியாயங்களில் வேறு என்ன இருக்கிறது? பிரிட்டனுக்கும், பிரான்ஸுக்கும் பாதகம் விளைவிக்கும் சம்பவங்களெல்லாம் நியாய வரம்பை மீறியவை என்று அர்த்தமா? எல்லா விஷயங்களிலும் பக்ஷபாத மில்லாமலும், நியாயமாகவும் எழுதும் பிரபல பிரிட்டிஷ் எழுத்தாளர்கள், ஜெர்மனி என்றால் மட்டும் தங்கள் சிந்தனை

சக்தியைக் குறுகிய பாதையில் செலுத்தி வருகிறார்கள். சுதந்தரம், ஜனநாயகம் முதலியவைகளைப் பற்றி இவர்கள் எழுதுவதை வாசிக்கும்போது நம்மையே மறந்து விடுகிறோம். அவ்வளவு அற்புதமாகவும், தெளிவாகவும் எழுதுகிறார்கள். ஆனால், ஜெர்மன் விவகாரம் வந்தவுடன் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நலன் என்ற புகை அவர்கள் கண்களை மறைத்து விடுகிறது. சர்வாதிகார வெறி பிடித்த ஹிட்லரின் ஒவ்வொரு செய்கையும், அவர்களுக்குப் பெரும் கொடூரமாகத் தென்படுகின்றது. தென்னாபிரிகாவிலுள்ள ஜெர்மனியர்கள், தாங்கள் ஜெர்மனியுடன் சேர விரும்புவதாகக் கூறினால், உடனே இவர்களுக்கு வயிற்றில் புளியைக் கரைக்கிறது. பிரிட்டிஷ் நலன்கள் அங்கு ஏராளமாக இருக்கின்றன அல்லவா ? பிரிட்டிஷாருக்கு உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலுமே ஏதாவது கொஞ்சம் கொஞ்சம் அக்கரை இருப்பதால், சர்வ தேச அரசியலில் அவர்களுக்கு ஒரு சுயநல உரிமை இருக்கிறது. பிரிட்டனில் பிறந்த ஒவ்வொருவனுக்கும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்பதில் ஒரு பெருமையுண்டு. இப்போதுள்ள அரசியல் நிலைமையில் ஒரு மயிரிழையாவது மாறுதலேற்பட்டால், அதனால் பிரிட்டனுக்குப் பாதகம்தான். ஆகையால், இப்போதைய அமைப்பை அப்படியே காப்பாற்றுவதில் அவர்களுக்கு ரொம்ப சிரத்தை உண்டு. இத்தகைய சுயநல உரிமைகளுக்குப் பாதகம் விளைவிக்கக் கூடிய சம்பவங்கள் நேரும்போது ஜனநாயகம், சர்வதேச நியாயம் முதலிய அழகான வார்த்தைகளைப் போட்டு மயக்குகிறார்கள். இந்த நியாயங்களெல்லாம் இவர்களே வகுத்துக்கொண்டவைதானே ! மனிதனால் இயற்றப்பட்ட எந்தச் சட்டமும் எப்படிச் சாசுவதமாயிருக்க முடியும்? கத்திமுனையில் நிர்ணயிக்கப்பட்ட நியதிகளை, மற்றொருவன் கத்திமுனையால்

மாற்றினால், என் ஜனநாயகத்தைச் சந்தியில் இழுக்க வேண்டும்?

மகாயுத்தத்திற்கு முன் ஆஸ்திரியாவின் ஜனத்தொகையில் 97% ஜெர்மனியர்களே! ஜெர்மனியில் இருந்தவர்களுக்கும், ஆஸ்திரியாவில் இருந்தவர்களுக்கு மிடையே, பாஷையிலோ, ஜாதியிலோ, கலாசாரத்திலோ, ஒன்றுமே வித்தியாசம் கிடையாது. யுத்தத்திற்கு முன் ஆஸ்திரியாவின் ஜனத்தொகை 3 கோடிக்கு மேல் இருந்தது. விஸ்தீரணம் 116,000 சதுர மைல்கள். யுத்தத்திற்குப் பிறகு உடன்படிக்கைகளின் பலனாக, ஆஸ்திரியா அடையாளம் கண்டு பிடிக்க முடியாதபடி சிறிதாய்விட்டது. ஜனத்தொகை 65 லக்ஷம்தான். விஸ்தீரணம் 32 ஆயிரம் சதுர மைல்களே. வியன்னா நகரம் ஒன்றுதான் ஆஸ்திரியா என்று சொல்லலாம். ஆஸ்திரியாவின் துறைமுகங்களெல்லாம் போய்விட்டன. பெரும்பாலும் மலைப்பிரதேசங்கள்தான் பாக்கி யிருந்தன. ஆகவே, விவசாயத்திற்கும் வழியில்லை. ஆஸ்திரியாவின் மொத்த ஜனத்தொகையான 65 லக்ஷத்தில், சுமார் 20 லக்ஷம் (மூன்றிலொரு பங்கினர்) வியன்னாவிலேயே இருக்கிறார்கள். சுதந்தரமான தேசம் என்றால், அதில் இருப்பவர்கள் சுதந்தரத்தைச் சாப்பிட்டுக்கொண்டிருக்க முடியுமா? இங்கேயோ விவசாயத்திற்கு வழியில்லை. ஆகையால், பக்கத்து நாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. ஆனால் அந்நாடுகள் ஆஸ்திரிய ஏற்றுமதிகளை வாங்கவில்லை. இதனால், ஆஸ்திரியா அடிக்கடி கடன் வாங்க வேண்டியிருந்தது. பழைய கடன்களைத் தீர்க்கும் காலம் வந்தபோது, புதிய கடன்கள் வாங்க வேண்டியிருந்தது. ஆஸ்திரியா பெயரளவுக்குச் சுதந்தர நாடாயிருந்தாலும், பொருளாதாரக் கஷ்டத்தினால், நிதி விஷ

காரங்களில் வெளி நாடுகளின் அடிமையாகவே இருக்க வேண்டியிருந்தது. பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, செக்கோஸ்லோவேகியா ஆகிய நாடுகள் ஆஸ்திரியாவுக்குக் கடன் கொடுத்தன. ஏன்? பண உதவி செய்யாவிட்டால், ஒரு சுதந்தர நாடு அநியாயமாய் மடிந்துபோய் விடுமே என்ற தர்ம சிந்தனையினலா? ஆஸ்திரியாவை நிர்க்கதியாய் விட்டு விடுவதால் ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகளை அவர்கள் விரும்பவில்லை. ஆஸ்திரியா ஜெர்மனியுடன் சேர்ந்துவிடப் போகிறதே யென்று அவர்கள் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். 1919-ல் ஆஸ்திரிய தேசீய சபை ஜெர்மனியுடன் சேர விரும்பிற்று. 1921 வரையில், இதைப் பற்றி முயற்சிகள் நடைபெற்றன. ஆனல், ஐரோப்பாவின் தென்பாகத்திலும், கிழக்குப் பாகத்திலும், ஜெர்மன் செல்வாக்கு ஓங்குவது யுத்தத்தில் ஜெயித்த நாடுகளுக்குப் பிடித்த மில்லை. ஆகையால், அந்த முயற்சிகளை அவர்கள் தடைசெய்து விட்டார்கள். ஆஸ்திரியா ஜெர்மனியுடன் சேருவதற்குத் தான் சம்மதிக்க முடியாதென்று பிரான்ஸ் கண்டிப்பாகச் சொல்லிவிட்டது. 1922-ல் சர்வதேச சங்கத்தின் ஆதரவில், ஆஸ்திரியாவுக்குக் கடன் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்ட போது, ஜெர்மனியுடன் சேர்ந்து விடுவதென்ற எண்ணத்தை ஆஸ்திரியா அடியோடு விட்டு விட வேண்டு மென்பது ஒரு முக்கியமான நிபந்தனை. உலக மந்தத்தின் பலனாக, 1931-ல் ஆஸ்திரியா தத்தளித்துக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில், ஜெர்மனியுடன் அரசியல் சம்பந்தமற்ற பொருளாதார ஏற்பாடு ஒன்றைச் செய்து கொள்ள ஆஸ்திரியா விரும்பிற்று. இந்தச் சமயத்திலும் பிரான்ஸ் குறுக்கே நின்று அதைத் தடுத்துவிட்டது. மீண்டும் ஆஸ்திரியாவுக்குக் கடன் கொடுக்கப்பட்டது. ஹிட்லர் ஜெர்மனியில் ஆதிக்கத்துக்கு வந்த பிறகு, ஆஸ்

திரியாவில் நாஜி இயக்கம் ஒன்று ஆரம்பமாயிற்று. ஹிட்லர் ஆஸ்திரியாவில் பிறந்தவன் என்பது முன்னர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் சேர்த்து விடவேண்டுமென்பதே நாஜிகளின் நோக்கம். டால்பஸ் இருந்தவரையில், முஸொலீனியின் உதவியுடன், நாஜிகளைத் தலையெடுக்க வொட்டாமல் அடக்கிக்கொண்டு வந்தார். டால்பஸ் கொலைக்குப் பிறகு, ஆஸ்திரிய நிர்வாகச் சுமை டாக்டர் ஷுஸ்னிக் தலையில் விழுந்தது.

1937-ல் முஸொலீனி, பெர்லினுக்கும், மூனிக்குக்கும் விஜயம் செய்தான். அபிஸீனிய யுத்தத்தினால் இத்தாலியின் பொருளாதார நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. அத்துடன் ஸ்பெயின் யுத்தத்திலும் முஸொலீனி கண்ணை மூடிக்கொண்டு இறங்கிவிட்டான். ஆகையால், இத்தாலிக்கு ஜெர்மனியின் உதவி தேவையா யிருந்தது. இந்தப் பலஹீனத்தை ஹிட்லர் உணர்ந்தான். ஆஸ்திரியாவைத் தான் சேர்த்துக் கொள்வதற்கு முஸொலீனியிடமிருந்து கடுமையான எதிர்ப்பு எதுவும் இராதென்பதையும் தெரிந்து கொண்டான். 1937 கடைசியில் ஸ்பெயினில், முஸொலீனியின் நண்பனான ஜெனரல் பிராங்கோவுக்குத் தோல்விக்கு மேல் தோல்வியாக இருந்துகொண்டிருந்தது. இந்த நிலைமையில், ஒன்று பிரிட்டனுக்குப் பணியவேண்டும், அல்லது ஜெர்மனிக்குப் பணியவேண்டும் என்ற நிலைமை முஸொலீனிக்கு ஏற்பட்டது. வெகு துரிதமாகச் செல்வாக்குப் பெற்றுவரும் ஹிட்லருடன் சேர்ந்துகொள்வது தான் லாபகரமானதென்று முஸொலீனி தீர்மானித்தான். ஆகவே, ஆஸ்திரியா விஷயத்தில் ஜெர்மனிக்கு இணங்கினான்.

அந்தச் சமயத்தில் லார்ட் ஹாலிபாக்ஸ் ஜெர்மனிக்கு விஜயம் செய்தார். ஹாலிபாக்ஸ் அப்போது அன்னிய நாட்டு மந்திரி பதவிக்கு வரவில்லை. "மத்ய ஐரோப்பாவில் உம் இஷ்டப்படி விட்டுவிட்டால், காலனி கோரிக்கையை விட்டுக்கொடுத்து விடுகிறீரா?" என்று ஹாலிபாக்ஸ், ஹிட்லரைக் கேட்டார். "மத்ய ஐரோப்பாவில்தான் ஏற்கெனவே எனக்குச் செல்வாக்கு இருக்கிறதே! யாரும் விட்டுக்கொடுக்க வேண்டுமென்ற அவசியமே இல்லை!" என்று ஹிட்லர் சொல்லிவிட்டான். ஆஸ்திரியா விஷயத்தில் தன்னைத் தவிர வேறு யாருக்கும் உரிமை கிடையாதென்றும் கண்டிப்பாகச் சொன்னான். இதைத் தொடர்ந்து, ஹிட்லர் ஜெர்மன் ராணுவத்தில் பெரிய மாறுதல்கள் செய்தான். பழைய ஜெனரல்களுக்குப் பென்ஷன் கொடுத்துவிட்டான். ஜெர்மன் சேனாதிபதி பதவியைத் தானே ஏற்றுக்கொண்டான்.

1938 பிப்ரவரியில் ஷுஸ்னிக் ஹிட்லரின் வாசஸ்தலமாகிய பெர்ஷ்டஸ்ச்காடனுக்கு வரும்படி அழைக்கப்பட்டார். பிப்ரவரி 12௨ காலை 11-மணிக்கு ஷுஸ்னிக் பெர்ஷ்டஸ்ச்காடன் போய்ச் சேர்ந்தார். ஹிட்லரும், ஷுஸ்னிக்கும் சந்தித்தபோது, அங்கு வேறு யாரும் இல்லை. சம்பாஷணை ஆரம்பத்திலேயே, ஹிட்லர், ஷுஸ்னிக்கைக் கடுமையாகத் தாக்க ஆரம்பித்து விட்டான். மற்றொரு நாட்டின் சான்ஸலருடன் பேசுகிறோமென்றுகூட ஹிட்லர் கவனிக்கவில்லை. மரியாதைக் குறைவாகக் கூடப் பேசினான்.

"ஆஸ்திரியாவைக் குட்டிச்சுவராக்கி விட்டாயே! ஜனங்கள் பட்டினி கிடக்கிறார்களே!" என்று சீறினான்.

"8 கோடி ஜெர்மனியரையும் சேர்த்து ஒரே சாம்ராஜ்யம் அமைப்பதற்காக, நான் கடவுளால் அனுப்பப்பட்டிருப்பவன். என்னை எதிர்ப்பவர் யாராயிருந்தாலும் நசுக்கிவிடுவேன். நீ எதிர்த்தால், உனக்கும் அதே கதிதான்! என்னுடைய நிபந்தனைகளை நீ ஒப்புக்கொள்ளாவிட்டால், உங்கள் ஊரிலுள்ள, நாஜிகள் கலகத்துக்கு ஆரம்பித்து விடுவார்கள். ஜெர்மன் துருப்புகள் ஆஸ்திரியாவுக்குள் பிரவேசித்துவிடும்!" என்றான் ஹிட்லர். ஜெர்மன் துருப்புகள் ஆஸ்திரியாவுக்குள் பிரவேசிப்பது சம்பந்தமான பிளான்களையும் விஸ்தாரமாகக் கூறினான். உடனே, கதவைத் திறந்து வெளியே யிருந்த ஜெனரல் கீட்டலை அழைத்து, "கீட்டல்! உள்ளே வாரும்! விஷயம் என்னவென்பதை இந்த மனிதனிடம் சொல்லும்!" என்றான். ஜெனரல் கீட்டல் உள்ளே வந்து, ஜெர்மன் ராணுவ ஏற்பாடுகளைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்தார்.

ஆரம்ப ஆவேசம் தணிந்தவுடன் ஹிட்லர் சற்று சாந்தமாகப் பேச ஆரம்பித்தான் :

"ஆஸ்திரியாவிலும் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டு, ஸ்பெயின் கதியை அடையவேண்டுமென்று விரும்புகிறாயா? உனக்கு யார் ஒத்தாசை செய்யப் போகிறார்கள்? பிரிட்டனை நம்பிக்கொண் டிருக்கிறாயா? பிரிட்டனின் நிலைமை உனக்குத் தெரியாது. ஒரு யுத்தம் வந்தால், டொமினியன்கள் பிரிட்டனின் உதவிக்கு வராது. பிரான்ஸ் உள்நாட்டு விவகாரங்களால் திண்டாடிக்கொண் டிருக்கிறது. ஐரோப்பிய விவகாரங்களில், பிரான்ஸுக்கிருந்த செல்வாக்கான காலம் மலையேறிவிட்டது. முஸோலினி உதவி செய்வாரென்று நம்புகிறாயா? அங்கும் ஏமாற்ற மடைவாய். ஜெர்மனியுடன் நேசமாயிருப்பதுதான் இத்தாலிக்குப் பலம்.

ஜெர்மனியின் ஒத்தாசை இல்லாமல் இத்தாலிக்கு ஒன்றும் முடியாது. ஒரு லக்ஷம் ஜெர்மன் சோல்ஜர்கள் புறப் பட்டால் இத்தாலிய ராணுவம் பூராவையும், நேபிள்ஸ் வரை யில், விரட்டி விரட்டி யடிப்பார்களே! எந்த இடத்தில் ஜெர் மனியர்கள் கஷ்டப்படுத்தப்பட்டாலும் அங்கு தலையிடு வதற்கு ஜெர்மனிக்கு வலிமை இருக்கிறது. என்ன சொல்லு கிறாய்? உடனே நீ சம்மதம் கொடுக்கவேண்டும்! இல்லா விடில் ஜெர்மன் துருப்புகள் ஆஸ்திரியாவுக்குள் பிரவேசித்து விடும்!" என்று ஹிட்லர் பயமுறுத்தினான்; ஷூஸ்னிக் பிர மித்து விட்டாரென்றுதான் சொல்ல வேண்டும். சில விஷ யங்களுக்கு ஷூஸ்னிக் ஆட்சேபணை சொன்னதால் ஹிட் லர் சீறி விழுந்து கொண்டிருந்தான்.

"நான் சொல்வதெல்லாவற்றையும் உடனே ஒப்புக் கொள்ள வேண்டும். இல்லையேல் உன்னைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும். உன்னை இத்துடன் விடுகிறேனே யென்று நீ சந்தோஷப் படவேண்டும். பிப்ரவரி 26வயே ஆஸ்திரியாவுக்குள் பிரவேசித்து விடுவதென்று தீர்மானித் திருந்தேன். ஆனால், நண்பர்கள் சொன்னதற் கிணங்க அதை ஒத்திப்போட்டேன். சமரசமாக இதைத் தீர்ப்ப தற்கு இப்போது கடைசி முறையாக ஒரு சந்தர்ப்பம் கொடுக்கிறேன். இதுவரையில் என் வாழ்க்கையில், நான் ஒரு தடவை முடிவு செய்ததை மாற்றியதே இல்லை!" என்று ஹிட்லர் கர்ஜித்தான்.

ஒருவனுக்கு எவ்வளவுதான் மனவுறுதி இருந்த போதிலும், எதிரியின் கோட்டைக்குள் உட்கார்ந்து கொண்டு, ஆவேசத்துடன் அவன் ஆடும் ஆட்டத்தைப் பார்க்கும்போது, கலக்கமுறுவது இயற்கையே. ஷூஸ்னிக் குக்கு அப்படிப் பிரமாதமான மனேதிடமும் கிடையாது.

ஒரு சமரசம் ஏற்பட்டது. ஆஸ்திரியாவில் நாஜிகளுக்குப் பூர்ண சுதந்தரம் இருக்கவேண்டும். அவர்களுடைய குற்றங்களெல்லாம் மன்னிக்கப்பட வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக இரண்டு நாடுகளின் ராணுவங்களும் ஒன்ருக்கப்பட்டுவிட வேண்டும். அத்துடன் மிகவும் முக்கியமான பதவியாகிய உள்நாட்டு மந்திரிப் பதவியை ஒரு நாஜிக்குக் கொடுக்கவும் ஷூஸ்னிக் சம்மதித்தார். கடைசி நிமிஷத்தில் ஒரு சங்கடம் ஏற்பட்டது. இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் தம் சொந்த ஹோதாவில்தான் பொறுப் பேற்றுக் கொள்ள முடியுமென்றும், ஆஸ்திரியா சார்பாகக் கையெழுத்துப் போடுவதற்குப் பிரஸிடென்ட் மிக்லாஸுக்குத்தான் உரிமை யுண்டென்றும் ஷூஸ்னிக் தெரிவித்தார்.

"எக்கேடு கெட்டுப் போனாலும் சரி. உங்களுக்கு இரண்டு நாள் அவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் எல்லாவற்றையும் முடித்துவிடவேண்டும்!" என்று ஹிட்லர் கூறினன். மாலை 6 மணிக்கு ஷூஸ்னிக் வியன்னவுக்குப் பிரயாணமானர். மறுநாள் பிரஸிடென்ட் மிக்லாஸ், ஷூஸ்னிக்கை அழைத்து விவரங்கள் கேட்டார். ஷூஸ்னிக் தாம் ராஜீநாமா செய்துவிடுவதாகச் சொன்னர். இவர் ராஜீநாமா செய்தாலும் செய்யாவிட்டாலும், ஹிட்லரின் நிபந்தனைகளை இனி நிராகரிப்பதென்பது சாத்தியமில்லாத காரியம். ஹிட்லர் விதித்த நிபந்தனைகள் அந்த இரண்டு நாட்களுக்குள் நிறைவேற்றப்பட்டன. ஆனல், இத்துடன் சமாதானம் ஏற்பட்டு விடவில்லை.

இதற்கிடையே பிப்ரவரி 22-உ யன்று, ஏற்கெனவே வியன்னவில் இத்தாலிய ஸ்தானீகரா யிருந்த ஸலாடா என்பவர் ஷூஸ்னிக்கிடம் வந்தார். இதன் பலனுக ஷூஸ்னிக்கின்

மனப்பான்மையில் ஒரு மாறுதலேற்பட்டது. பெர்ஷ டஸ்ச்காடனில் ஹிட்லரைச் சந்தித்துவிட்டு வந்த பிறகு, முதுகொடிந்தவன் மாதிரி நடந்துகொண்டிருந்த ஷுஸ்ணிக், திடீரென்று தலை நிமிர்ந்து பேச ஆரம்பித்தார்.

பிப்ரவரி 24உ ஆஸ்திரிய பார்லிமெண்டில் ஷுஸ்ணிக் செய்த பிரசங்கத்தில் பின்வருமாறு கூறினர்:

“இவ்வளவுதான்; இதற்குமேல் ஒரு அடி கூட எடுத்து வைப்பதை அனுமதிக்க முடியாது என்று சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. சாகும் வரையில் தன் சுதந்தரத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஆஸ்திரியா தயாரா யிருக்கிறது.”

வீரம் ததும்பும் பிரசங்கங்கள் மட்டும் ஒரு நாட்டின் சுதந்தரத்தைக் காப்பாற்றி விடமுடியுமென்ருல், ஷுஸ்ணிக் அன்று செய்த பிரசங்கம் நிச்சயம் ஆஸ்திரியாவைக் காப்பாற்றி யிருக்கவேண்டும். இந்தப் பிரசங்கத்தைத் தொடர்ந்து ஷுஸ்ணிக் தைரியமாகவே காரியங்கள் செய்து கொண்டிருந்தார். ஷுஸ்ணிக்கின் வீரம் புகைந்து போகும் தன்மை வாய்ந்த தென்பது, சம்பவங்களைக் கூர்ந்து கவனித்து வந்திருப்பவர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும். மார்ச் 9உ இன்ஸ்பிரக்கில் பிரமாதமான ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்தது. ஆஸ்திரிய மக்களின் உறுதிக்கு அறிகுறியாக அந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஷுஸ்ணிக் அங்கு ஒரு பிரசங்கம் செய்தார். ஆஸ்திரிய சுதந்தரத்தைப் பற்றி மார்ச் 13உ ஞாயிற்றுக்கிழமை யன்று ஒரு சர்வ ஜன வோட் எடுக்கப்படும் என்று அறிவித்தார்.

மார்ச் 11௳ காலை உள்நாட்டு மந்திரி டாக்டர் ஸெய்ஸ் இன்குவார்ட் ஷுஸ்னிக்கிடம் வந்தார். பெர்ஷ்டஸ்ச் காடன் சமரசத்திற்குப் பிறகு நியமிக்கப்பட்ட நாஜி மந்திரி இவர்தான். சர்வஜன வோட் எடுக்கும் யோசனை சட்ட பூர்வமானதல்ல வென்று அவர் சான்ஸலரிடம் ஆட்சேபித்தார். இந்த ஆட்சேபம் ஜெர்மனியிலிருந்து வந்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்த யோசனை அபாயகரமானதென்றும், இதனால் ஒரு உலக யுத்தம் மூண்டு விடக் கூடுமென்றும் எச்சரித்தார். அதே மாதிரி ஷுஸ்னிக்குக்கு ஒரு கடிதமும் எழுதினர். இந்த யோசனையைக் கைவிடாவிட்டால், ஹிட்லரின் ராணுவம் ஆஸ்திரியாவுக்குள் பிரவேசித்து விடும் என்றும் எழுதியிருந்தார். இந்தக் கடிதத்தில் காணப்படும் வாசகம் ஹிட்லர் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறதா வென்று, ஷுஸ்னிக் டெலிபோன் மூலம் ஜெர்மன் ஸ்தானிகர் காரியாலயத்தில் விசாரித்தார். அங்கிருந்து "ஆம்" என்று பதில் கிடைத்தது. இதிலிருந்து சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்ருக வெகு துரிதமாக நடைபெற ஆரம்பித்து விட்டன. ஆஸ்திரிய விஷயங்களைப் பற்றி ஹிட்லருக்கு ஆலோசனை கூறுபவரான கெப்ளர் என்பவர் விமான மார்க்கமாக ஆஸ்திரியாவுக்கு வந்து, பிரஸிடென்ட் மிக்லாஸுக்கும், சான்ஸலர் ஷுஸ்னிக்குக்கும் ஒரு இறுதி எச்சரிக்கை கொடுத்தார். சர்வஜன வோட் எடுப்பதை உடனே ஒத்திவைக்கவேண்டும்; ஷுஸ்னிக் ராஜீநாமா செய்யவேண்டும்; அவருக்குப் பதிலாக ஸெய்ஸ் இன்குவார்ட் சான்ஸலராக நியமிக்கப்படவேண்டும். இவைகளே ஹிட்லர் சார்பாக கெப்ளர் கொண்டு வந்த நிபந்தனைகள்.

"பலாத்காரத்துக்கு நான் பணிவதாயிருக்கலாம். பலாத்காரத்தினல் நான் வீழ்ச்சியடைவதா யிருக்கலாம்.

ஆனால், உங்கள் நிபந்தனைகளுக்கு நான் ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன். பதவி ஏற்றுக்கொள்ளும்போது நான் எடுத்துக்கொண்ட தேச விசுவாசப் பிரமாணத்துக்கு ஒருபோதும் துரோகம் செய்யமாட்டேன்" என்று பிரஸிடென்ட் மிக்லாஸ் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். இந்தச் சமயத்திலும் ஷுஸ்னிக்கின் நிலைமை தடுமாற்றத்தில்தானிருந்தது. மறுபடியும் தாம் ராஜீநாமா செய்வதாகச் சொன்னார். ஆனால், பிரஸிடென்ட் இவருடைய ராஜீநாமாவை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். ஆஸ்திரிய மக்களின் ரத்தம் சிந்துவதைத் தாம் பார்க்க விரும்பவில்லையென்று ஷுஸ்னிக் பிடிவாதமாயிருந்தார். பிரஸிடென்ட் எவ்வளவோ கேட்டுக்கொண்டும் பிரயோசனமில்லை.

மாலை 6-45 மணிக்கு ஷுஸ்னிக் ரேடியோ மூலம் பின் வருமாறு அறிவித்தார்:

"ஜெர்மன் சர்க்கார் ஒரு கால நிர்ணயம் குறிப்பிட்டு ஆஸ்திரிய பிரஸிடென்டுக்கு ஒரு இறுதி எச்சரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ஜெர்மன் சர்க்கார் குறிப்பிடும் ஒருவரை சான்ஸலராக நியமிக்கவேண்டுமென்றும் அவர்கள் இஷ்டப்படி ஆஸ்திரிய சர்க்காரை மாற்றியமைக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் ஜெர்மன் துருப்புகள் ஆஸ்திரியாவுக்குள் பிரவேசித்துவிடுமென்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பலாத்காரத்திற்கு நாம் பணிகிறோம் என்ற செய்தியை ஆஸ்திரிய மக்களுக்குத் தெரிவிக்கும்படி பிரஸிடென்ட் எனக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். நெருக்கடியான இந்தச் சமயத்தில்கூட, என்ன நேர்ந்தாலும், ஜெர்மன் ரத்தம் சிந்துவதை அனுமதிக்க நாம் தயாராயில்லை. ஆகையால், ஜெர்மன் துருப்புகள் உள்ளே பிரவேசித்தால், அவர்களை எதிர்க்காமல் விலகிக்கொண்டுவிடும்படி ஆஸ்திரியத்

துருப்புகளுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். விடை பெற்றுக் கொள்ளுகிறேன். கடவுள் ஆஸ்திரியாவைக் காப்பாற்றட்டும்!"

இந்தக் கடைசி வாக்கியங்களைச் சொல்லும் போது, ஷுஸ்னிக்குக்கு நெஞ்சு அடைத்தது. அன்புடன் வளர்த்த ஒரு கிளிப்பிள்ளையை மனமறிந்து ஒரு பூனையிடம் கொடுப்பது போன்ற உணர்ச்சியுடன் தழதழத்த குரலில் ஷுஸ்னிக் தம் முடிவை அறிவித்தார். பேசி முடித்துவிட்டு ஷுஸ்னிக் வழக்கம் போல் பிரதான வாயில் வழியாக வெளியே வந்து மோட்டாரில் ஏறிக் கொண்டார். பக்கத்திலிருந்த இரண்டு ஆபீஸர்கள், மோட்டார் படியில் தொத்திக்கொண்டு, "ஆஸ்பர்ன் விமான நிலையத்துக்கு ஓட்டு!" என்று டிரைவரிடம் சொன்னார்கள். "ஏன்? நான் எங்கேயாவது ஓடிப்போகிறேனா? இல்லை. வீட்டுக்கு ஓட்டு வண்டியை!" என்றார் ஷுஸ்னிக்.

ஆஸ்திரியா ஹிட்லர் வசமாயிற்று. அவருடைய முக்கியமான கனவுகளில் ஒன்று பூர்த்தியாயிற்று. ஐரோப்பிய நாடுகளின் நாடியைப் பிடித்துப் பார்ப்பதற்காக, ஹிட்லர் செய்த முதல் காரியத்தில் வெற்றி பெற்றான். மார்ச் 12உ ஹிட்லர் ஆஸ்திரிய எல்லைக்குள் வந்து விட்டான். இவ்வளவு அமர்க்களம் நடந்துகொண்டிருந்தும்கூட, ஆஸ்திரியாவின் பழைய நண்பனான முஸொலீனி வாய் திறக்கவில்லை. "முஸொலீனி, இதை நான் ஒருநாளும் மறக்கமாட்டேன்" என்று ஹிட்லர் அவனுக்கு ஒரு தந்தியனுப்பினான்.

ஷுஸ்னிக் தம் வீட்டிலேயே சிறைப்படுத்தப்பட்டார். அவருடைய சகாக்கள் பலர் கைது செய்யப்பட்ட

னர். சில வாரங்கள் வரையில் ஆஸ்திரியா வெங்கும் கொள்ளையும், கொலையுமா யிருந்தன. இந்தச் சூறுவளியில் ஆஸ்திரிய யூதர்களுக்கேற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமன்று.

ஸெயிஸ் இன்குவார்ட் ஆஸ்திரியாவின் கவர்னராக்கப் பட்டார். ஆஸ்திரிய ஸ்வீகாரம் பூர்த்தியானவுடன், ஹிட்லர் சர்வஜன வோட் ஒன்று ஏற்பாடு செய்தான். ஆஸ் திரியாவை ஜெர்மனியுடன் சேர்த்துக் கொண்டது சரிதா னென்று 97% வோட்டுகள் கிடைத்தன. இந்த சர்வ ஜன வோட்டின் மூலம் ஹிட்லர் ஜனநாயக நாடுகளின் பாடத்தை அவர்களுக்கே திருப்பிப் படித்தான். 100-க்கு 97 பேர்கள் ஒரு காரியத்தை ஆதரிக்கும்போது, அது தவறு என்று சொல்லுவதற்கு யாருக்கு உரிமை இருக் கிறது? ஜனநாயக நாடுகளும் இந்த நிலைமையை ஒப்புக் கொண்டன. ஒப்புக்கொள்ளாமல் வேறென்ன செய்ய முடியும்?



பிரிட்டிஷ் பிரதம மந்திரி நெவில்லி சேம்பர்லேன்

13. செக் நாட்டின் சிதைவு

ஆஸ்திரியாவை ஜெர்மனியோடு சேர்த்துக்கொள்வதற்கு ஹிட்லர் ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தபோதே செக்கோஸ்லோவேகியா மீது தன் திருஷ்டியை வீசிவிட்டான். 1938 பிப்ரவரி 20உ யன்று ஜெர்மன் ரீஷில் ஹிட்லர் செய்த ஒரு பிரசங்கத்தில் சூசனையாக இதைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது வருமாறு:

"நமது எல்லைப்புறங்களை யடுத்து இருக்கும் இரண்டு நாடுகளில் ஜெர்மனியர்கள் மாத்திரம் மொத்தம் ஒரு கோடிப் பேர்கள் இருக்கிறார்கள். ஜெர்மன் ரீஷோடு சேரவேண்டு மென்பது தான் அவர்களுடைய விருப்பம். ஆனால், வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையின் பலனாக அவர்கள் தங்கள் அபிலாஷையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியவில்லை. இதுவே மிகவும் மனோவேதனை யளிக்கும் விஷயந்தான். ஆனால், ஒரு விஷயத்தைப் பற்றி நமக்குச் சந்தேகமே இருக்கக் கூடாது. அரசியலின் காரணமாக சட்டப்படி அவர்கள் நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்தாலும், அரசியல் உரிமைகள் மறுக்கப்படக் கூடாது. சுயமதிப்புள்ள ஒரு பெரிய வல்லரசு இந்த நிலைமையைச் சகித்துக்கொண்டிருக்க முடியாது."

இரண்டு நாடுகள் என்று குறிப்பிட்டது ஆஸ்திரியாவையும், செக்கோஸ்லோவேகியாவையுந்தான். ஆஸ்திரிய சம்பவத்துக்கு முன்னால், ஹிட்லர் செய்த பிரசங்கம் இது. ஆகையால், ஆஸ்திரியாவைச் சேர்த்துக்கொண்ட பிறகு, ஹிட்லர் செக் நாட்டைப் பிடிக்க முயற்சிப்பான் என்பது எதிர்பாராத விஷயமா யிருக்கமுடியாது.

"இயற்கைக்கு அரசியல் எல்லை என்று எதுவும் கிடையாது. யாருக்கு அதிகத் தைரியமும், சுறுசுறுப்பும், இருக்

கின்றதோ, அவர்கள்தான் இயற்கைத் தேவியின் செல்லக் குழந்தைகள். அவர்கள்தான் எஜமானர்களா யிருக்க முடியும். நமக்குத் தேவையான இடத்தை நமக்குக் கொடுத்துவிட, யாரும் மனமாரச் சம்மதிக்க மாட்டார் கள். அவர்கள் தாமாகக் கொடுக்கவில்லை யென்ருல், நாம் அவர்களை உதைத்து நமக்கு வேண்டியதைப் பிடுங்கிக் கொள்ள வேண்டியதுதான். தேசத்திற்கு அன்ருட உணவை உற்பத்தி செய்வதற்குத் தேவையான இடத்தை, ஜெர்மனியர்கள் தங்கள் கத்தி முனைகளால் சம்பாதித்துக் கொள்ளவேண்டும்.'' இது ஹிட்லர் தன் சுயசரிதையில் எழுதியிருக்கும் விஷயம்.

“32½ லக்ஷம் ஜெர்மனியர்கள் வசிக்கும் ஒரு நாட் டுக்கு செக்கோஸ்லோவேகியா என்று பெயர் கொடுப்பது ஜெர்மன் ஜாதியையே அவமதிப்பதாகும்” என்று சமீப காலம் வரையில் ஜெர்மன் ரீஷ் பாங்க் தலைவராயிருந்த டாக் டர் ஷாட் ஒரு நண்பரிடம் பேசிக்கொண்டிருந்தபோது சொல்லியிருக்கிருர்.

செக்கோஸ்லோவேகியாவின் மொத்த ஜனத்தொகை சுமார் 150 லக்ஷம். அதில் ஐந்திலொரு பங்கு ஜெர்மன் பாஷை பேசுபவர்கள். மகாயுத்தத்திற்கு முன்பு இது ஆஸ்திரியா-ஹங்கேரி சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. யுத்தத் தின் போதுதான் செக்கோஸ்லோவேகியா சுதந்தர முடைய ஒரு தனி நாடாகப் பிரிந்தது. யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போதே செக் நாட்டின் சுதந்தரம் பிரகட னப் படுத்தப்பட்டது. உடனேயே பிரிட்டனும், பிரான் ஸும் அதற்கு அங்கீகாரம் அளித்துவிட்டன. இவைக ளுடைய இந்த அவசரத்திலிருந்தே, செக்கோஸ்லோவேகியா

ஐரோப்பிய அமைப்பில் எவ்வளவு முக்கிய ஸ்தானத்தை வகித்தது என்பதைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். மேற்கு ஐரோப்பாவையும், கிழக்கு ஐரோப்பாவையும் இணைக்கும் ஒரு பாலத்தைப்போ லிருக்கிறது செக்கோஸ்லோவேகியா. பிரான்ஸுடனும், ருஷியாவுடனும் இது நேச உடன்படிக்கைகள் செய்துகொண்டிருந்தது. இதன் பலன் என்ன? ஜெர்மனி கிழக்கு ஐரோப்பாவில் யுத்தத்தில் இறங்கினால், மேற்கே யிருந்தும் அதற்கு ஆபத்து ஏற்படும். ஆகவே, செக் நாட்டை எப்படியும் ஜெர்மன் வசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே ஹிட்லரின் நோக்கம். மேலும் ஹிட்லரின் கொள்கைப்படி, ஜெர்மன் பாஷை பேசுபவர்கள் எந்த இடத்தில் இருந்த போதிலும், அவர்கள் ஜெர்மனியைச் சேர்ந்தவர்கள். அத்துடன் அங்குள்ள பிரமாண்டமான ஆயுதத் தொழிற்சாலைகள் ஜெர்மனிக்கு மிகவும் உபயோகமா யிருக்கும்.

செக் சம்பவம் ரொம்ப சமீபத்தில் நடந்தது. அன்றாடம் பத்திரிகைகளைப் பார்த்து வந்தவர்களுக்கு இந்த விவரங்கள் நன்றாக ஞாபகமிருக்கும். செக்கோஸ்லோவேகியா திடீரென்று பத்திரிகைகளில் தோன்ற ஆரம்பித்தது. அந்நாட்டிலுள்ள சூடேடன் ஜெர்மனியர்கள், தாங்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்படுவதாகக் கிளர்ச்சி செய்தார்கள். ஹென்லின் என்பவர் இந்த சூடேடன் நாஜிக் கக்ஷியின் தலைவர். சூடேடன் மக்கள் சுயநிர்ணய உரிமையைக் கோருவதாக ஹென்லின் கூறினார். அதாவது சூடேடன்கள் ஜெர்மன் பிரஜைகளாக விரும்புகிறார்கள் என்று கூறினார். ஹென்லின் கேட்ட இந்தச் சுயநிர்ணய உரிமை, செக் சரித்திரத்தில் முக்கியமானது. யுத்தம் நடந்துகொண்டிருந்த போதே அமெரிக்க பிரஸிடென்ட் வில்ஸன் விடுத்த அறிக்

கையில் எல்லா நாடுகளுக்கும் சுயநிர்ணய உரிமையுண்டு என்று கூறினர். அந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு செக் நாடு தனியாகச் சிருஷ்டிக்கப்பட்டது. செக்கோஸ்லவேக்கியர்கள், ஸ்லவேக்குகள் இருவருக்கும் சாதகமாக அந்தக் கொள்கை உபயோகிக்கப்பட்டது. ஆனால் எல்லைப்புறத்தின் ஓரங்களில் வசித்துவந்த சூடேடன் ஜெர்மனியர்கள், ஹங்கேரியர்கள் விஷயத்தில் இது புறக்கணிக்கப்பட்டது. இருபது வருஷங்களுக்குப் பிறகு, அதே சுயநிர்ணய உரிமையை ஹென்லின் கேட்டா ரென்றால், அது விதியின் பயங்கரமான பரிகாசங்களில் ஒன்று என்றுதான் சொல்லவேண்டும். செக் நாட்டுக்குள் துருப்புகளை அனுப்பி விடுவதென்று 1938-மே 20-உ ஹிட்லர் தீர்மானித்து விட்டான். செக் நாட்டுக்குள் பிரவேசித்தால் அதன் மூலம் உலக யுத்தம் ஏற்பட்டுவிடுமோ வென்று ஹிட்லர் பயந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், பிற்பாடு பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன் ஹிட்லரைச் சந்தித்தபோது, “உலக யுத்தத்துக்கும் நான் தயார்” என்று ஹிட்லர் அவரிடம் சொல்லி யிருக்கிறான். செக் நாட்டைக் காப்பாற்றுவதற்காக பிரான்ஸ் உதவிக்கு வரக்கூடும். ஆனால் பிரான்ஸின் நண்பன் என்ற முறையில், பிரான்ஸைத் தொடர்ந்து பிரிட்டனும் யுத்தத்தில் இறங்கி யிருக்குமா வென்பது சந்தேகந்தான். ஏனெனில், பிரிட்டிஷ் நலன்கள் எதுவும் அங்கு நேரடியாகப் பாதிக்கப்படவில்லை. ஆகையால், ஜபர்தஸ்தாகப் பேசுவதைத் தவிர, பிரிட்டன் நேரடியாக யுத்தத்தில் இறங்கா தென்பது ஹிட்லருக்குத் தெரியும். மே 21-உ ஜெர்மனி செக் நாட்டுக்குள் பிரவேசித்துவிடும் என்று பெர்லினிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் பிரிட்டனுக்குத் தெரிவித்தார். இதற்குள் செக்கோஸ்லோவேகியாவில் சூடேடன்களின் ஆவேசம் உச்ச

ஸ்தானத்தை அடைந்துவிட்டது. எங்கு பார்த்தாலும் நாஜிச் சின்னங்களும், ஸ்வஸ்திகா கொடிகளும் காணப் பட்டன. ஒரு ஜெர்மன் சிறுவன் ஒரு ஹோட்டலில் சென்று சாப்பிட்டுவிட்டு, ஒரு ஜெர்மன் மார்க் நாணயத் தைக் கொடுத்தானும். ஹோட்டல்காரன் அதை வாங்கிக் கொள்ள மறுத்து விட்டான். "அப்படியா சமாசாரம்? இரு இரு! இன்னும் சில நாட்களில் இதே நாணயத்தை நீ வாங்கிக்கொள்ளும்படி யிருக்கும்" என்று அச்சிறுவன் சொன்னானும்.

மே 20-உ யன்று செக் மந்திரிசபை கூடி, சில படை களை ராணுவ சேவைக்கு அழைத்தது. இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் செக் எல்லைப்புறமெங்கும் பந்தோபஸ் தாய் விட்டது. தம்முடைய சொந்த ராணுவ பலத்துடன், பிரிட்டன், பிரான்ஸ், ருஷியாவின் உதவியும் கிடைக்கு மென்று செக் சர்க்கார் நம்பிப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தார்கள். சர்க்காரின் ஜரூரான இந்த நடவடிக்கை கள் நாஜிகளைத் திகைக்க வைத்துவிட்டன. நாஜிகளின் ஆர்ப்பாட்டங்கள் அடங்கிவிட்டன. ஒரு அசம்பாவித மும் இல்லாமல் முனிஸிபல் தேர்தல்கள் முடிந்தன. ஹிட் லரின் ஏற்பாடுகள் செக் சர்க்காரின் இந்த உறுதியினுல் சிதறிவிட்டன வென்பது உண்மையே. ஆனுல், செக் சர்க் காரின் உறுதியும், அவர்களுடைய ராணுவ பலமும் மட்டும் போதாது. தற்காலிகமாக ஜெர்மனி பின்வாங்கிற்று.

பிரிட்டன் சம்பந்தப்பட்ட வரையில், ஆரம்பம் முதலே செக்கோஸ்லோவேகியா சம்பந்தமாக அது அனுஷ்டித்து வந்த கொள்கை மிகவும் வெட்கக்கேடானது. செக் நாட் டின்மீது படையெடுத்தால், பிரிட்டன் நடுநிலைமை வகிக்கா தென்றும், தன்னுடைய சகாவான பிரான்ஸைப் பின்பற்

றித் தானும் யுத்தத்தில் குதிக்கவேண்டு மென்றும், ஒரு புறம் ஜெர்மனியிடம் சொல்லிக்கொண்டிருந்தது. மற் ெறாருபுறம், "ஜெர்மனியைத் திருப்தி செய்வதற்கு ஏதாவது செய்யுங்கள்" என்று செக் சர்க்காரிடம் சொல்லிக்கொண் டிருந்தது. அத்துடன் பிரான்ஸையும் பிரிட்டன் கலைத்துக் கொண்டிருந்தது. இதன் பலனாக பிரேகிலிருந்த பிரிட்டிஷ், பிரெஞ்சு பிரதிநிதிகள், செக் சர்க்காரின் வெளிநாட்டு மந் திரியிடம் போய், "சூடேடன் ஜெர்மனியர்களுடன் சமரசம் செய்துகொள்வதற்கு உங்களால் எவ்வளவு தூரம் செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்யுங்கள்" என்று வற்புறுத் தினார்கள். குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டும் வேலையைப் பிரிட்டன் செய்துகொண்டிருந்தது. மே மாத நெருக்கடி தற்காலிகமாகத் தீர்ந்ததென்றாலும், அந்தப் பிரச்னை தீர்ந்துவிடவில்லை.

ஜூலை மாதத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர் லேன், செக் பிரச்னைக்கு ஒரு புது யோசனை கண்டு பிடித் தார். இரு நாடுகளுக்கு மிடையே சமரசம் செய்து வைப்ப தற்கு லார்ட் ரன்ஸிமனை செக்கோஸ்லோவேகியாவுக்கு அனுப்ப உத்தேசித்திருப்பதாக சேம்பர்லேன் பார்லி மென்டில் அறிவித்தார். செக் சர்க்காரின் வேண்டுகோளுக் கிணங்கவே இந்த ஏற்பாடு செய்யப்படுவதாக சேம்பர் லேன் சொன்னார். இது கலப்பற்ற பொய். செக் சர்க்கார் அப்படி ஒன்றும் கேட்கவில்லை. செக் சர்க்காரைத் தாங்கள் ஏதோ வற்புறுத்துவதாகச் சொல்லப்படுவதற்கும் ஆதார மில்லை யென்று பிரதம மந்திரி பார்லிமென்டில் தெரிவித் தார். இதுவும் 'மனமறிந்த பொய்' என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், ஆரம்பம் முதலே நாஜிகளுக்கு விட்டுக் கொடுக் கும்படி பிரிட்டன் வற்புறுத்தி வந்திருக்கிறது.

ஹிட்லர்-சேம்பர்லேன் சமாதான ஒப்பந்தம்

நம் இரு நாடுகளுக்கும் சம்பந்தப்பட்ட வேறெந்தப் பிரச்னைகளையும் பரஸ்பரம் கலந்து பேசுவதன் மூலம் தீர்த்துக்கொள்ளும் முறையையே கையாளுவதென்று நாம் தீர்மானித்திருக்கிறோம்; வித்தியாசங்கள் ஏற்படக் காரணமாயுள்ள விஷயங்களை நீக்குவதற்கு நம் முயற்சிகளைத் தொடர்ந்து நடத்தி ஐரோப்பிய சமாதானத்தை நிலைநிறுத்த உதவிசெய்யவும் நாம் உறுதி செய்கிறோம்.

அ. ஹிட்லர்

நெவில்லி சேம்பர்லேன்

We are resolved that the method of consultation shall be the method adopted to deal with any other questions that may concern our two countries, and we are determined to continue our efforts to remove possible sources of differenes and thus to contribute to assure the peace of Europe.

A Hitler

Neville Chamberlain

ரன்ஸிமன் செக்கோஸ்லோவேகியாவுக்குச் சென்று சமரசம் செய்வதற்காக நிலைமையைப் 'பரிசீலனை' செய்தார். மே மாதத்தில் குமுற ஆரம்பித்த நெருக்கடி செப்டம்பரில் அநேகமாக வெடித்துவிட்டது. ஜெர்மன் துருப்புகள் செக் எல்லைக்கு வந்துவிட்டன. செக் நாட்டின் வீழ்ச்சி இன்றைக்கா, நாளைக்கா என்றிருந்தது. ஹிட்லர் இப்போது வெற்று வேட்டுப் போடவில்லை. துருப்புகளை உள்ளே அனுப்புவதற்குத் தயாரா யிருந்தார். எந்த நிமிஷத்திலும் உலக யுத்தம் மூண்டுவிடும் என்ற நிலைமை ஏற்பட்டிருந்தது. பிரான்ஸ், பிரிட்டன் இரண்டிலும் படைதிரட்டும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன. யுத்தத்தை இனி தடுக்கமுடியுமா என்றே எங்கும் கவலையா யிருந்தது. கடைசி நிமிஷத்தில், சேம்பர்லேன் சரித்திரத்திலேயே கேள்விப்பட்டிராத ஒரு காரியத்தைச் செய்தார். ஜெர்மனிக்குச் சென்று நேரில் ஹிட்லரைப் பார்க்கப் போவதாகத் தெரிவித்தார். இந்தப் பேச்சு வார்த்தைகள், இன்று சரித்திரப் பிரசித்தமாயிருக்கும் மூனிக் ஒப்பந்தத்தில் முடிந்தன. இந்த ஒப்பந்தத்தின் பலனாக, பிரிட்டனும், பிரான்ஸும் சேர்ந்து, பூரண கும்பத்துடன் ஹிட்லரை வரவேற்று, செக்கோஸ்லோவேகியாவை அவன் வசம் ஒப்படைத்தன. செப்டம்பர் 30உ செக் நாடு ஹிட்லரிடம் கொடுக்கப்பட்டது. செக் பிரஸிடென்டான டாக்டர் பினேஷ் நாட்டைவிட்டு வெளியேறினார். ஜெர்மன் துருப்புகள் செக் நாட்டுக்குள் பிரவேசித்தன. ஹிட்லரும் நேரில் அங்கு விஜயம் செய்து வெற்றி ஊர்வலம் வந்தான். இது நடந்த கொஞ்ச நாட்களுக்கெல்லாம், பொஹீமியாவும், மொரேவியாவும், ஜெர்மனியின் பாதுகாப்பு ஆதிக்கத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டன. இப்படியாக ஹிட்லர் தன்னுடைய மத்ய ஐரோப்பியக் கனவைச் சாதித்துக்

கொண்டான். கடைசி வரையில் பிரமாதமாக ஆசைவார்த்தை காட்டி, ஜனநாயக நாடுகள் செக் நாட்டைக் காட்டிக் கொடுத்தன. ஜெயித்த கட்சி என்ற மமதையில் மகா யுத்தத்துக்குப் பிறகு, பிரிட்டனும், இதர நேச நாடுகளும் ஜெர்மனியை அவமானப்படுத்தின. ஜெயிக்கப்போகிற கட்சி என்ற நம்பிக்கையில், இன்று அதே ஜெர்மனி, ஹிட்லரின் தலைமையில், அதே நாடுகளுக்கு அந்தப் பாடத்தையே திருப்பி வாசிக்கிறது.

———

...க் ஒப்பந்தத்தில்
...லன் கையெழுத்திடுகிருர்
...918, செப்டம்பர் 29உ.]

கத்தியை எறிந்துவிட்டுப் பேனுவால் ராஜ்யங்களைப் பாதுகாப்பதற்கு ஒரு திருஷ்டாந்தம்.

14. போலந்து—டான்ஸிக்

“டான்ஸிக் சமாசாரம் என்ன?” என்று ஹிட்லர் கேட்கிறுன். போலந்து ஆடு திருடிய கள்ளனைப் போல் விழிக்கிறது. இன்று போலந்துக்கு இந்தக் கதி நேர்ந்திருப்பது, “தன் வினை தன்னைச் சுடும்” என்ற பழமொழியை ருசிப்பிக்கிறது. செக்கோஸ்லோவேகிய நெருக்கடியின் போது, போலந்து மிகவும் மானக்கேடான முறையில் நடந்துகொண்டது. உதவி செய்யாவிட்டாலும், போலந்து ஒதுங்கியாவது நின்றிருக்கலாம். ஆனல், செக்கோஸ்லோவேகியா கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், போலந்து அந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொண்டு இன்னும் அதிகக் கஷ்டங்களை விளைவித்தது. போலந்தின் வெளிநாட்டு மந்திரியான கர்னல் பெக் என்பவர் கெட்டிக்காரர். பிரிட்டனும், பிரான்ஸும் அனுஷ்டிக்கும் கொள்கையின் பலனுக, ஜெர்மனியின் பல கோரிக்கைகள் விட்டுக் கொடுக்கப்படும் என்பதை அவர் அறிந்திருந்தார். கோரிக்கைகளை விட்டுக்கொடுப்ப தென்றுல், முதலில் சிறிய நாடுகள் தலையில்தான் கையை வைப்பார்கள். காலனிகள் பிரச்னை வரும்போதுதான் பெரிய வல்லரசுகளின் நலன்கள் நேரடியாகப் பாதிக்கப்படும். அது வரையில், ஹிட்லர் பாடு கொண்டாட்டந்தான். ஆகையால், ஹிட்லர்தான் ஜெயிக்கும் குதிரை என்பதைத் தெரிந்து கொண்டார். இதை முன்னிட்டு, நாஜிகளுக்கு ஆதரவான கொள்கையை அனுஷ்டிக்க ஆரம்பித்தார். மேலும், செக் நாட்டில் போலந்துக்கும் கொஞ்சம் அக்கரை இருந்தது. டெஷன் என்ற இடத்தைப்பற்றி போலந்தும், செக் நாடும் யுத்தம் முடிந்தவுடன் தகராறு செய்திருக்கின்றன. சூடேடன் ஜில்லாக்களை ஹிட்லர் எடுத்துக்கொண்டுவிட்டால்,

அந்தச் சமயம் பார்த்து தாம் டெஷனைச் சேர்த்துக்கொண்டு விடலாம் என்று 'பிளான்' போட்டார் கர்னல்பெக். செக்கோஸ்லோவேகியா பிரிவினையாய்விட்டால், ஹங்கேரியுடன் ஒரு பொது எல்லைப்புறம் ஏற்படுத்திக் கொள்ளலாமென்பதும் அவர் விருப்பம். நாஜித் தலைவர்கள் கர்னல் பெக்குக்கு உற்சாகமாக ஆதரவளித்ததில் ஆச்சரியமில்லை. தங்கள் காரியம் நிறைவேறுவதற்கு இது சௌகரியமாயிருக்குமல்லவா! ஜெனரல் கோயரிங் போலந்துக்குச் சென்றிருந்த போது, போலந்து, ஸ்லவேக்கியாவைச் சேர்த்துக் கொண்டுவிட வேண்டுமென்று கூட, கர்னல் பெக்கிடம் ஆசை காட்டினார். இதற்கு ஹங்கேரிக்கு ஏதாவது ஈடு செய்ய வேண்டுமே! அதற்கு ருமேனியாவில் ஒரு பகுதியைக் கொடுத்துவிடலாமென்று சொன்னார். இதன் அர்த்தம் என்ன? போலந்து, தன் சகாவான ருமேனியாவை ஏமாற்றி, ஹங்கேரியுடன் சேர்ந்து, செக்கோஸ்லோவேகியாவுக்கு விரோதம் செய்யவேண்டுமென்பதைத் தவிர, இதற்கு வேறென்ன அர்த்தம்? ஹிட்லருக்கு நல்ல பிள்ளையாய் நடந்துகொண்டு, டான்ஸிக் பிரச்னையில் தப்பித்துக் கொள்ளவேண்டுமென்று போலந்து நினைத்தது. இந்த இடத்தில் சற்று பூர்வ சரித்திரத்தைக் கவனிப்போம்.

1933-ல் ஹிட்லர் ஆதிக்கத்துக்கு வந்தவுடன், ஒரு பிரிட்டிஷ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், ஜெர்மனியின் கிழக்கு எல்லைப் புறம், போலந்துக் கடற்பாதை ஆகியவைகளைப் பற்றிக் குறிப்பிட்டான். இந்தக் கடற்பாதை போலந்திடம் இருப்பது வெட்கக் கேடான அநீதி யென்றும், இது கண்டிப்பாக ஜெர்மனியிடம் திரும்பி வந்தாக வேண்டுமென்றும் ஹிட்லர் சொன்னான். "வார்த்தைக

ளால் எல்லைப்புறங்கள் மாற்றப் படுவதில்லை'' என்று கர்னல் பெக் இதற்குப் பதிலளித்தார்.

போலந்துக்கும் ஜெர்மனிக்கு மிடையே வெகு கால மாக விரோத பாவம் இருந்து வருகிறது. ஜெர்மன் ராணுவ ஆக்ரமிப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, பிரான்ஸ் மத்ய ஐரோப்பாவில் இந்தச் சிறு நாடுகளை யெல் லாம் தன் பக்கமாகச் சேர்த்து வைத்துக்கொண்டிருந்தது. லொகார்னோ ஒப்பந்தம் முடிந்து ஒரு வருஷத்திற்கெல்லாம் மார்ஷல் பில்ஸுட்ஸ்கி போலந்தின் சர்வாதிகாரியானர். யுத்த காலத்தில் இவர் ஜெர்மன் ஆதரவுடன் ருஷியாவை எதிர்த்துக்கொண்டிருந்தார். இவர் ஆதிக்கத்துக்கு வந்த வுடன் போலந்தின் கொள்கையையே அடியோடு மாற்றி ஞர். பில்ஸுட்ஸ்கி காலத்தில்தான், ஏழு வருஷங்களுக்கு முன்பு, கர்னல் பெக் போலந்தின் வெளிநாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டார். 1932-ல் ஆயுதப் பரிஹரண மகாநாடு நடைபெற்றது. இதற்குக் காரணமாயிருந்தது பிரிட்டன் தான். 1932 டிசம்பரில் ஆயுதப் பரிஹரண மகாநாடு, ஜெர்மனிக்கு ஆயுத சமத்வ உரிமை யளித்தது. பிரான்ஸும் இதை ஆதரித்தது. ஜெர்மனிக்கு ஆயுத சமத்வ உரிமை கொடுத்துவிட்டால், சில வருஷங்களில் ஜெர்மனிக்கு, பிரான்ஸுக்குச் சமமான ஆயுத பலம் ஏற்பட்டுவிடும். அப்போது போலந்துக்கு ஜெர்மனியிலிருந்து ஆபத்து ஏற்படக்கூடும். இவையெல்லாம் ஹிட்லர் ஆதிக்கத்துக்கு வருமுன் நடந்த சம்பவங்கள்.

ஜெர்மனி-போலந்து உறவுகள் எந்த நிமிஷத்தில் அறுந்து விடுமோ வென்று பயப்படுவதற்குக் காரணமா யிருப்பது டான்ஸிக் நகரம்தான். டான்ஸிகைச் சுற்றி இருப்பது போலந்துப் பிரதேசம். வெர்ஸேல்ஸ் உடன்படிக்

கையின் பலனுக, டான்ஸிக் ஒரு சுதந்தர நகரமாகச் சிருஷ்டிக்கப்பட்டது. இருந்தாலும் அதில் போலந்துக்குப் பல உரிமைகளுண்டு. டான்ஸிகின் நிர்வாகம் சர்வதேச சங்கத்தின் நேர் மேற்பார்வையில் வைக்கப்பட்டது. இதில் இருப்பவர்கள் பெரும்பாலும் ஜெர்மனியர்களே. ஆகவே, இதை நிர்வகிக்கும் பொறுப்பு சர்வதேச சங்கத்துக்குப் பெரிய கஷ்டமாகவேதான் இருந்தது. போலந்துக்கும், டான்ஸிகுக்கு மிடையே சதா ஏதாவது சண்டை பூசல் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். டான்ஸிகின் சுதந்தரத்தை அபகரித்து விடுவதற்குப் போலந்தியர்கள் எவ்வளவோ செய்து பார்த்தார்கள். ஆனல், ஒன்றும் பலிக்கவில்லை. ஆகவே, போலந்து, பால்டிக் சமுத்திரத்தில், போலந்துக் கடற்பாதையின் எல்லைக்குள், டான்ஸிகுக்குச் சமீபத்தில் கிட்னியா என்று ஒரு துறைமுகத்தைக் கட்டிற்று. இது டான்ஸிகின் வெளி வர்த்தகத்தைப் பெரிதும் பாதித்திருக்கிறது.

ஹிட்லர் ஜெர்மனியில் ஆதிக்கத்துக்கு வந்த பிறகு, நிலைமை கேவலமாயிற்று. 1933-மார்ச் மாதத்தில் ஹிட்லர் கிழக்குப் பிரஷ்யாவுக்குப் போகும் மார்க்கத்தில் போலிஷ் பிரதேசத்தின் வழியாக விமான மார்க்கமாகச் சென்ருன். இந்தச் சம்பவம் நடந்த ஒரு வாரத்திற்குள், முஸோலினி அப்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாயிருந்த ராம்ஸே மாக்டனுல்டையும், வெளிநாட்டு மந்திரி ஸர் ஜான் ஸைமனையும் ரோமுக்கு அழைத்து, அவர்களிடம் நான்கு வல்லரசுகள் ஒப்பந்தத் திட்ட மொன்றைச் சமர்ப்பித்தார். அதாவது பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாலு நாடுகளும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டியது. சர்வதேச சங்கத்தின் அமைப்புக்

(இடது பக்கத்திலிருந்து வரிசையாக)

ஜெர்மன் அந்நியநாட்டு மந்திரி ஹேர் வான் ரிப்பன்டிராப்;
பிரிட்டிஷ் பிரதம மந்திரி நெவில்லி சேம்பர்லேன்; ஹேர் ஹிட்லர்.
சமாதானப் பேச்சின் நடுவே தேயிலை அருந்த அமர்ந்திருக்கும் காட்சி.

குட்பட்டு, வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை ஷரத்துக்களை மாற்றவேண்டும் என்ற கொள்கையை இந்த வல்லரசுகள் ஒப்புக்கொள்ள வேண்டியது. உடன்படிக்கை ஷரத்துக்களை மாற்றவேண்டும் என்ற பேச்சு எழுந்த உடனேயே போலந்து குதிக்க ஆரம்பித்துவிட்டது. எவ்வளவோ சிரமப்பட்டுப் பெற்றதை இழந்துவிடுவதாவென்று பில்ஸுட்ஸ்கி துடித்தார். ஏப்ரல் 21உ யன்று பில்ஸுட்ஸ்கி, வில்னுவில் பெரிய ராணுவ ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்.

“நீங்கள் என்ன விரும்புகிறீர்கள்? சண்டையா, சமாதானமா?” என்று ஜெர்மன் சர்க்காரைக் கேட்கும்படி, பெர்லினிலிருந்த போலந்து ஸ்தானீகருக்கு பில்ஸுட்ஸ்கி உத்தரவனுப்பினர். “எங்களுடன் சேர்ந்து ஜெர்மனி மீது படையெடுக்கத் தயாராயிருக்கிறீர்களா?” என்று பிரான்ஸைக் கேட்டார்.

1923-ல் ரூர் பிரதேசத்தைப் பிடித்துக்கொண்ட பிறகு, பிரான்ஸ் பிரமாதமான ராணுவ ஏற்பாடுகள் எதுவும் செய்யவில்லை. இந்தச் சமயத்தில் திடீரென்று பில்ஸுட்ஸ்கி இப்படிக் கேட்கிறார். ஜெர்மனியில் நாஜிகளின் ஆர்ப்பாட்டம் உச்சஸ்தாயியி லிருக்கிறது. பிரான்ஸ் யுத்தத்திற்குத் துணியவில்லை. சென்ற யுத்தத்தின் பயங்கரங்களை பிரெஞ்சு மக்கள் மறந்துவிடவில்லை. பிரெஞ்சு மக்கள் எக்காரணத்தை முன்னிட்டும் யுத்தத்தை விரும்பவில்லை யென்பதும் சர்க்காருக்குத் தெரியும். ஆகவே, பில்ஸுட்ஸ்கியின் அழைப்பை பிரான்ஸ் நிராகரித்தது.

வெறும் வாயை மெல்லுபவனுக்கு ஒரு பிடி அவல் கிடைத்தால் சும்மா இருப்பானா? எது சமயம் என்று

பார்த்துக்கொண்டிருந்த ஹிட்லர், இந்த நிலைமையை நன்ருக உபயோகித்துக் கொண்டான். போலந்தில் வசிக்கும் 15 லக்ஷம் ஜெர்மனியர்கள் கொடுமைப்படுத்தப் படுகிருர்களாமே என்று ஜெர்மனி யெங்கும் ஒரே கொதிப்பாயிருந்த சமயம். போலந்து பிரதிநிதி ஹிட்லரைச் சந்தித்தார். ஜெர்மன் பிரதிநிதி கர்னல் பெக்கைச் சந்தித்தார். இந்தச் சம்பாஷணைகளின் பலனுகமே 4உ இரண்டு நாடுகளும் சேர்ந்து ஒரு அறிக்கை விடுத்தன. இரண்டு நாடுகளுக்கும் பொதுவாக உள்ள விஷயங்களை விருப்பு வெறுப்பு இல்லாமல் பரிசீலனை செய்ய விரும்புவதாக அவ்வறிக்கை கூறிற்று. இப்போதுள்ள உடன்படிக்கை உரிமைகள் அப்படியே இருக்கவேண்டு மென்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் ஹிட்லரின் ஓர் ஆசை பூர்த்தியாயிற்று. அதாவது, சர்வதேச சங்கம் எப்போதுமே அவனுக்குக் கண்ணை உறுத்திக்கொண்டிருந்தது. யுத்தத்தில் ஜெர்மனி தோல்வி யடைந்ததைச் சாசுவதமாக ஞாபகப்படுத்திக் கொண்டே யிருக்கும் ஒரு சின்னமாக ஹிட்லர் அதைக் கருதினுன். தேசங்களுக் கிடையே ஏற்படும் தகராறுகளை, சம்பந்தப்பட்ட நாடுகள் நேரில் தாமே தீர்த்துக்கொள்ள வேண்டு மென்பதுதான் ஹிட்லரின் விருப்பம். இப்போது போலந்தும், ஜெர்மனியும், தாமே பொது நலன்களைப் பரிசீலனை செய்யச் சம்மதித்தது ஹிட்லருக்கு ஒரு வெற்றி.

இன்று, 1939-ம் வருஷத்தில் ஹிட்லர் டான்ஸிகையும், கடற்பாதையையும் திருப்பிக் கேட்கிருன். பிரதேச அமைப்பின்படி கடற்பாதையும், டான்ஸிகும் ஜெர்மனிக்கு இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில் ஜெர்மனிக்கும், கிழக்குப் பிரஷ்யாவுக்கும் மத்தியில், இந்தக் கடற்பாதை தன்னந் தனியாக நீளமாகப் போகிறது. இரண்டி

லும் ஜெர்மனியர்கள்தான் இருக்கிருர்கள். ஆனல், இடையே இருக்கும் அந்தக் கோவணப் பிரதேசம் மட்டும் வேறு நாட்டின் கீழ் இருக்கிறது. இது நீடித்து நிற்குமென்று யாராவது நம்ப முடியுமா? இருந்தாலும், இதைப் பற்றித் தான் இன்று பிரமாதமாயிருக்கிறது. போலந்தின் சுதந்தரம் ஆக்ரமிக்கப்பட்டு விட்டதென்று போலந்து கருதினல், பிரிட்டனும், பிரான்ஸும் அதன் உதவிக்கு வருமென்று பகிரங்கமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்பாடுகளும், ரகசிய பேரங்களும், வெகு மும்முரமாக நடக்கின்றன. ருஷியாவுடன் ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன. ருஷியா தன் ஆயுத பலத்தைப் பற்றிப் பிரமாதமாகப் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறது. ஆனல், ஜெர்மனியையும் விடக் கடுமையான கண்மூடி தர்பார் நடக்கும் அந்தத் தேசத்தின் உண்மை நிலைமையை யார் கண்டார்கள்? சபைக்கு வந்தாலல்லவா ஆட்டக்காரியின் யோக்கியதை தெரியும்? நடுவில் அமெரிக்க பிரஸிடென்டான ரூஸ்வெல்ட் ஏதோ பயமுறுத்துகிருர். ஆனல், அமெரிக்காவின் விசித்திரங்களை நம்பி யாரும் எதுவும் செய்ய முடியாது. வில்ஸனுக்கும், அவருடைய சிருஷ்டியான சர்வதேச சங்கத்திற்கும் அங்கீகாரம் கொடுக்க மறுத்த நாடல்லவா அது? எல்லா நாடுகளையும் ரூஸ்வெல்ட் மகாநாட்டுக்கு அழைத்தார். ஆனல், சர்வதேச சங்கத்தின் கபோதித்தனத்தைக் கண்ணூரப் பார்த்துவரும் ஹிட்லர், இதற்குச் சம்மதிப்பான? "ஜெர்மனியைக் கண்டு நீங்கள் பயப்படுகிறீர்களா" வென்று லிதுவேனியா, நெதர்லான்ட்ஸ், பின்லாந்து, ஸ்விட்ஜர்லாந்து ஆகிய சிறிய நாடுகளை ஹிட்லர் கேட்டான். இல்லையென்று அவைகள் பதிலளித்தன. ரூஸ்வெல்டுக்கு ஹிட்லர் அளித்த பதிலில் தடபுடல் எதுவுமில்லை. ஆனல், அவருடைய யோசனை ஒன்றுக்காவது ஹிட்லர் சம்மதிக்க

வில்லை. மகாநாடுகளில் தனக்கு நம்பிக்கை இல்லை யென்பதைத் தெரிவித்து விட்டான். பிரான்ஸும், பிரிட்டனும், போலந்துக்கு உதவி செய்வதாக வாக்களித்திருந்தாலும், போலந்துக்காக அந் நாடுகள் யுத்தத்தில் இறங்குமா? டான்ஸிக் பிரச்னையைச் சமரசமாகத் தீர்த்துக்கொண்டு விடவேண்டு மென்று பிரிட்டன் சொல்ல ஆரம்பித்துவிட்டது. ஒரு புறம் ருமேனியாவின் சுதந்தரமே ஆபத்திலிருக்கிறது. மெமல் ஜெர்மனியிடம் கொடுக்கப்பட்ட பிறகு, லிதுவேனியா அநேகமாக ஜெர்மன் ஆதிக்கத்தி லிருக்கிற தென்றே சொல்லலாம். டான்ஸிக் பூராவும் இப்போது ஜெர்மன் ராணுவ தளமாக இருந்து வருகிறது. யாத்ரீகர் மாதிரி ஏராளமான ஜெர்மன் ராணுவ ஆபீஸர்கள் அங்கு வந்திருக்கிறார்கள். எல்லைப் புறங்களில் துருப்புகளும் தயாரா யிருக்கிறன. டான்ஸிகை ஜெர்மனி பலாத்காரமாகப் பிடித்துக்கொண்டால், அது போலந்தின் சுதந்தரத்தை ஆக்ரமிக்கும் செய்கைதா னென்று ஒப்புக்கொள்ளப்பட்டால், உடனே பிரான்ஸ், பிரிட்டன், ருஷியா மூன்று நாடுகளும் சேர்ந்து மேற்கே ஜெர்மனியை அடிக்கத் தயாரா யிருக்கவேண்டும். அல்லது செட்டியார் சிங்காரித்துக்கொண்டு வருவதற்குள் பட்டணம் கொள்ளைபோய் விடப் போகிறதா? பிரிட்டனும் பிரான்ஸும், ஆடம்பரமாகப் பேசினாலும்கூட, போலந்துக்காக அவைகள் யுத்தத்தில் இறங்கமாட்டா என்றுதான் தோன்றுகிறது. ருஷியா இவர்களோடு எதற்காக ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்? ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கா? எந்த ஜனநாயகத்தை? பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கா? பிரிட்டனின் ஏகாதிபத்ய நலன்கள் பாதிக்கப்படக் கூடாதுஎன்ற ஜனநாயகத்தைக்காப்பாற்றுவதற்கா? ருஷியாவுக்கும், ஜெர்மனிக்கும் ஒரு விஷயத்தி

லாவது ஒற்றுமை இருக்கிறது. இரண்டும் சர்வாதிகார நாடுகள். இரண்டிலும் ரகசியப் போலீஸ் ஆட்சிதான் நடக்கிறது. சர்க்கார் கட்சியைத் தவிர வேறு கட்சிகள் இருக்கக்கூடாதென்றுதான் இரண்டு நாடுகளின் கொள்கையும். சர்க்காருக்கு விரோதமாக இருப்பவர்கள் இரண்டு நாடுகளிலும் நாய்களைப் போல் சுட்டு வீழ்த்தப்படுகிறார்கள். நிர்வாக முறையில் ஜெர்மனியுடன் இவ்வளவு நெருங்கிய ஒற்றுமையுடைய ருஷியா, முதலாளிவர்க்க நாடாகிய பிரிட்டனுடன் சேர்ந்து, சர்வதேச முதலாளிவர்க்கத்தின் போர்வையாகிய பார்லிமென்டரி ஜனநாயகத்தைக் காப்பாற்ற உதவிசெய்ய ஒப்புக்கொள்வது ருஷியக் கொள்கைகளுக்கு ஏற்றதாகத் தோன்றவில்லை. ஆகையால், இந்தப் பேச்சு வார்த்தைகள் எப்படி முடிந்தாலும் நிரந்தரப் பலனுள்ளவையா யிருக்க முடியாது என்று யூகிக்கலாம்.

டான்ஸிகுக்காக ஹிட்லர் யுத்தத்துக்குப் போவானா வென்று கேட்கப்படுகிறது. இந்தக் கேள்வியின் ரூபமே தவறு. ஹிட்லர் யாருடன் யுத்தத்துக்குப் போவது? அதைப் பிடித்துக்கொள்ளவேண்டியது என்ன பாக்கியிருக்கிறது? "அது எங்கள் பிரதேசமாய்விட்டது!" என்று அறிவிக்கவேண்டியதுதானே!

15. பாக்கியுள்ள பிரதேசங்களும், பால்டிக் ஆதிக்கமும்

யுத்தத்தில் தோல்வி யடைந்த ஜெர்மனி மீண்டும் தலை தூக்க முடியாமல் செய்வதற்காக ஜனநாயக நாடுகள் ஜெர்மனியைச் 'சுற்றி வளைத்துக்கொள்ளும்' கொள்கை யைத் தீவிரமாகப் பின்பற்றுகின்றன என்பது ஹிட்லரின் முக்கியமான புகார்களில் ஒன்ருகும். ஜனநாயக நாடுகளின் ஒவ்வொரு காரியமும், இந்த நோக்கத்தால்தான் தூண்டப் படுகிறது என்று ஹிட்லர் பயப்படுகிருன். அல்லது பயப் படுவது போல் காட்டிக்கொள்ளுகிருன். ஐரோப்பாவி லுள்ள சிறு நாடுகளை யெல்லாம் பிரிட்டனும், பிரான்ஸும் சிநேகம் பிடித்து வைத்துக்கொண்டிருக்கும் காரண மென்ன? யுத்தத்துக்குப் பிறகு பல சிறு நாடுகள் சிருஷ்டிக் கப்பட்டதன் காரண மென்ன? நாலாபுறங்களிலும் ஜெர் மனியை வளைத்துக்கொண்டு, அதை அசையமுடியாமல் செய்துவிட வேண்டுமென்பதே இவைகளின் அந்தரங்கம் என்று ஹிட்லர் நம்புகிருன். இந்த வளையத்திலிருந்து வெளியே வரவேண்டுமானால், ஜெர்மனி என்ன செய்ய வேண்டும்? முதலில் ஜனநாயக நாடுகளின் செல்வாக்கின் கீழ் இருக்கும் இந்தச் சிறு நாடுகளின் முதுகெலும்பை முறிக்கவேண்டும். அந்த நாடுகளை அந்தச் செல்வாக்கி லிருந்து பிரித்துவிடவேண்டும். ஒன்று அந்நாடுகள் தன் ஆதிக்கத்தின் கீழ் வரவேண்டும்; அல்லது, தனக்கு ஆதர வளிக்கக்கூடியவர்கள் அந்நாடுகளில் நிர்வாகம் நடத்து பவர்களா யிருக்கவேண்டும். இந்தக் காரியத்தைத்தான் ஹிட்லர் செய்துகொண்டிருக்கிருன். ஹிட்லர் வெறி பிடித்த ஒரு பைத்தியக்காரனைப் போல் சில சமயங்களில் தோன்றினும், அந்தப் பைத்தியத்திலும் ஒரு குறிக்கோள்

இருக்கிறது. ஜெர்மனி மீண்டும் தான் "இழந்த பெருமை" யைப் பெற்று, ஒரு பெரிய வல்லரசாக வேண்டும். சமாதானமாக, ரத்தம் சிந்தாமல் இதைச் சாதித்துக் கொள்ள முடியுமென்றால் சரி. இல்லாவிட்டால், யுத்தம். ஹிட்லர் யுத்தத்துக்குப் பயப்படவேண்டிய அவசியமே இல்லை. "நிச்சயம் யுத்தத்துக்கு வருவோம்!" என்று செக்கோஸ்லோவேகிய நெருக்கடியின் போது ஜனநாயக நாடுகள் உறுதியாக இருந்திருந்தால், ஹிட்லர் பணிந்திருப்பான் என்று ஒரு கக்ஷியார் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுபவர்கள், ஹிட்லர் நல்ல சூட்சும புத்தியுடைய அரசியல்வாதி என்பதை மறந்து விடுகிறார்கள். எதிரியின் பலஹீனம் என்னவென்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்திற்கே ஆபத்து ஏற்பட்டாலொழிய, பிரிட்டன் யுத்தத்தில் இறங்காது. பிரிட்டன் யுத்தத்தில் இறங்குவதென்பது அவ்வளவு எளிதான காரியமில்லை. ஹிட்லர் வெறும் ஆண்டி. கிடைத்தால் நாடு, இல்லாவிட்டால் நஷ்டமொன்றுமில்லை. பிரிட்டன் அப்படியில்லை. கடைசி வரையில் ஹிட்லர் பயமுறுத்தியே பார்ப்பான். கிடைத்தது கிடைக்கட்டுமே. அவன் யுத்தத்திற்குப் பயப்படவேண்டியதில்லை என்பதற்குக் காரணம் இதுதான். இன்னொரு யுத்தம் ஏற்பட்டால், அப்போது, எந்தெந்த இடங்கள் தனக்கு வேண்டும், எந்தெந்த நாடுகளின் மூலப் பொருள்களும், ஆயுதங்களும், உணவுப் பொருள்களும் வேண்டும் என்பதையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டுதான் ஹிட்லர் தன்னுடைய நாடு பிடிக்கும் திட்டத்தை நிறைவேற்றி வருகிறான்.

ஆஸ்திரியா, செக்கோஸ்லோவேகியா, மெமல் முதலியவை தீர்ந்த விஷயங்கள். டான்ஸிகும், போலந்துக்

கடற்பாதையும், இன்னும் முடிவுபெருமல், எந்த நிமிஷத்தில் வெடிக்குமோ வென்று அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. ஆஸ்திரியாவைச் சேர்த்துக் கொண்டதன் மூலம், அங்கு சேமித்து வைக்கப்பட்டிருந்த தங்கம் ஹிட்லருக்கு மிகவும் உபயோகமா யிருந்தது. செக் நாட்டின் பிரமாண்டமான ஆயுதச்சாலை கிடைத்துவிட்டது. செக் நாட்டின் எல்லைப்புறத்திலிருந்த பாதுகாப்பு அரண்கள் மிகவும் பிரசித்தமானவை. மெமலின் வரவினுல் லிதுவேனியாவின் நாடியைப் பிடித்துப் பார்த்தாய்விட்டது. பாக்கி என்ன இருக்கிறது என்று பார்ப்போம்.

டென்மார்க்: யுத்தத்தில் ஜெர்மனி வடக்கு ஸ்லெஸ்விக்கை இழந்தது. இப்போது இங்கு ஜெர்மனியர் சிறிய மைனுரிடிதான். இருந்தாலும், இதைத் திருப்பிக் கேட்டுக் கொண்டிருக்கிருன். இது மிகவும் சிறிய ஜில்லா. இதன் ஜனத்தொகையே 1,84,000 தான். இருந்தாலும் இதை ஜெர்மனி கேட்பதற்குக் காரணம், இதன் மூலம் டென்மார்க்கைத் தன் செல்வாக்கின் கீழ்க் கொண்டு வரலாமென்ற நம்பிக்கையே. அந்த ஜில்லாவில் நாஜிக் கக்ஷி, புயல் படை முதலிய எல்லா ஆடம்பரங்களும் இருக்கின்றன. 1938-ல் ஆஸ்திரிய சம்பவத்தைத் தொடர்ந்து இங்குள்ள நாஜிகள் ஒரு பெரிய ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள். "ஜெர்மனிக்கும், டென்மார்க்குக்கு மிடையே யுத்தத்துக்கு முன்னிருந்த எல்லையான கொங்கியா வரையில் ஸ்வஸ்திகா கொடி பறக்கவேண்டும்" என்று அன்று பிரசாரம் ஆரம்பமாயிற்று.

வெண்ணெய், முட்டை முதலிய உணவுப் பொருள்கள் டென்மார்க்கில் அதிகம். யுத்தம் ஏற்பட்டால் ஜெர்மனிக்கு இவை மிகவும் அவசியமான பொருள்கள். ஆகையால்,

டென்மார்க்கைத் தன் வசப்படுத்திக் கொள்ளவேண்டு மென்று ஹிட்லர் விரும்புவது இயற்கையே. மேலும், பால்டிக் சமுத்திரத்தில் பிரவேசிக்க டென்மார்க் மிகவும் உபயோகமாயிருக்கும். பால்டிக்கில் ஆதிக்கம் வகிப்பது ருஷியாவைத் தடை செய்வதற்கு ஒரு முக்கிய சாதனம். நாஜிகளின் அரசியல் பிரசாரம் ஒரு புறமிருக்க, டென்மார்க் வர்த்தகத் துறையிலும் ஜெர்மனிக்குத்தான் அதிகச் சலுகைகள் இருக்கின்றன. டென்மார்க்கில் சோஷலிஸ்ட் நிர்வாகம் நடக்கிறது. இங்கு பாட்டாளி மக்களுக்குள்ளேயே இரண்டு வர்க்கங்க ளிருக்கின்றன. தொழிலாளர் ஆதரவுடன் நிர்வாகம் நடக்கிறது. ஆனல் விவசாயிகள் தம் விளைபொருள்களின் ஏற்றுமதிக்கு ஜெர்மனியையே எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, தங்கள் சொந்த நன்மையையே முன்னிட்டு, இவர்கள் ஜெர்மனி யின் நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்கத் தயாரா யிருப்பார்கள். இங்குள்ள விவசாயிகள் கட்சியைச் சாமர்த்தியமாக உபயோகித்துக்கொண்டு, ஜெர்மனி தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம் இருக் கிறது.

மேலும், டென்மார்க் மிகவும் அனுதரவான நாடு. அதனிடம் ஆயுத பலம் இல்லை. எந்தச் சமயத்திலும், யார் வேண்டுமானலும் டென்மார்க்கின் மீது ஆக்ரமிக்கலாம். ஆகையால், வட ஸ்லெஸ்விக்கைக் கைப்பற்றிக்கொண்டு விட்டால், ஜெர்மனி எந்த நிமிஷத்திலும் டென்மார்க்கை ஆட்டிவைக்கலாம். அந்தச் சமயத்தில் விவசாயிகள் கக்ஷி உதவியா யிருக்கக்கூடும். டென்மார்க்கில் ஜெர்மனிக்கு விரோதமாக மூச்சுவிடக் கூடாது. நாஜிகளுக்கு விரோத மாக அரசியல்வாதிகளோ, பத்திரிகைகளோ, எதுவும்

பேசவோ, எழுதவோ கூடாது. மூனிக் ஒப்பந்தத்துக்குப் பிறகு, பிரிட்டிஷ் பார்லிமென்டில் நடந்த விவாதத்தில், சில மெம்பர்கள் ஜெர்மனியின் பயங்கர முறைகளைக் கடுமை யாகத் தாக்கிச் செய்த பிரசங்கங்களை டென்மார்க் பத்திரிகை ஒன்று பிரபலமாகப் பிரசுரித்திருந்தது. பெர்லினி லிருந்து டென்மார்க் சர்க்காருக்கு தாக்கீது வந்தது. "இந்தப் பஞ்சை நாட்டில், ஜெர்மனிமீது துவேஷப்பிரசாரம் செய்யும்படி அவ்வளவு துணிச்சல் ஏற்பட்டுவிட்டதா?" என்று கேட்கப்பட்டது. இந்தச் செய்தியைப் பிரசுரிப் பதற்குக் காரணமாயிருந்த ஆசிரியருக்கு உத்தியோகம் போய்விட்டது.

ஸ்வீடன்:—ஸ்வீடனைத் தன் செல்வாக்கின் கீழ்க் கொண்டுவர வேண்டுமென்பதிலும் ஜெர்மனிக்கு அக்கறை யுண்டு. அங்கு இரும்பு ஏராளமாகக் கிடைக்கிறது. ஜெர் மனியின் ஆயுத விஸ்தரிப்பு வேலைக்கு இது மிகவும் அத்தியா வசியம். ஸ்வீடன் சுரங்கங்களில் கிடைக்கும் இரும்பில் முக்கால் பாகம் ஜெர்மனிக்குத்தான் ஏற்றுமதி செய்யப்படு கிறது. ஆயுத வெறி பிடித்தலையும் இந்தக் காலத்தில், இரும் புக்கு எல்லா நாடுகளிலும் கிராக்கி இருக்கிறது. ஆகையால், ஜெர்மனி வாங்காவிட்டால், இதர நாடுகள் அதற்குத் தயா ரரய்க் காத்துக்கொண் டிருக்கின்றன. இந்த நிலைமையில் ஸ்வீடனை விரோதித்துக்கொள்வது ஜெர்மனிக்கு நல்ல தன்று. ஜெர்மன் பத்திரிகைகளில் ஸ்வீடனுக்கு ஆத்திர மூட்டக்கூடிய எதுவும் பிரசுரிக்கப்படுவதில்லை. அதற்கு மாறாக, இரண்டு நாட்டினருக்கு மிடையே ஜாதீய பந்தம் இருக்கிற தென்பதையே வற்புறுத்தி வருகின்றன. ஆனால், ஸ்வீடனுக்குள் ஜெர்மன் மைனாரிடி என்ற பிரச்னை எதுவும் கிடையாது. ஆயுத பலமும் இருக்கிறது.

இருந்தாலும், ஒரு யுத்தம் ஏற்பட்டால், முதலில் ஜெர்மனி தன்னை விழுங்கிவிடு மென்பது ஸ்வீடனுக்குத் தெரியாமலில்லை. ஏனெனில் ருஷியாவிலிருந்து ஸ்வீடன் வழியாக அட்லான்டிக் சமுத்திரத்திற்கு வரும் பாதை மிகவும் முக்கியமானது. எனவே, ஜெர்மனி அதை விட்டு வைத்திருக்காது.

பின்லாந்து :—ருஷியாவை நேரடியாகத் தாக்குவதற்கு, ஜெர்மனிக்கு பின்லாந்தைப் போல் சௌகரியமான இடம் கிடையாது. 1918-ல் ஜெர்மனி தலையிட்டு இந்நாட்டைப் பொது உடைமைக்காரர்களிடமிருந்து காப்பாற்றியிருக்கிறது. அதிலிருந்து இந்நாட்டில் ஜெர்மனிக்கு ஆதரவு உண்டு. இங்கும் நாஜிக் கக்ஷி ஒன்றிருக்கிறது. யுத்தம் ஏற்பட்டால், தன் ஜன்ம விரோதியான ருஷியாவை அடிப்பதற்கு இவ்வளவு சௌகரியமான வசதிகள் அளிக்கும்! பின்லாந்தும் ஹிட்லரின் திருஷ்டிக்குத் தப்பாது.

16. பிரான்ஸும் ஜெர்மனியும்

மற்றெல்லா நாடுகளையும் விட, ஜெர்மன் எல்லைப்புறத்துக்கு மேற்கே இருக்கும் நாடுகள்தான் முக்கியமானவை. பிரான்ஸுக்கும், ஜெர்மனிக்கு மிடையே உள்ள பெல்ஜியமும், ஹாலந்தும் ஹிட்லரின் நாடு பிடிக்கும் இயக்கத்துக்கு ரொம்ப உபயோகமானவை. வாட்டர்லூ போன்ற சரித்திரப் பிரசித்தமான யுத்தங்கள் பெல்ஜியத்தில்தான் நடந்தன. பெல்ஜியம் கைத்தொழிலிலும், ஹாலந்து விவசாயத்துறையிலும் நல்ல அபிவிருத்தியடைந்த நாடுகள். பெல்ஜியத்தில் நிலக்கரி, இரும்பு, துத்தநாகம், காரீயம் முதலியவை நிறையக் கிடைக்கின்றன. பெல்ஜியத்திலும் ஜெர்மனிக்கு அபிலாஷைகள் இருக்கின்றன. யுத்தத்திற்குப் பிறகு யூப்பன்-மால்மெடி என்ற பிரதேசம் பெல்ஜியத்துக்குக் கொடுக்கப் பட்டுவிட்டது. இந்தப் பிரதேசம் பெல்ஜியத்துக்கு மாற்றப் பட்ட விதமே விசித்திரமானது. இந்தப் பிரதேசத்திலுள்ள ஜனங்களின் சம்மதத்தைக் கேட்காமலே, இது கைமாற்றப்பட்டது. இருந்தாலும் மனச்சாட்சியைத் திருப்தி செய்து கொள்வதற்காக ஒரு காரியம் செய்தார்கள். யூப்பன்-மால்மெடி பெல்ஜியப் பிரதேசமான பிறகு ஒரு வோட் எடுத்தார்கள். அதாவது, இந்த மாறுதலை ஆட்சேபிப்பவர்கள் வோட் செய்யலாமென்று சொன்னார்கள். காரியம் நடந்து முடிந்த பிறகு வோட் எடுத்த இந்தச் செப்படி வித்தையை ஜெர்மனி எப்போதுமே ஒப்புக்கொள்ளவில்லை. இப்போது ஹிட்லர் அதை விட்டுவானா? இதைத் திருப்பிக் கொடுத்து விட பெல்ஜியத்துக்குச் சம்மதம்தான். ஆனால், இவ்வளவு சுலபமாக இதைக் கொடுத்துவிட்டால், பிறகு இதர ஜெர்மன் கோரிக்கைகளில் பெரிய தகராறு ஏற்பட்டுவிடப் போகிறதே யென்று பயந்து ஜனநாயக நாடுகள் இதற்கு

இங்கிலாந்தைத் தட்டியெழுப்பிய அலாரம் இதுதான்!



ஸ்விட்ஸர்லந்துச் சித்திரக்காரர் ஒருவர் ஹிட்லரை இப்படிச் சித்திரித்திருக்கிறார். கவனித்துப் பார்த்தால், ஹிட்லரின் தலை வகிடு, சார்லி சாப்ளின் மீசையெல்லாம் தென்படும்.

இடங்கொடுக்கவில்லை. கையை நீட்டிச் சிரமமில்லாமல் பிரான்ஸை அடிப்பதற்கு பெல்ஜியம் எவ்வளவு சௌகரியமாயிருக்கும்? என்னதான் ஒப்பந்தங்களும், ராஜிகளும் இருந்தபோதிலும், ஹிட்லரின் ஆட்சிமுறை இருக்கும் வரையில், அவன் பிரான்ஸைச் சும்மா விட்டுவிடுவான் என்று எதிர்பார்க்க முடியாது. பெல்ஜியத்தின் விஷயத்தில் ஹிட்லருக்குப் பல சௌகரியங்கள் இருக்கின்றன. அங்குள்ள ஜனநாயக முறை அவ்வளவு பலமானதென்று சொல்ல முடியாது. அத்துடன் அங்கு பிளெமிங் ஜாதியினரின் பிரச்னை எப்போதுமே தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கும் விஷயம். அங்கு நாஜிகளுக்கு ஆதரவான ஒரு கட்சியும் இருக்கிறது. பிளெமிங் ஜாதியினர் தாழ்ந்தவர்களென்று கருதப்பட்டுக் கேவலமாக நடத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். அதனல் அவர்களிடையே பெல்ஜியத்துக்கு விரோதமான உணர்ச்சி பலமாக வளர்ந்திருக்கிறது. அவர்களின் உதவியைக் கொண்டு, பெல்ஜியம் பூராவையுமே ஹிட்லர் தன் ஆதிக்கத்தில் கொண்டுவந்துவிட முடியும். ஹாலண்டில் ஜெர்மன் சூழ்ச்சிகளுக்கு எதுவும் இடமில்லை. இருந்தாலும், பிரான்ஸைச் சுலபமாக அடிப்பதற்காக, இவ்விரண்டு நாடுகளையும் தன் செல்வாக்கின் கீழ்க் கொண்டுவர நிச்சயமாக ஹிட்லர் முயற்சிப்பான். எந்த வழியில் முயற்சிக்கப்படுமென்பதை இப்போது சொல்வதற்கில்லை. ஹிட்லரின் விஸ்தரிப்பெல்லாம் இப்போது கிழக்குப் பாகத்திலேயே இருக்கின்றன. கிழக்கே குழப்பத்தையுண்டுபண்ணி விட்டுவிட்டு, எதிர்பாராத சமயத்தில் திடீரென்று மேற்கே பாய்வதாயிருக்கலாம். அல்லது இனி யுத்தத்தைத் தவிர்க்க முடியாதென்ற நிலைமை ஏற்பட்டவுடன், திடீரென்று முன்னெச்சரிக்கையில்லாமல் இந்நாடுகளின் மீது பாய்வதாயிருக்கலாம். இது எவ்வளவு துரி

தமாய் நடக்குமென்பது, இதர துறைகளில் ஹிட்லருக்குக் கிடைக்கும் வெற்றி தோல்வியைப் பொறுத்திருக்கிறது. ஜெர்மனியின் உள்நாட்டுப் பொருளாதார நிலைமையில் சங்கடமேற்பட்டால், இந்த வேட்டை இன்னும் துரிதப்படும்.

ஸ்விட்ஜர்லாந்து விஷயத்திலும் ஜெர்மனி கடுமையாக இருக்கிறது. ஸ்விட்ஜர்லாந்து நடுநிலைமை வகிக்கும் நாடு. ஆகவே, அங்கு ஜெர்மனிக்கு விரோதமான பத்திரிகைப் பிரசாரம் எதுவும் நடக்கக்கூடாதென்று ஹிட்லர் கண்டிப்பாய் இருக்கிறான். இங்கும் நாஜிக் கட்சி இருக்கிறது. ஜெர்மனியிலிருந்து பண உதவி கிடைக்கிறது. ஸ்விட்ஜர்லாந்து வழியாக ஒரு ரயில்பாதை போகிறது. யுத்தம் வந்தால் ஜெர்மனி-இத்தாலி கூட்டுறவுக்கு இந்த ரயில் பாதை மிகவும் அத்தியாவசியம். மேலும், இந்நாட்டிலும் ஜெர்மன் பாஷை பேசுபவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும் பிரதேசங்களைச் சேர்த்துக்கொண்டுவிடவேண்டுமென்றும் ஜெர்மனி விரும்புகிறது.

பிரான்ஸைத் தாக்குவதற்கு ஜெர்மனி இந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்கிறதென்றால், பிரான்ஸ் விஷயத்தில் ஜெர்மனியின் கொள்கை என்ன? இதற்குப் பதில் ஹிட்லரின் சுயசரிதையில் இருக்கிறது:

“பிரான்ஸ் நம் நாட்டுக்கு ஜன்ம விரோதி. முதலில் அதைத் தீர்த்துக்கொண்ட பிறகுதான் இதர வெற்றிகள்!” என்று ஹிட்லர் எழுதியிருக்கிறான். தன்னுடைய சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொள்வதில்தான் பிரிட்டனுக்கு அக்கரை. வெளிவேஷத்துக்காகச் சில சமயங்களில் பிரிட்டன் சில கண்டனங்களில் கலந்துகொண்டாலும், பிரிட்டிஷ் நலன்களை நேரடியாகத் தாக்காதவரையில் அவர்

களைப்பற்றி அதிகமாகப் பயபடவேண்டியதில்லையென்று ஹிட்லர் கருதுகிறான். பிரிட்டனுடைய உதவி யில்லாமல் பிரான்ஸ் தனியாக நின்று எதுவும் செய்துவிட முடியாது. ஆகவே, பிரான்ஸ் எப்போதுமே பிரிட்டனின் கொள்கைக்குத் 'ததாஸ்து' சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதுதான். இதற்குப் பிரத்தியட்ச அனுபவமும் இருக்கிறது. செக்கோஸ்லோவேகியாவுக்கும், பிரான்ஸுக்குமிடையே ஓர் ஒப்பந்தம் இருந்துங்கூட, செக் நாட்டை விழுங்குவதற்குப் பிரிட்டன் ஜெர்மனிக்கு உதவி செய்தபோது, ஒப்பந்தத்தைப் புறக்கணித்து, பிரான்ஸ் பிரிட்டிஷ் கொள்கைக்கு வால்பிடிக்க வேண்டியிருந்தது. பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்குமிடையே பரிபூர்ண ஒற்றுமை இருக்கிறது என்று பார்லிமெண்டில் அடிக்கடி பிரிட்டிஷ் மந்திரிகள் சொல்லுவதைப் பார்க்கிறோம். இதன் அர்த்தமென்ன? ஜெர்மனி சம்பந்தமான கொள்கையை, தன் சொந்த நலன்களுக்கு அனுகூலமான முறையில் பிரிட்டன் நிர்ணயிக்கும். அதுதான் சரி என்று பிரான்ஸ் சொல்ல வேண்டும். வேறு வழி யில்லை. பிரிட்டிஷ், பிரெஞ்சு ஒற்றுமையின் அர்த்தம் இதுதான். இது ஹிட்லருக்குத் தெரியும். சாம்ராஜ்யப் பித்துப் பிடித்த பிரிட்டனை எப்படியும் தன் பக்கம் திருப்பிக்கொண்டுவிட முடியுமென்று ஹிட்லர் நம்புகிறான். இப்படி நம்புவதில் ஒன்றும் தவறு இருப்பதாகவும் தெரியவில்லை. சமீபகால நெருக்கடிகளின் போது பிரிட்டன் நடந்துகொண்ட விதம் இந்த நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்வதா யிருக்கிறது. இத்தாலி ஏற்கெனவே ஜெர்மனியின் சகாவாயிருக்கிறது. பிரிட்டனையும் வசியப்படுத்திக் கொண்டுவிட்டால், பிறகு ஜெர்மனி பிரான்ஸை மண்டையில் ஓங்கி அடிப்பதை யார் தடுக்க முடியும்?

உலக ஆதிக்கம் பெறுவதற்காக யூதர்கள் பிரான்ஸை யும், ருஷியாவையும் உபயோகித்துக் கொள்ளுகிருர்கள் என்பது ஹிட்லர் கூற்று. பிரான்ஸ் யூதர்களின் தலைமை ஸ்த லமாயிருக்கிறது என்ற ஒரு காரணம் போதாதோ ஹிட்ல ருக்கு! முதலில் ஜெர்மனியிலுள்ள இந்தச் 'சதிகார' யூதர் களைத் தொலைத்துவிட்டு, பிறகு அவர்களுடைய சர்வதேசச் சதியை முறிக்கவேண்டு மென்று ஹிட்லர் 'பிளான்' போடு கிருன். பிரான்ஸை அடியோடு அழித்தால்தான் அவனுக் குத் தூக்கம் வரும். ஏனெனில் யூதர்கள், நீக்ரோக்களின் சேர்க்கையினுல், வெள்ளையரின் ஜாதீய பரிசுத்தத்தையே பிரான்ஸ் கெடுத்துவிட்டதாம். வெள்ளையரின் ஜாதீய பரிசுத்தத்தைக் காப்பாற்றுவதற்காகவாவது பிரான்ஸைத் தொலைக்கவேண்டுமாம். அந்தப் புனிதமான கைங்கரியத்துக் குப் பிரிட்டனும் தன்னுடன் சேருமென்று ஹிட்லர் நம்புகி ருன். "பிரெஞ்சு ஆக்ரமிப்பிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்ற நிலைமை ஜெர்மனிக்கு இருக்கும் வரையில், இந்தப் பிரச்னை ஒருநாளும் தீரப்போவதில்லை. நம்முடைய ஜன்ம விரோதியான பிரான்ஸ், கொஞ்சங்கூட ஈவிரக்கமில்லாமல் நம்மை நசுக்குகிறது. நமது பலத்தை யெல்லாம் கொள்ளைகொண்டு போய்விடுகிறது. ஆகை யால், ஐரோப்பாவை ஒன்றுபடுத்தவேண்டும் என்று பிரான்ஸ் செய்யும் முயற்சிகளை அழிக்க நாம் எந்தத் தியா கத்தையும் செய்யத் தயாரா யிருக்கவேண்டும். 'பிரான் ஸின் பிரதேச ஆசையைச் சகிக்க முடியவில்லையே!' என்று நினைக்கும் ஒவ்வொரு நாடும் நமது நண்பன்!" என்று ஹிட்லர் எழுதியிருக்கிருன். யுத்தத்திற்குப் பிறகு, சமாதா னப் பேச்சு வார்த்தைகளின் போது, ஜெர்மனி மீது பிரான்ஸ் எவ்வளவு விரோத பாவம் காட்டிற்று என்பதை ஹிட்லர் மறக்கவில்லை. அபிஸீனிய யுத்தம் நடந்துகொண்டிருந்த

காலத்தில் பிரெஞ்சு-இத்தாலி உறவு கொஞ்சம் பாதிக்கப் பட்டிருந்தது. எண்ணெய் நிர்ப்பந்தத்தைப் பிரயோகிக்க வேண்டுமென்று அப்போது பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரியான ஈடன் வற்புறுத்தினர். அப்படியானல் பிரான்ஸுக்கு ராணுவ உதவி செய்வதாக ஒப்பந்தம் செய்யுங்க ளென்று பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரி பிளாண்டின் கேட்டார். இதனால் இத்தாலி கோபமடைந்தது. இந்தச் சமயம் பார்த்து, தன் ஜெனரல்களின் எச்சரிக்கையையும் மீறி, ஹிட்லர் ரைன்லாந்துக்குள் துருப்புகளை அனுப்பினன். பிரான்ஸுக்கு ஹிட்லர் கொடுத்த முதல் அடி இது. பிரான்ஸ் அப்போது கொதித்துக் குமுறிற்று. பிரெஞ்சுத் துருப்புகளை அனுப்பவேண்டுமென்று சிலர் வற்புறுத்தினர்கள். "யாராவது எதிரி நம் மீது படையெடுத்து வந்தால் பாதுகாத்துக் கொள்வதற்குத்தான் இப்போது நம்மிடம் பல மிருக்கிறதே யொழிய, வரிந்து கட்டிக்கொண்டு இன்னொரு ஊருக்குப் போவதற்கு இங்கு வகையில்லை," என்று பிரெஞ்சு ஜெனரல்கள் சொல்லிவிட்டார்கள். முதல் 'ரவுண்டில்' ஹிட்லர் ஜெயித்தான். பிறகு....?

17. காலனிகள்

காலனிகள் பிரச்னையின் மீது யுத்தம் ஏற்படாது என்று ஹிட்லரே சொல்லியிருக்கிறான். ஆனால் ஹிட்லர் சொல்லிவிட்டான் என்பதற்காக அதை வேத வாக்காக எடுத்துக்கொண்டுவிட முடியாது. ராஜீயவாதிகள் ஒரு முறை சொன்னதை மீற மாட்டார்கள் என்று நம்புவது எப்போதும் ஏமாற்றத்தைத்தான் கொடுக்கும். சமயத்திற்குத் தகுந்தாற் போல் வாக்குறுதிகள் கொடுத்து எதிரியைத் தூங்கவைப்பதுதான் ராஜதந்திரம். அந்த வித்தையில் ஹிட்லர் மகா நிபுணன். தன்னுடைய ஆக்ரமிப்புக்களையெல்லாம் பிரிட்டன் அனுமதிப்பதற்குக் காரணம், காலனி கோரிக்கையின் பயத்தினால்தா னென்பதை ஹிட்லர் அறிவான். ஆகையால், முதலில் தன்னுடைய இதர ஆசைகளைப் பூர்த்திசெய்துகொண்டு, பிறகு மூலஸ்தானத்திற்குப் போகலா மென்பதுதான் அவனுடைய நோக்கமாயிருக்கவேண்டும். யுத்தத்திற்குப் பிறகு, ஜெயித்த நாடுகள் பங்கு போட்டுக்கொண்டு அனுபவித்துவரும் காலனிகளும், மான்டேட் பிரதேசங்களும் திருட்டுச் சொத்து என்று ஜெர்மனி சொல்லுகிறது. ஆனால், போன தலைமுறையில் நடந்த சம்பவங்களைப்பற்றி இப்போது பேசுவது பிரிட்டனுக்குப் பிடிக்காமலிருக்கலாம். பலாத்கார முறைகளையும், ஆயுத வெறியையும் இப்போது இவ்வளவு ஜனநாயக மனப்பான்மையுடன் கண்டிக்கும் பிரிட்டனுக்கு, 20 வருஷங்களுக்கு முன் இதே பலாத்கார முறைகளின் பலனாகத்தான் இந்தக் காலனிகள் பிடுங்கப் பட்டுப் பங்கு போடப்பட்டன வென்பது மறந்து போயிருக்கலாம். இந்தக் காலனிகளை நம்பி பிரிட்டிஷார் எவ்வளவோ மூலதனம் போட்டுவிட்டார்கள். தங்கள் சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்-

திக் கொள்வதற்கு இந்தக் காலனிகளைப் பெரிதும் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். அட்மிரல் ஸர் ரோஜர் கீய்ஸ் என்பவர் சென்ற வருஷம் பார்லிமெண்டில் செய்த ஒரு பிரசங்கம் இதை ருசுப்படுத்துகிறது. அவர் குறிப்பிட்டதாவது:—

"எதற்காகப் பிரிட்டன் காலனிகளை விட்டுக் கொடுக்க வேண்டும்! இவைகள் நாஜி ஆட்சியின் கீழே போய்விட்டால், நமது சாம்ராஜ்யத்தின் ஜீவாதாரமான போக்குவரத்துப் பாதைகளைக் குலைத்துவிடுமே. இந்தக் காலனிகள் ஜெர்மனிக்குத் தேவையுமில்லை. ஜெர்மனியின் மூலப்பொருள் தேவைகளுக்கோ, அல்லது அதிகப்படியான ஜனத்தொகைக்கோ இவைகள் அவசியமா? பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு உலை வைப்பதைத் தவிர, வேறொன்றிற்காகவும், இந்தக் காலனிகள் ஜெர்மனிக்குத் தேவையில்லை."

இதுதான் உண்மை. ஜெர்மனியின் காலனிக் கோரிக்கை நியாயமா, இல்லையாவென்பது பிரச்னையல்ல. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு ஆபத்து வந்துவிடுமே என்பதுதான் முக்கியம். 'பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனமல்ல; அது தானாகவே வளர்ந்தது' என்று பிரிட்டிஷார் பெருமை கொள்ளுகிறார்கள். தானாக வளர்ந்த ஒரு ஸ்தாபனத்தின் அங்கங்கள் வெட்டப்படுவதைப் பார்க்க அவர்கள் மனம் சகிக்குமா? இந்தியாவில் வர்த்தகத்துக்காக வந்த பிரிட்டிஷார் இந்நாட்டைப் பிடித்துக் கொண்டார்களா? இல்லையே! வழியில் இருந்த பிரெஞ்சுக்காரர்களையும், மற்றவர்களையும் விலகி நிற்கச் சொன்னார்கள். ராபர்ட் கிளைவ் யுத்தம் செய்தா இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஸ்தாபித்தான்? இல்லை. ஒற்றுமை

இல்லாமல், நாகரிகம் இல்லாமல், கலாசாரம் இல்லாமல் சிதறிக்கிடந்த இந்நாட்டு மக்களுக்கு, அனுதாபத்தின் மீது, நல்ல சர்க்கார் முறையை அளித்தார்கள்! இவ்வளவு நல்லவர்களான பிரிட்டிஷாரிடமிருந்து காலனிகளைத் திருப்பிக் கேட்கும் ஹிட்லர் எவ்வளவு பெரிய அயோக்கியனாயிருக்க வேண்டும்? இதுதான் பிரிட்டிஷ் மனப்பான்மை.

1939 ஜனவரி 30 உ ஹிட்லர் செய்த பிரசங்கத்தில், காலனிகளைத் தவிர, பிரிட்டன், பிரான்ஸ் விஷயத்தில் ஜெர்மனிக்குப் பிரதேசக் கோரிக்கை எதுவும் கிடையாதென்றும், ஆனால், **இதற்காக மட்டும்** யுத்தம் ஏற்படாதென்றும் சொன்னான்.

இனி ஜெர்மனியின் காலனிக் கோரிக்கைகள் என்னென்னவென்று பார்ப்போம். ஆபிரிகாவில் டங்கனீகா இருக்கிறது. சென்ற இருபது வருஷங்களாக இது பிரிட்டிஷ் நிர்வாகத்தின் கீழ் இருக்கிறது. இங்கு பருத்தி, காபி, தங்கம், நிலக்கரி முதலியவைகள் கிடைக்கின்றன. இதில் ஆயிரக்கணக்கான ஜெர்மனியர்கள் இருக்கிறார்கள். ஆனால், பிரிட்டிஷார் இந்தப் பிரதேசத்தில் நிறையப் பணம் போட்டிருக்கிறார்களென்பதை மறந்துவிடக் கூடாது. தென்னாபிரிகாவில் ஏராளமான தங்கம் கிடைக்கிறது. ஒரு யுத்தம் வந்தால் ரொக்கம் கொடுத்து ஆயுதம் வாங்குவதற்கு ஜெர்மனிக்குப் பணம் வேண்டும். ஆகையால், காலனிக் கோரிக்கை மூலம், ஜெர்மனி தென்னாபிரிகா பூராவையுமே தன் ஆதிக்கத்தில் கொண்டுவர முயற்சிக்கக்கூடும். அங்குள்ள சுதேசிகள் சம்பந்தப்பட்டவரையில், அன்னிய நாட்டைச் சேர்ந்த வெள்ளையர்களில், எந்த வெள்ளையராய் இருந்தால்தானென்ன? இப்போதுள்ள பிரிட்டிஷ் வெள்ளையர்களும் நிற வித்தியாசம் காட்டித்தான் அவர்களை நடத்து

கிருர்கள். ஐரோப்பாவுக்கும், கிழக்கு நாடுகளுக்கு மிடையேயுள்ள மத்தியதரக் கடல் பிரதேசத்திலும் நன்னம்பிக்கை முனையிலும் ஆதிக்கம் வகிக்கவேண்டுமென்பதே ஜெர்மனியின் ஆபிரிகத் திருஷ்டிக்கு முக்கிய காரணம். தென்மேற்கு ஆபிரிகாவில் ஜெர்மன் காலனி இருக்கிறது. இதுதான் ஜெர்மன் பிரசாரத்துக்குக் கேந்திர ஸ்தானம். அங்குள்ளவர்கள் தாங்கள் ஜெர்மனியுடன் சேர விரும்புவதாக வற்புறுத்துவதோடு மட்டுமில்லாமல், பிரிட்டிஷாருக்கு விரோதமான எல்லாப் பிரசாரங்களுக்கும் இங்கு தூபம் போட்டு வருகிருர்கள். டங்கனீகா ஜெர்மனிக்குக் கிடைத்து விட்டால் அங்கிருந்துகொண்டு, வெடிகுண்டு விமானத்தின் மூலம் தென்னுபிரிகாவை ஹதம் செய்வதற்கு ஜெர்மனிக்கு நல்ல வசதி கிடைத்தது போலாகும்.

ஹிட்லரின் நாடு பிடிக்கும் இயக்கம் அநேகமாக ஒரே மாதிரியாகவே இருக்கிறது. முதலில் கத்தி முனையைக் காட்டுகிருன். வெளியிலிருந்து ஏதாவது தடை வரும் போலிருந்தால் தற்காலிகமாகப் பின்வாங்கிக் கொள்ளுகிருன். பிறகு திடீரென்று அந்த நாடுகளில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டுவிடுகிறது. "ஜெர்மன் மைனுரிடி கஷ்டப் படுத்தப்படுவதைக் காண நான் சகியேன்!" என்று கர்ஜிக்கிருன். அதற்குள் அந்த நாட்டின் எல்லைப் புறத்திற்கருகில் ஜெர்மன் துருப்புகள் குவிந்து விடுகின்றன. பிறகு அந்த நாட்டினரே இவர்களை அழைப்பது போல் ஒரு நிலைமையைச் சிருஷ்டித்து விடுகிருன். ஆனல், காலனிகள் விஷயத்தில் ஹிட்லர் இப்படிச் செய்ய முடியமா என்பது சந்தேகமே. இருந்தாலும் அங்குள்ள ஜெர்மனியர்களைக் கிளப்பிவிட்டு, நிலைமையை மிகவும் நெருக்கடியானதாக்கி விடக்கூடும். பெர்லினி லிருந்துகொண்டே ராஜதந்திரப்

பேச்சு வார்த்தைகள் மூலம் ஹிட்லர் தன் விருப்பத்தைச் சாதித்துக்கொண்டுவிடக்கூடும்.

காலனிக் கோரிக்கை என்றைக்காவது தன் தலையில் வந்து வெடிக்கத்தான் போகிறதென்பது பிரிட்டனுக்கு நன்றாகத் தெரியும். அதற்குள் பிரிட்டன் தன் நிலைமையைப் பலப்படுத்திக்கொள்வதற்காக, ஐரோப்பிய சம்பவங்களில் ஹிட்லரைத் திருப்தி செய்யும் கொள்கையை அனுஷ்டித்து வருகிறது. ஹிட்லரின் ஐரோப்பிய ஆக்ரமிப்புக்களை ஜாடையாய் விட்டுவைத்திருந்தால், அவன் அவற்றில் ஈடுபட்டிருக்கும் சமயத்தில், ஆயுதங்களைப் பெருக்கிக்கொண்டு, இதர நாடுகளுடன் புது ஒப்பந்தம் செய்துகொண்டு தயாராயிருக்கலாமென்று பிரிட்டன் கருதுகிறது. அந்தக் கொள்கைக் கிணங்கக் காரியங்களும் செய்யப்பட்டு வருகின்றன. பிரிட்டன் என்னதான் செய்தாலும், கர்ம பலனிலிருந்து அது தப்பமுடியுமா வென்பதே கேள்வி. தன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஜெர்மனி தன் எதிரிகளிடையே பிளவை யுண்டாக்கி விட்டு விடுகிறது. இது மிகவும் அபாயகரமான முறை. பிரிட்டன் இந்தியா விஷயத்தில் கையாளும் பிரித்தாளும் கொள்கையை, ஜெர்மனியும் சாமர்த்தியமாகப் பிரயோகிக்க ஆரம்பித்தால் நிலைமை என்னவாகும்? உடனே ஆபத்து இல்லையென்றாலும், சகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுமென்பதில் சந்தேகமில்லை.

"ஜெர்மனி கற்பனை செய்யும் பாஸிஸ்ட் உலகம், நமது மேற்கத்திய நாகரிகத்தையே அறை கூவி அழைப்பதாகும். இது வெற்றி பெற்றால், அதற்குக் காரணம் ராணுவ பலமா யிராது. ஜெர்மனியை எதிர்ப்பவர்களின் ஒழுக்கம், மதம், அரசியல் உணர்ச்சிகளின் பலஹீனம்

தான் அதற்குக் காரணமா யிருக்கவேண்டும். அம்மாதிரி பலஹீனம் நம்மிடம் இருக்கிற தென்பதே ஜெர்மனியின் நம்பிக்கை. ஓரளவுக்கு இது மறுக்க முடியாத உண்மையு மாகும்" என்று டாக்டர் போர்க்கெஹ என்பவர் எழுதி யுள்ள 'புதிய ஜெர்மன் சாம்ராஜ்யம்' என்ற புஸ்தகத்தில் கூறுகிருர். இது உண்மைதான்; ஜெர்மன் நம்பிக்கையும் ஓரளவுக்கு உண்மைதான். ஏனெனில் ஒழுக்கம் சம்பந்தப் பட்ட வரையில் இந்தியாவின் விருப்பத்திற்கு மாருக பிரிட்டன் இதை விடாமல் வைத்துக்கொண்டிருக்க உரிமை ஏது? பாலஸ்தீனத்தில் அரபுகளின் விருப்பத்திற்கு மாருக யூதர்களேச் சுமத்துவதற்கு அதற்கு உரிமை ஏது? பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சரித்திரத்தில் இதைப் போன்ற உதாரணங்கள் ஏராளமாக இருக்கின்றன. தம் வரையில் ஒழக்கம் இல்லாதவர்களுக்கு, ஒழுக்கத்தைப் பற்றி மற்ற வர்களுக்குப் போதிக்க எப்படித் துணிச்சல் ஏற்படும்?

காலனிகளேத் திரும்பப் பெறும் விஷயத்தில் ஜெர்மனி மிகவும் தீவிரமான பிரசாரம் செய்துகொண்டிருக்கிறது. அடிக்கடி ஜெர்மன் மக்கள் இதைப்பற்றி ஞாபகப்படுத்தப் படுகிருர்கள். 1935-ல் ஸ்தாபிக்கப்பட்ட ரீஷ் காலனிகள் சங்கத்தார் இதற்காகச் சண்டமாருதம் போன்ற பிர சாரம் செய்து வருகின்றனர். ஆபிரிகாவிலுள்ள காலனி கள் தனக்குத் திரும்பக் கிடைத்துவிட்டது போலவே ஜெர் மனி சில விஷயங்களில் நடந்துகொள்ளுகிறது. யூதர்கள் தென்மேற்கு ஆபிரிகாவுக்கோ, டங்கனீகாவுக்கோ போக வேண்டுமென்று கேட்டால், அவர்களுக்கு பாஸ்போர்ட் கொடுக்கப்படுவதில்லே. நிச்சயமாகப் பிரிட்டன் பணிந்து விடுமென்று ஜெர்மன் மக்கள் நம்பும்படி செய்யப் படு கிருர்கள்.

ரீஷ் காலனிகள் சங்கத்தால் வெளியிடப்பட்டிருக்கும் 1939-ம் வருஷத்திய வருஷாந்தரப் புஸ்தகத்தில், வெளி நாட்டு இலாகாவைச் சேர்ந்த ஹெர் கார்லோவா என்பவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

"இதர வல்லரசுகளுடன் நமது தலைவர் (ஹிட்லர்) சமாதானமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்துவார். அதில் பலன் கிடைக்காவிட்டால், 'காலனிகளுக்குள் பிரவேசிப் பதை ஆரம்பியுங்கள்!' என்று அவர் ஜெர்மன் வாலிபர் களுக்குக் கட்டளையிடும் நாள் ஒன்று வரும்."

ஜெர்மனி காலனிகளைக் கேட்கும்போது, இத்தாலி பிரான்ஸிடமிருந்து டூனிஸைக் கேட்கிறது. இருவரில் யாராவது முதலில் பணிந்துவிடக் கூடாதா வென்ற நம் பிக்கைதான் இதற்குக் காரணம். எதிரிகளைச் சீர்குலைக் கும் பிளானில் இது முக்கியமானது. பிரான்ஸையும், பிரிட்டனையும் எப்படியாவது பிரித்துவிட்டால் அது பெரிய அனுகூலமல்லவா?

பிரிட்டனுக்கு மூன்று வழிகள் இருக்கின்றன:

(1) காலனிகளை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்க முடியாது என்று கண்டிப்பாகச் சொல்லலாம். இப்படிச் சொல்லுவதானல், யுத்தம் வரை யில் போவதற்கு பிரிட்டன் தயாரா யிருக்கவேண்டும்.

(2) ஜெர்மன் கோரிக்கைக்கு இணங்கி காலனிகளைத் திருப்பிக்கொடுத்து விடலாம். இது சேம்பர்லேனின் திருப்திசெய்யும் கொள்கைக்கு ஒத்ததாய் இருக்குமென்ப தோடு, யுத்தத்தை தற்காலிகமாகவாவது தவிர்த்ததாக இருக்கும்.

(3) 'உண்டு, இல்லை' என்று சொல்லாமல் பேச்சு வார்த்தைகள் என்று சொல்லிக்கொண்டே காலத்தைக் கடத்தலாம். ஆனால், அதுவும் எங்காவது முடிந்துதா னாகவேண்டும்.

'யுத்தத்தைச் சாசுவதமாக ஒழிப்பதற்காக' 1914-ல் மகாயுத்தம் நடந்தது. அதன் பலனாக ஏதோ ஒரு சமாதானம் வந்ததல்லவா? அந்தச் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காகவும் மற்றொரு யுத்தம் நடக்குமா?

---

18. சர்வாதிகாரமா, ஜனநாயகமா?

ஹிட்லரின் பிரமிக்கத்தக்க எழுச்சி இயற்கையின் விபரீதங்களில் ஒன்று போல் காணப்படுகின்றது. ஆனால், அவன் எழுச்சியால் ஜெர்மனி மீண்டும் ஒரு வல்லரசாக விளங்குகிறது. எனவே, ஹிட்லரைப் பற்றியும், புதிய ஜெர்மனியைப் பற்றியும், சரித்திரப் போக்கை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஆராய்ந்து பார்த்தால்தான் உண்மை புலனாகும். சாதாரணமாக ஒரு பந்தை எடுத்துச் சுவரின் மீது எறிந்தால் அது அப்படியே ஒட்டிக்கொண்டு விடாது. அது எகிறித்தான் வரும். பந்தை எறிவது செய்கை; எகிறி வருவது விளைவு. ஹிட்லரின் வாழ்க்கையை இப்படித்தான் வியாக்கியானம் செய்யவேண்டும். யுத்தத்தின் பலனாக உருத் தெரியாமல் குலைக்கப்பட்ட ஜெர்மனி என்றும் அப்படியே இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. பிரஷ்யர்களின் முரட்டுத்தனம் சரித்திரத்தில் ரொம்பப் பிரசித்தமானது. ஜெர்மனியில் ஹிட்லர் தோன்றினானென்றால், தோன்றாமல் எப்படி யிருக்க முடியும்? எக்கழுற்று வாடிக் கிடந்த ஜெர்மனியைத் தேசீயத்தின் மூலம்தான் தட்டி எழுப்ப முடியுமென்று ஹிட்லர் தெரிந்து கொண்டான். துவேஷத்தையும், வெறுப்பையும் தூண்டிவிடும் ஓர் இயக்கம் வெற்றிபெறும். அது மனித சுபாவத்தைப் பொறுத்தது. சிறுமை உணர்ச்சி ஒருவனுக்கு ஏற்பட்டுவிட்டால், எதிரி சொல்லும் நியாயமான வாதத்துக்குக்கூடக் கோணல் கட்சி சொல்வான். "நேச நாடுகள் சேர்ந்து நம்மைப் பெருத்த அவமானத்திற்குள்ளாக்கிவிட்டன. அதிலிருந்து நாம் மீளவேண்டுமானால், முதலில் நம் நாட்டிலிருந்து யூதர்களையும், பொதுவுடைமைப் பேயையும் விரட்ட வேண்டும்" என்று ஹிட்

ஏகாந்த வாசம்

சர்வாதிகாரியாவதற்கு முன்னால் ஹிட்லர் பெர்ஷ்டஸ்ச்காட னில் ஏகாந்தமாய் இருக்கும்பொழுது எடுத்த படம்.

லர் ஆரம்பித்தான். தீவிரமான ஆவேஷ உணர்ச்சி இதில் இருந்ததால், இது சட்டென்று பிடித்துக்கொண்டது.

“கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல் என்பதுதான் நம் கொள்கை. நம் எதிரிகள் மிருகத்தனமாக நடந்து கொண்டால்,நாமும் அப்படிச் செய்யத் தயங்கக் கூடாது. எதிரிகள் விஷப் புகையை உபயோகித்தால், நாமும் அதை உபயோகிக்கத் தயாரா யிருக்கவேண்டும்” என்று ஹிட்லர் தன் சுயசரிதையில் எழுதியிருக்கிறான். பலமான ஸ்தாபனமும், திறமையான தலைவனும் இல்லாமல் ஜெர்மனியின் விருப்பம் எப்படி நிறைவேற முடியும்? “தலைவன் உத்தரவு, தலைவன் ஆணை, தலைவன் விரும்புகிறான்!” என்பது தான் நாஜிக் கக்ஷியின் ஆரம்ப வேதாந்தம்.ஆரம்பத்திலேயே நாஜிக் கக்ஷி சர்வாதிகாரத் தோரணையில்தான் இருந்தது. சரியாகவோ, தப்பாகவோ ஓர் எதிரியை விரட்டவேண்டும் என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்படும் ஒரு கட்சி வேறெப்படித்தான் இருக்க முடியும்? ஹிட்லரின் முறைகளை நாம் ஒப்புக்கொள்ளலாம், அல்லது ஒப்புக்கொள்ளாம லிருக்கலாம். ஆனால், சமாதானத்தின் பேரால் அடிக்கப்பட்ட கொள்ளையால் சரீர மெங்கும் புண்பட்டிருந்த ஒரு நாட்டை, தூக்கி நிறுத்த வேண்டு மென்று விரும்பினால், அதற்கு ஒரு தலைவனின் சொற்படி எல்லோரும் நடக்கவேண்டு மென்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஜனநாயகம் என்பது விரும்பத் தக்க ஒரு நிர்வாக முறைதான். ஆனால், அடிமை நாடுகளுக்கும், அடிமைகளைப் போல் நசுக்கப்பட்ட நாடுகளுக்கும் ஜனநாயகம் விடுதலை யளிக்க முடியுமா என்பது வாதத்திற் கிடமான பிரச்னை. இந்தியாவை எடுத்துக் கொள்வோம். இங்கு காங்கிரஸ் ஒன்றுதான், ஜனநாயக முறை

யில், ஜீவசக்தியுடன் வேலை செய்யும் அரசியல் ஸ்தாபனம். கிராம காங்கிரஸ் கமிட்டிவரையில், இங்கு பரிபூர்ண ஜனநாயகம் இருக்கிறது. ஆனால், காங்கிரஸ் என்ன சொன்ன போதிலும், மகாத்மா காந்தி சொல்வதை மீறி யாராவது நடக்கத் துணிவார்களா? ஒருகாலும் இல்லை. தனிப்பட்ட நபர்களை விட ஸ்தாபனம் பெரிது என்ற கொள்கையை எழுத்தில் பார்க்கும் போது லக்ஷணமாய்த்தானிருக்கிறது. ஆனால், தனிப்பட்ட நபர்கள் பலர் சேர்ந்துதான் ஒரு ஸ்தாபனத்திற்கு உயிர் கொடுக்க முடியும். தனிப்பட்டவர்களின் மேதைதான் ஸ்தாபனத்திற்கு உயிரளிக்கும் ஊற்று. வெறும் மரக் கட்டைகள் போன்ற மனிதப் பிராணிகளைக் கூட்டம் கூட்டிவைத்துக் கையைத் தூக்கச் சொன்னாலும், எதற்குக் கை தூக்க வேண்டும் என்று வழிகாட்டுவதற்கு ஒருவன் இருந்துதானாக வேண்டும். ஒரு ஸ்தாபனத்திலுள்ள எல்லோருமே மேதைகளா யிருக்க முடியாது. ஓரிருவர்தான் அப்படி இருக்க முடியும். அவர் சொற்படிதான் நாம் நடக்க வேண்டும். "நாம் என்ன ஆடுகளா?" என்று கேட்கலாம். ஆம், ஆடுகள்தான். ஆயன் காட்டும் பாதையில் தான் போகவேண்டும். இல்லாவிட்டால் அசாதாரண நிலைமையில் நாம் வெற்றி பெற முடியாது. அசாதாரண நிலைமையைச் சமாளிக்கவே அத்தகைய தலைவன் தேவையாகிறான். சந்தர்ப்பங்கள் அவனை முன்னுக்குக் கொண்டு வந்தவுடன் எல்லோரும் அவனை ஏற்றுக்கொண்டுவிடுகிறார்கள். அதிகச் சாமர்த்தியம் உடையவர்களும், கட்டுப்பாடு உடையாம லிருப்பதற்காக, அவன் ஆணைக்கு அப்படியே கீழ்ப்படிகிறார்கள்.

ஜனநாயகத்தில் மாத்திரம் சர்வாதிகாரம் இல்லையா? இருக்கிறது. ஆனால், மனிதனின் 'நான்' என்ற உணர்ச்சி

யைத் திருப்திப்படுத்தும் வோட்டுகள், மெஜாரிடி போன்ற சில அம்சங்கள் அதில் இருப்பதால், அதன் சர்வாதிகாரத் தன்மை அவ்வளவாகப் புலப்படுவதில்லை. சர்வாதிகார அமைப்பில் ஒருவனே சகல அதிகாரங்களையும் பிரயோகிக்கிறான். ஜனநாயக அமைப்பில், பலர் பெயரைச் சொல்லி, சிலர் அந்த எல்லா அதிகாரங்களையும் பிரயோகிக்கிறார்கள். எத்தனை பேர்கள் அதிகாரத்தைப் பிரயோகிக்கிறார்கள் என்று அளவில் வித்தியாசமேயொழிய, முறையில் வேறுபாடில்லை. ஜெர்மனியை மீண்டும் ஒரு தேசமாக்கவேண்டுமென்று சங்கற்பம் செய்துகொண்டுள்ள ஒருவன், ஜனநாயகம் என்ற தத்துவ மாயையுடன் சூதாடவேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயமன்று. ஏனெனில் ஜெர்மனி சாதாரண நிலையிலில்லை. யுத்தத்திற்குப் பின் அது ரத்தம் வற்றிச் சோகை பிடித்துப் போகும்படி நிர்ப்பந்தத்தினால் அமிழ்த்திவைக்கப்பட்டது. ஆயினும் ஜெர்மனியின் ஜீவ சக்தி ஐந்து வருஷம் பத்து வருஷத்தில் அழிந்துபோகக் கூடியதில்லை. அத்துடன் ஜெர்மனியர் சீனர்களைப் போல் தூங்கு மூஞ்சிகள் அல்லர். அவர்கள் தங்கள் பழைய ஏகாதிபத்தியப் பெருமைகளை எளிதில் மறப்பவர்களல்லர். "ஆஸ்திரிய ஏகாதிபத்தியம் என்றுமுள்ளது, வல்லமை மிக்கது" என்ற பெருமை அவர்கள் ரத்தத்தில் ஊறிப் போன விஷயம்.

அரசியல் எதிரிகளை ஹிட்லர் நடத்தும் முறையைக் கண்டு அவன் மீது நாம் வெறுப்படைவது இயற்கையே. ஆனால், அது ஜீவகாருண்ய உணர்ச்சி. வண்டிக்காரன் மாட்டை யடித்தால்கூட நம் மனத்திற்குக் கஷ்டமாகிறது. ஜீவப் பிராணி வதைக்கப்பட்டால், அதைக் கண்டு சஞ்சலமடைவது மனித இயற்கை. ஹிட்லர் எதிரிகளைக் கொடு

மைப் படுத்துகிறுனே என்ற நமது ஜீவகாருண்ய உணர்ச்சியை அரசியலுடன் சம்பந்தப்படுத்துவது சரியன்று.

ஹிட்லரை ஒரு கொடுங்கோலனுக வெளியுலகத்தாருக்குப் படம் எழுதிக் காட்டுவது சாம்ராஜ்ய நாடுகளின் ஏகாதிபத்ய நலன்களுக்கு ஏற்றதா யிருக்கலாம். ஆனல், ஒரு தேசம் முழுவதையும், ஒரு மனிதன் அடக்கிவைத்திருக்கிருனென்று சொன்னல், அந்தத் தேசத்தினரின் சம்மதம் இல்லாமலா அப்படி நடக்கிறது? முதுகெலும் பில்லாத நிர்வாகத்தை ஜனங்கள் ஆதரிக்க மாட்டார்கள். உறுதியும், திடசித்தமு முள்ள நிர்வாக முறைதான் பாமர மக்களுக்குக் கவர்ச்சியை அளிக்கும். ஜெர்மன் மக்களே ஹிட்லர் அடக்கி வைக்கவில்லை. ஹிட்லர் யுக-புருஷன். ஜெர்மனிக்கு அவன் வேண்டும். 1918–க்குப் பிறகு 'வேமர் குடியரசு' என்று ஜெர்மனியில் ஒரு ஜனநாயக சர்க்காரின் நாடகம் நடந்தது. அந்த சர்க்கார் காலத்தில் ஜெர்மனிக்கு வெளி நாடுகளில் அவமானந்தான் அதிகமாய்க் கிடைத்துக்கொண்டு வந்தது. ஒரு சர்க்காருக்கு வெளி நாடுகளில் கிடைக்கும் மதிப்பைப் பொறுத்துத்தான் அதனுடைய உள்நாட்டு மதிப்பு இருக்கிறது. வெளி நாட்டினரால் துச்சமாக மதிக்கப்பட்ட ஜெர்மன் ஜனநாயக சர்க்காரிடம் ஜனங்களுக்கு எப்படி மதிப்பு இருக்கும்? அது நோய் கண்டு இயற்கையாக இறந்ததில் ஆச்சரியமே இல்லை. பிரான்ஸும், பிரிட்டனும் வேண்டிய அளவுக்கு மேல் சாப்பிட்டு விட்டன. பாலியத்தின் 'மைனர்' விளையாட்டு வினையாய்விட்ட தாகையால், இப்போது அந்திக் காலத்தில் அவை தர்மோபதேசம் செய்கின்றன. இந்த ஜனநாயக நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை அடிக்கடி மாறுகின்றதே யென்ருல், அது ஜனநாயகத்திலுள்ள இயற்கையான அம்சம். ஜன நாயகத்

தில் தொடர்ச்சியான ஒரு கொள்கை இருக்க முடியாது. சர்வாதிகாரியின் அன்றன்றைய மனோபாவங்களின்படி சர்வாதிகார நாடுகளில் காரியங்கள் செய்யப்படுகின்றன வென்றால், ஜனநாயகத்திலும் அப்படித்தான். அந்தந் தக் காலத்தில் ஆதிக்கத்துக்கு வருபவர்களின் விருப்பு வெறுப்புக்களுக்குத் தகுந்தாற்போல், ஜனநாயக முறையில் கொள்கைகள் நிர்ணயிக்கப் படுகின்றன. ஆனால் சர்வாதி காரிகளிடம் ஒரு விசேஷம் இருக்கிறது. ஒரு காரியத்தைச் சாதிக்கவேண்டு மென்று அவர்கள் தீர்மானித்தால், கடைசி வரையில் அதை விடுவதில்லை. ஜெர்மனியை மீண் டும் ஒரு பெரிய வல்லரசாக்கவேண்டுமென்பது ஹிட்லரின் கனவு. அதைத் திருஷ்டியில் வைத்துக்கொண்டுதான் ஹிட்லர் தன் வெளிநாட்டுக் கொள்கையை நிர்ணயிக்கிறான்.

ஜெர்மனியில் தனிப்பட்டவர்களின் பிரஜா சுதந்தரம் அடியோடு மறுக்கப்படுகிறதே! அங்கு ஒரே கப்சிப் தர் பாரா யிருக்கிறதே! இது உண்மைதான். ஆனால், சுதந் தரம், உரிமை என்பவைகளுக்கு ஒரு கோடு கிழித்து எல்லை கட்ட முடியாது. அவை அந்தந்த நாட்டிலுள்ளவர் களின் வியாக்யானத்தைப் பொறுத்திருக்கின்றன. ஆள் வோர், ஆளப்படுவோர் என்ற பிரிவு இருக்கும் இடத்தில் தான் இந்தப் பிரஜா உரிமைக்கு அர்த்தமுண்டு. அதாவது ஆள்பவரின் நோக்கம், ஆளப்படுவோரின் நலன்களுக்கு விரோதமா யிருக்கும் சந்தர்ப்பத்தில்தான், ஆளப்படுவோ ரின் அபிப்பிராயம் என்ற பிரஜா சுதந்தரம் ஏற்படுகிறது. ஜெர்மனியை ஆள்பவனான ஹிட்லரின் கொள்கை, ஜெர் மன் மக்களின் நலன்களுக்கு விரோதமானதா? யுத்தத்திற் குப் பிறகு ஜெர்மனியர்களுக்கு என்ன நலன்கள் இருந் தன? ஜெயித்த நாடுகளின் தயவை எதிர்பார்த்து, அவைக்

ளின் காலைக் கழுவி ஜீவிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு என்ன இருந்தது? இன்று ஹிட்லருடைய ஜெர்மனியின் நிலைமை என்ன? ஜெர்மன் மக்களின் தேசீய கௌரவம் உயரும் வகையில் அவன் காரியங்கள் செய்திருக்கிறுன் என்பதை யாராவது மறுக்கிறுர்களா? மக்களின் நலன்களுக்கு விரோதமாக அவன் நடந்துகொள்ளவில்லையென்பது ஒப்புக் கொள்ளப்பட்டால், ஹிட்லர் ஆட்சியை ஏன் குறை கூறவேண்டும்? சர்க்காரைக் கண்டிக்கும் ஜனநாயக உரிமை மக்களுக்குக் கொடுக்கப்படவில்லையே என்று எதற்காகக் கேட்கவேண்டும்? மகத்தான காரியத்தில் ஒருவன் ஈடுபட்டிருக்கும் போது, சர்வதேச அரங்கத்தில் ஜெர்மன் கௌரவத்தை நிலைநாட்டும் வேலையில் ஈடுபட்டிருக்கும் போது, நடுவில் குண்டூசியை எடுத்துக் குத்தும் உரிமைகள் வேண்டுமா? அது ஒருகாலும் நடக்காத காரியம். யுத்த காலத்தில் பிரிட்டனில் என்ன பிரஜா உரிமைகள் இருந்தன? பத்திரிகைச் சுதந்தரம் என்ன இருந்தது? தேசமே யுத்தத்தில் நடுபட்டிருந்த போது, அந்தக் கட்டுப்பாடுகள் இருக்கவேண்டியதுதா னென்று சொல்லக்கூடும். அப்படியானுல், இன்னும் ஜெர்மனி யுத்த நிலைமையிலேயே தான் இருக்கிறது. துப்பாக்கியையும், பீரங்கியையும் காட்டி, ஜெர்மனியிடமிருந்து இதர நாடுகள் பிடுங்கிக் கொண்ட பிரதேசங்கள் பூராவும் திரும்பி வரும் வரையில், ஜெர்மனி யுத்த நிலைமையில் இருப்பதாகத்தான் அர்த்தம். அதுவரையில் காலம் கடத்தும் இயந்திரமாகிய ஜனநாயகத்தை அங்கு எதிர்பார்ப்பது அசட்டுத்தனம். பாலும், தேனும் வழிந்தோடுவதாகச் சித்திரிக்கப்படும் ருஷியாவில் இன்று என்ன ஜனநாயகம் இருக்கிறது? 1917-ம் வருஷத்திய அக்டோபர் புரட்சிக்குத் தூண்கள் போல்

இருந்த பல பொது உடைமைத் தலைவர்கள் ஏன் பீரங்கி வாய்க்கு இரையானார்கள்? ருஷியப் புரட்சிக் கோஷ்டியின் மேதையென்று புகழப்பட்ட **டிராட்ஸ்கி** இன்று அனாதை யாக உலகமெங்கும் சுற்றித் திரிவதற்குக் காரணமென்ன? அதிகாரத்தைக் கைப்பற்றிய **ஸ்டாலின்** அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, அவர்களுக்கு இந்தக் கதி நேர்ந்தது. ஸ்டாலின் தன் கொள்கையை நிறைவேற்ற விரும்பினால், இவர்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டிருப்பது அபாயம். ஹிட்லர் நிலைமையும் அதேதான். "மாயை இல்லாத கண்களுடன் ருஷியக் காக்ஷி" என்று **பாட் ஸ்லோயன்** என்பவர் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். "ருஷியாவில் ஜனநாயகமே இல்லையாமே! அபிப்பிராய பேதங்களுக்கு அங்கு இடம் கொடுப்பதில்லையாமே?" என்பன போன்ற கேள்விகளுக்கு அவர் என்ன பதில் சொல்லுகிறார் தெரியுமா? ஜெர்மனியில் நாஜிப் பிரசாரத்தைத் தவிர வேறு பிரசாரம் அனுமதிக்கப்படுகிறதா? சர்க்கார் ஒரு புது சமூகத்தைச் சிருஷ்டிக்க விரும்புகிறது. ஆகவே, அதற் கேற்றாற்போல் எல்லாம் தயார் செய்யப்படுகின்றது என்று அவர் எழுதியிருக்கிறார். இதையே ஜெர்மனி விஷயத்திலும் திருப்பி வாசிக்கலாமல்லவா?

•

ஜனநாயகம் என்ற வார்த்தையை அளவுக்கு மீறி வற்புறுத்தி, அதற்கு மதிப்பில்லாமல் செய்து வருகிறோம். நாய் ஒரு புறம், நரி ஒரு புறமாகப் பிடுங்கித் தின்றுகொண்டிருந்த இத்தாலியை ஒன்று சேர்த்தது ஜனநாயகமல்ல; முஸொலீனியின் சர்வாதிகாரந்தான். பாட்டாளி மக்களின் பரிபூர்ண ஆதிக்கம் நடைபெறும் ருஷியாவில் நடப்பது ஜனநாயகமல்ல; ஸ்டாலினின் சர்வாதிகாரந்தான். மகா யுத்தத்தில் ஜெர்மனியுடன் சேர்ந்து தோல்வியடைந்து,

அவமானப்பட்ட துருக்கி இன்று இவ்வளவு உன்னத ஸ்திதிக்கு வந்தது ஜனநாயகத்தா லல்ல ; கமால் பாஷாவின் சர்வாதிகாரத்தினுல்தான். ஜனநாயகம் வேண்டுமா, சர்வாதிகாரம் வேண்டுமா என்பது இப்போது நம் பிரச்னையல்ல. ஜெர்மனிக்கு எந்த ஆட்சிமுறை இப்பொழுது உகந்தது என்பதுதான் கேள்வி. ஜெர்மனி தன் இழந்த கௌரவத்தைப் பெறும் வரையில் அங்கு சர்வாதிகாரந்தான் இருக்க முடியும். யுத்தத்துக்குக் காரணம் ஜெர்மனிதான் என்ற பழிச்சொல் போகும் வரையில் அங்கு ஜனநாயகம் இருக்க முடியாது. அது இயற்கை விதிகளுக்கு விரோதம். ஜனநாயக நாடுகளிடம் யோக்யதா பத்திரம் வாங்குவதற்காக ஜெர்மனியில் ஜனநாயகம் இருக்கவேண்டுமென்று யாராவது எதிர்பார்க்க முடியுமா? ஜெர்மனியர்கள் இயற்கையிலேயே ஏகாதிபத்யக்காரர்கள். ஜெர்மன் சாம்ராஜ்யமே அவர்களுடைய கனவு. சாம்ராஜ்ய ஆசை தவறு என்று பிரிட்டனே, பிரான்ஸோ சொல்ல முடியாது. ஏனெனில், இந்த வித்தையில் அவர்கள் பழம் பெருச்சாளிகள். ஆடிப் பாடி அனுத்துப்போனவர்கள். இன்று அவர்கள் தர்மோபதேசம் செய்தால் யாரும் மதிப்பு வைக்கமாட்டார்கள். இந்தியர்களாகிய நமக்கும் அதைக் கண்டிக்கும் உரிமை இல்லை. நமக்கு சாம்ராஜ்ய ஆசை இல்லை என்று சொன்னுல் ஊரார் சிரிப்பார்கள். நம் வீடு நமக்குச் சொந்தமான பிறகல்லவா அந்தப் பேச்சு எழ முடியும். அதற்குமுன் நமக்கும் சாம்ராஜ்ய ஆசை கிடையாது என்று நாம் சொல்லுவது, நம்முடைய கதியற்ற தன்மையை அழகிய வார்த்தைகளைப் போட்டு மறைப்பது போல்தான். ஜெர்மனி ஆஸ்திரியாவைக் கேட்டதில் என்ன தவறு? ஸுடேடன் பிரதேசத்தைக் கேட்டதில் என்ன தவறு? பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டுவிட்டது. இலங்கை பிரிட்டிஷ்

மன்னரின் சொந்தக் காலனியாயிருக்கிறது. இருந்தாலும், அவைகளும் இந்தியாவைச் சேர்ந்தவை என்று நாம் சொல்லாமலிருக்கிறோமா?

ஹிட்லர் செய்யும் காரியங்களைச் சீர்தூக்கிப் பார்த்து அபிப்பிராயம் சொல்வதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால், ஹிட்லர் என்ற பெயரைக் கேட்டவுடனேயே, ஏதோ பேய், பிசாசு வந்துவிட்டதுபோல், காதைப் பொத்திக்கொள்ளும் ஜனநாயக வேஷம் போகவேண்டுமென்றுதான் நாம் வற்புறுத்துகிறோம். ஹிட்லர் தன் நாட்டின் கௌரவத்தைப் பிரமாதமாக உயர்த்தியிருக்கிறான். அளவுக்கு மீறி ஊரான் சோற்றைத் தின்று அஜீர்ணத்தால் கஷ்டப்படும் பிரிட்டனின் ஜனநாயகக் கொள்கைகளின்படி ஹிட்லர் கொடுங்கோலனாயிருக்கலாம். ஆனால், 'ஜெர்மனியன்' என்ற வார்த்தைக்கு மதிப்பு ஏற்படும்படி செய்த ஹிட்லருக்கு ஜெர்மனி என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது.

ஹிட்லர் பைத்தியக்காரனல்லன், வெறும் சொப்பனம் காண்பவனல்லன். வறுமையிலும், பட்டினியிலும் உழன்று கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் ஹிட்லர் சில வாழ்க்கை நியதிகளை நிர்ணயித்துக் கொண்டான். அவற்றையே இப்பொழுதும் பின்பற்றுகிறான்.

ஹிட்லரின் சிறந்த நண்பரான **ஹெர் ஹெஸ்** என்பவர் ஒரு வீடு கட்டினார். ஹிட்லர் அதைப் பார்க்கப் போயிருந்தான். "இம்மாதிரியான ஒரு வீட்டில் நிம்மதியாக இருந்து அந்திமக் காலத்தைக் கழிக்கவேண்டுமென்பதே என் ஆசை" என்று ஹெஸ் சொன்னார். "நம்முடைய சாவு இங்கேயா? இல்லை, அது வேறு இடத்தில்!" என்று ஹிட்லர் பதிலளித்தான்.

1937 பிப்ரவரியில் நாஜி ராணுவ வீரர்கள் பெர்ஷடஸ்ச் காடனிலுள்ள ஹிட்லரின் வீட்டுக்கு வந்திருந்தார்கள். பாரிஸ் கண்காக்ஷியில் வைக்கப்பட்டிருந்த பொருள்களின் மேன்மையைப் பற்றி ஹிட்லர் பிரெஞ்சுக்காரர்களைப் பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தான். ஆனால், தான் அதை நேரில் பார்க்க முடியாமற் போனதற்கு வருந்தினான்.

“என், நீங்கள் வரக் கூடாதா? உங்களைப் பாரிஸில் பார்க்க பிரெஞ்சுக்காரர்கள் ரொம்ப சந்தோஷப் படுவார்களே!” என்று ஒரு பிரெஞ்சுக்காரர் சொன்னார்.

சற்று துக்கம் கலந்த முகத்துடன் ஹிட்லர், புன்னகை செய்து கொண்டே, “இல்லை. நான் அரசியலிலிருந்து விலகினால்தான் என்னைப் பார்க்க அவர்களுக்குச் சந்தோஷமாயிருக்கும். அதுவரையி லில்லை!” என்று சொன்னான்.

இந்த ஹிட்லர் வெறிபிடித்த பைத்தியக்காரனாயிருக்க முடியுமா? ஆனால் உள் நாட்டில் கப்சிப் தர்பார் நடத்துகிறானே! எதிரிகள் அவனைக் கோழை என்றால், நாஜிகள் அவனை வீரர் திலகம் என்று துதிக்கிறார்களே! அவன் சாதித்துள்ள காரியங்கள் சாமானிய மல்லவே! இதனால் தான் இந்நூலின் ஆரம்பத்தில் ஹெர் அடால்ப் ஹிட்லர் ஒரு புதிர் என்று சொல்லப்பட்டது. இந்த இருபதாம் நூற்றாண்டின் புதிர்களில் இது மகா விசேஷமான ஒரு புதிர் தான்!

A.4748.

Shakti Press Ltd., (Shanti Press), Madras.